
சிறுவர் நகரம்



எட்டு 8 அணா

சிறுவர் நகரின் பிதா

ஆசிரியர்கள் :
புல்டன் அவுர்ஸ்லர்,
வில் அவுர்ஸ்லர்

மொழிபெயர்ப்பு :
பா. லோகநாதன்

PRINTED AND PUBLISHED BY
KUBERA PRINTERS LTD.
"KUBERA BUILDINGS"
21, SUNKURAMA CHETTY STREET
MADRAS-1 (INDIA)

அத்தியாயம் 1

இந்நூற்ருண்டின் முற்பகுதியிலே அமெரிக்காவில் லட்சக்கணக்கான மக்களின் அன்பைப் பெற்ற மதகுரு எட்வர்ட் ஜோஸப் பிளானகன் என்பவர். அவர் ரோமன் கத்தோலிக்க மதகுரு. ஆனால் அவரைப் போற்றியவர்கள் எல்லோரும் அவருடைய மதத்தினர் அல்ல. அவரது மதத்தினரைப் போலவே யூதர்களும் புராட்டஸ்டன்டுகளும் அவருடைய பணியில் ஈடுபட்டு உதவி செய்தனர்.

அதிர்ஷ்டமற்ற சிறுவர்களைப் பராமரித்து அவர்களுக்குக் கல்வி புகட்டுவதே அப்பணியாகும். அச்சிறுவர்கள் எல்லோரும், பலர் நினைப்பதுபோல, குற்றவாளிகள் அல்ல. பார்க்கப்போனால், சிறுவர் நகரில் வசித்து, வாசித்து வந்தவர்களில் பாலிய குற்றவாளிகள் எக்காலத்திலுமே நூற்றுக்கு இருபது பேருக்குமேல் இருந்ததில்லை. முக்கியமாக அந்நகர் வீடில்லாதவர்க்கு வீடாகும்; தாய்தந்தையரில்லாதவர்க்குக் குடும்பமாகவும் விளங்கியது.

நெப்ராஸ்கா என்ற ராஜ்யத்தில் ஓமாஹா நகரத்திற்குப் பத்துமைல் மேற்கே சங். பிளானகன் அநாதைச் சிறுவர்களுக்காக நிர்மாணித்த நகரில் நிறபேதமோ மதபேதமோ கிடையாது. சீனச் சிறுவர்களும் நீக்ரோச் சிறுவர்களும் அதன் வயல்களை உழுகிருர்கள், கடைகளில் வேலை செய்கிருர்கள், கிறிஸ்தவர்களுடனும் யூதர்களுடனும் தோழர்களாகப் பள்ளியறையில் உட்கார்ந்து பழகுகிருர்கள்.

போலீஸாரிடமிருந்து வரும் பாலிய குற்றவாளிகளையும் மற்ற சிறுவர்களிடமிருந்து பிரித்துவைப்பதில்லை. வித்தியாசம் ஏதும் இல்லை. ஏனெனில் கோர்ட்டுகளிலிருந்து வரும் சிறுவர்களும், வியக்கும்படி வெகு சீக்கிரமே நல்ல பிரஜைகளாக மாறிவிடுகிருர்கள். தேவைகளைத் தானே பூர்த்தி செய்துகொள்ளும் இக்கிராமத்தைச் சுற்றி வேலிகள்

இல்லை. கதவுகளோ, பூட்டுகளோ கிடையாது. எனினும், அச்சிறுவர்கள் அவ்விடத்தைவிட்டு ஓடிவிடமாட்டார்கள்.

கடுமையான கட்டுப்பாட்டுக்குப் பணிந்து அவர்கள் அங்கேயே இருக்கத் தயாராயிருக்கிறார்கள். மற்ற பிள்ளைகளைப் போலவே அவர்களும் பாடங்களைக் கற்றுக்கொள்ளுகிறார்கள், பயிர்த்தொழிலில் தேர்ச்சி பெறுகிறார்கள். மற்றவர்களுடன் சகஜமாகப் பழக, நேர்மையாக நடந்து கொள்ள ஒவ்வொருவருக்கும் தனிப்பட்டமுறையில் பயிற்சி அளிக்கப்படுகிறது.

அப்பண்ணையை வாங்கும்போது சங். பிளானகனுக்கு இருந்த அடிப்படையான நோக்கம் இதுதான்: அது நன்னடத்தை போதிக்கும் இடமாக இருக்கவேண்டும். அநாதைச் சிறுவர்கள் மட்டுமின்றி பாலிப குற்றவாளிகள் விஷயத்திலும் இம் முயற்சியில் அவர் வெற்றியடைந்தார் என்றால், அப்பிள்ளைகளுக்கு அவர் அளித்த நற்போதனையின் மேன்மை விளங்கும். இளைஞர்கள் செய்யும் குற்றங்களின் எண்ணிக்கை பயங்கரமாக அதிகரித்துவந்த காலத்தில், மகா போக்கிரிகளான சிறுவர்களையும் சமூக வாழ்க்கைக்குகந்த இளைஞர்களாக மாற்றிய இம்மதகுருவின் சக்தி இருள்வானில் தோன்றும் ஒளி பிம்பம்போல் பிரகாசித்தது.

பிழை கண்டுபிடிப்பவர்களைவிட வழிகாட்டிகளே சிறுவர்களுக்குத் தேவை என்றார் அவர். மகா போக்கிரித்தனமான இளைஞர்களும் இயல்பாகவே ஒழுக்கமானவர்கள் என அவர் நம்பினார். அவர்களுடைய புத்திக் கூர்மைக்கும், பகுத்தறிவுக்கும் மதிப்புக் கொடுத்தார். போலி எது, உண்மை எது என்று சிறுவர்கள் எளிதில் உணர்வார்கள் என்று அவர் கண்டார்.

ஆகவே, சில சீர்திருத்தவாதிகள் இக்காலத்துக் குழந்தைகளைக் கண்டிப்பதில் முனைந்திருந்தபோது, எளிய மதகுருவான சங். பிளானகன் அன்பைப்பற்றிப் பேசினார்.

"அநாதைக் குழந்தைக்கு நல்ல உணவும், சுத்தமான உடையும், சுகமான படுக்கையும் கொடுத்தால் மட்டும் போதாது. அதை ஒரு சேனை அதிகாரிகூடச் செய்ய முடியும். அநாதைக் குழந்தைகளுக்குக் கிட்டாதவை உணவும் உடையும் தங்கும் இடமும் மட்டுமல்ல. அவற்றை விட முக்கியமானவை தாயின் பரிவு, தந்தையின் பராமரிப்பு, குடும்பத்தின் அன்பு. சிறுவர்களின் வாழ்க்கையில் ஏற்படும் இந்நஷ்டத்திற்கு ஈடு செய்யாதவரையில், நம் அநாதை ஆசிரமங்களும் சீர்திருத்தப் பள்ளிகளும் ஒன்றும் சாதித்து விடமுடியாது.

"இதன் அர்த்தமென்ன? புதுமாதிரியான சமூக ஊழியர்கள் அவசியம் என்பதுதான் இதன் அர்த்தம். ஊழியர்களுக்குத் தங்கள் பணியைப்பற்றிச் சிறந்த பயிற்சி இருந்தால் மட்டும் போதாது. அதைவிட முக்கியமாக, திக்கற்ற குழந்தைகளின் வாழ்க்கையில் தாயின் பரிவும் கவனமும் செலுத்தக்கூடிய ஆற்றல் அவர்களுக்கு இருக்கவேண்டும்."

பிளானகன் உயிருடன் இருந்த கடைசி நாள்வரை அவரே நடந்துகொண்டுவந்த விதத்தை அவரது வாக்கு விளக்குகிறது. பிறரிடம் எப்படி அன்பு காட்டுவது என்று அவருக்குத் தெரியும். அதுவே அவரைப்பற்றிய முக்கிய விஷயம். அதனால்தான் வெவ்வேறு விதமான மக்களும் அவரைப் போற்றினர். அன்பைக் கைநிறைந்த காணிக்கையாக அவர் அளித்தார். அது எத்தகைய மனத்தையும் மாற்றும் தோல்வியறியாத சக்தியாக விளங்கியது. அச் சக்தியை எப்படிப் பிரயோகிப்பது என்பதிலும் அவர் நிபுணராக இருந்தார்.

அத்தகைய அன்புப்பணியில் அவர் உபயோகித்த "கருவிகள்" பல வகைப்பட்டவை. மிட்டாயிலிருந்து மனோதத்துவ ஆராய்ச்சிவரை எதுவும் அவருக்குச் சாதகமாக விளங்கியது. ஆண்டவனின் அருளுக்கு எப்போதும்

பிரார்த்தித்து இவ்வழிகளைக் கையாண்டதாலேயே தமக்குப் பலன் கிடைத்ததாக அவர் வற்புறுத்திக் கூறுவார்.

தம்மைப்போல் சங். பிளானகன் பிறரையும் நேசித்தார் என்பதுமட்டுமல்ல. நல் வாழ்வுக்கு அக்கிறிஸ்தவ போதனை ஒன்று மட்டுமே போதும் என்று பொருள்படும்படி பகுத்தறிவுக் கட்சியினர் அடிக்கடி பேசுகிறார்கள். ஆனால் அப்போதனை முழுவதையும் அவர்கள் சரியாகச் சொல்லுவதில்லை என்று அவர் எப்போதும் சுட்டிகாட்டுவார்.

அவரது நீலக் கண்கள் மின்ன, தெளிந்த குரலில் அவர் முழுச் செய்யுளையும் கூறுவார்:

"உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்மாவோடும், உன் முழு ஆற்றலோடும், உன் முழுச் சிந்தையோடும் அன்புகூர்ந்து,......... உன்னிடத்தில் அன்பு கூறுவதுபோலப் பிறனிடத்திலும் அன்பு கூறுவாயாக........."

"கிறிஸ்டியன் ஹெறரால்ட்" என்ற பத்திரிகையின் ஆசிரியரான புராட்டஸ்டன்ட் மதகுரு, டாக்டர் டேனியல் போலிங். அவரைப்பற்றிப் பின்வருமாறு எழுதினார்:

"சிறுவர் நகரின் சங். பிளானகன் தமது மகுடாபிஷேகத்துக்குச் சென்றுவிட்டார். அவர் இப்போது அமரர். உண்மையில் அவருடைய அமரத்துவம் முன்பே ஆரம்பித்துவிட்டது. 'கெட்ட பையன்' என்று ஒருவன் இல்லை என்று சொன்ன போதே அவருக்கு அமரத்துவம் கிடைத்துவிட்டது."

மற்றொரு புராட்டஸ்டன் மதகுரு, டாக்டர் தாமஸ் ஆர். நிவென், சங். பிளானகன் அருட்பணியைச் சமீபத்திலிருந்து கவனித்து வந்தவர்.

"ஒரு மகோன்னதமான கிறிஸ்வதர் நம்மிடையே இருந்துவந்தார்," என்று அவர் எழுதினார். "கடந்த ஐம்பது

ஆண்டுகளில் அமெரிக்க வாழ்க்கையில் இந்த ரோமன் கத்தோலிக்க மதகுருவைவிட உன்னதமானவர் என்று சொல்லக்கூடிய கிறிஸ்தவரோ, தர்ம சாஸ்திரியோ, சமூக ஊழியரோ இருந்ததில்லை. புராட்டஸ்டன்ட் பாதிரிகளின் பிரதிநிதியென்ற ஹோதாவில், நான் இதைச் சொல்லும் போது என்னுடைய சக ஊழியர்கள் எல்லோருடைய அபிப் பிராயத்தையும்கூட வெளியிடுகிறேன் என்று எனக்குத் தெரியும். கிறிஸ்துவின் வாழ்க்கையின் படிப்பினையை ஒரு பெரிய மனிதர் வியாக்கியானம் செய்த இடம் என்று உலகம் பல்லாண்டுகள்வரைச் சிறுவர் நகரைப் போற்றும்.''

லாஸ் ஏஞ்சல்ஸ் நகரைச் சேர்ந்த ராபி எட்கர் எப். மாக்னின் யூதர்கள் சார்பில் பேசினர். அவர் கூறியதாவது:

"கிழிந்த ஆடையணிந்து வடுவுள்ள முகத்தோடு வரும் சிறுவர்களை வரவேற்க, ஆப்பிரஹாமைப் போல, சங். பிளானகன் தம் கூடார வாசலில் உட்கார்ந்திருந்தார். அவர்களைக் கைநீட்டி அழைத்து, மார்புடன் தழுவிக் கொண்டார். சிலர் கறுப்பாக இருந்தனர். யூதர்கள் இருந்தார்கள். கத்தோலிக்கர்கள், பல திறப்பட்ட புராட்டஸ்டன்ட்டுகள் இருந்தார்கள். எம் மதத்தையும் பின் பற்ருதவர்களும் இருந்தார்கள். கடவுளை அறியாதவர்களும் இருந்தார்கள். அவர்கள் சங். பிளானகனைச் சந்திக்கும் வரை, கடவுள் ஒருவர் இருக்கிருர் என்ற உண்மையை அவர்களுக்கு யாரும் போதிக்கவில்லை."

நீக்ரோக்களின் சார்பில், லாஸ் ஏஞ்சல்ஸ் "ஸென்டினல்" என்ற பத்திரிகை தன் தலையங்கத்தில் எழுதியது:

"எல்லா இளைஞர்களுக்கும் அவருடைய சிறுவர் நகர் புகலிடமாக விளங்குகிறது. நிர்க்கதியான நீக்ரோவுக்கும் நிர்க்கதியற்ற கத்தோலிக்கனைப் போலவே உற்சாகமான வரவேற்பு அங்கே கிடைக்கிறது."

அத்தியாயம் 2

நாட்டுப்புற வாழ்க்கையிலடிப்பட்ட பிளானகன் குடும்பத்திலேயே எட்வர்ட்தான் பலஹீனமானவர். திடகாத்திர மனிதராவதற்குச் சிறிதும் லாயக்கற்றவராக 1836-ம் ஆண்டு ஜூலை மாதம் 13-ந் தேதி செவ்வாய்க் கிழமையன்று அவர் அயர்லந்தில் பிறந்தார். அதாவது, புதிதாக வருவோருக்கு ஜோதியாக விளங்கும் சுதந்திரச் சிலை அமெரிக்காவில் திறக்கப்படுவதற்குச் சில மாதங்கள் முன்பு அவர் ஜனித்தார். எட்வர்ட் ஜோஸப் என்று ஞானஸ்நானம் பெற்ற அக் குழந்தை, வளர்ந்து, அச் சுதந்திர ஜோதியைக் காணக் கொடுத்து வைக்குமா என்பது சந்தேகமாயிருந்தது.

பிறந்த சில வாரங்களுக்குள், எட்டிக்கு (எட்வர்டின் செல்லப் பெயர்) ஓர் இழுப்பு வந்தது. சிறு குழந்தையின் தேகம் நீல நிறமுற்றது. பிற்காலத்தில் சிறுவர் நகர் சேவையில் மும்முரமாக ஈடுபட்டிருந்த எட்டியின் சகோதரி அவருடைய வியாதியைப் பற்றி பிரஸ்தாபித்த போது பிரார்த்தனையே தமது தம்பியைத் தெய்வாதீனமாகக் காப்பாற்றியது என்ற, தமது திடமான அபிப்பிராயத்தை தெரிவித்தார்.

அந் நாளிலிருந்தே, எட்டி ஓர் அலாதியான ஆத்மா எனத் தோன்ற ஆரம்பித்தது. அவருடைய குழந்தைப் பருவத்தைப் பற்றிக் குறிப்பிடத்தக்க சம்பவம் எதுவுமில்லையென்றாலும், ஆத்மீக அம்சம் நிறைந்ததாயிருந்தது. மௌனமாக உட்கார்ந்து கொண்டு, அவர் எங்கோ தூரமாக எதையோ நோக்கிக் கொண்டிருப்பார். சிசுவாக இருந்த போது நோயிலிருந்து தப்பியதிலிருந்து எட்டி மற்றவர்களைப் போன்றவரல்ல; வேறு விதமானவர் என்பதை அவருடைய குடும்பத்தினர் உணர்ந்தார்கள்.

பிற்காலத்தில் சுறு சுறுப்புக்கும் சலியா உழைப்புக்கும் பெயர் வாங்கியவர். குழந்தையாயிருக்கும் போது யோசனையி

லாழ்ந்து, சதா துயரந் தோய்ந்த முகத்துடன வீற்றிருப்பார். அமைதி நிலவும் குளத்தருகே உட்கார்ந்து, வானை நோக்கிச் சிந்தனையில் ஆழ்ந்திருக்கும்போது, அவர் ஆனந்தமாயிருந் தார். இயற்கை அன்னையின் மடியிலே தவழ்ந்திருப்பதில் இன்பம் கண்ட எட்டி திறந்த வெளியையே எப்போதும் விரும்பினார். நிசப்தமான நிலைமையே அவருடைய மனதுக்கு ஆறுதல் அளித்தது.

அவர் மெலிந்து, நோஞ்சானுயிருந்ததால், நாலு வயதிலிருந்து, வயலில் எப்போதும் தம் தகப்பனார் பக்கத்திலேயே இருப்பார். லீபெக் என்ற பண்ணைக்கு எட்டியின் அப்பா மானேஜர். அங்கே தான் வெள்ளையடித்த பெரிய வீட்டில், எட்டியின் தாய் தந்தையர், சகோதரர்கள், பாட்டனார் அனைவரும் ஒன்ருக வசித்து வந்தனர்.

டிரிமா டாம்பிள் என்ற ஊரிலுள்ள பள்ளிக்குச் செல்ல ஆரம்பித்த பிறகுங்கூட, ஓய்வு நேரத்தை எட்டி தமது தகப்பனுரோடு வயலில் கழிப்பார். குடும்பத்தின் "புத்தகப் புழு" என்று எட்டியை மற்றவர்கள் அழைத்தார்கள். ஆடு மாடுகளை மேய்க்கும் போதும் அவருடைய கையில் டிக்கன்ஸ் அல்லது ஸ்காட் எழுதிய நாவலோ, மெக்காலேயின் புஸ்தகமோ இருக்கும்.

ஆமாம், மற்றப் பிள்ளைகளைப் போல் அவர் சிறு பிரயாத்தில் சண்டை சச்சரவுகளில் சம்பந்தப்பட்ட துண்டா? பாலிப குற்றவாளிகளின் மனோதத்துவத்தை எளிதில் புரிந்து கொள்ளும் ஆற்றல் படைத்த அவர் சிறு பையனுக இருக்கும் போது மூன்று குற்றங்களைத் தான் செய்திருக்கிருர் :

1. அண்டை வீட்டு ஆப்பிள் மரத்தின்மீது ஏறினார். ஆப்பிளைப் பறிப்பதற்குள் அகப்பட்டுக் கொண்டார். விஷயம் சீக்கிரமே தமையன் பாட்ரிக், அப்பா, அம்மா எல்லோருடைய காதுகளுக்கும் எட்டி விட்டது.

2. களஞ்சியத்துக்குப் பின் புறமாகச் சென்று ஒரு தரம் சுங்கானை வைத்துப் புகை குடித்தார். குற்றத்தை யாரும் கண்டு பிடிக்கவில்லை யென்றாலும், தண்டனை கிடைத்தது. மூன்று மணிநேரம் வயிற்றுக் கோளாறுல் அவஸ்தைப் பட்டார்.

3. ஒரு துன்மார்க்கனோடு சண்டை போட்டு, அவனை அடித்துத் துரத்தினார். அது ஒன்றுதான் அவர் வாழ்க்கையில் ஏற்பட்ட கைச்சண்டை. அதுவும் சந்தேகத்துக்கிடமின்றித் தற்காப்புக்காகக் கையாளப்பட்டதே.

சிறுவனாக அவர் செய்த விஷமங்கள் இவைதான். எனினும் அவருடைய வாழ்நாளில் மற்றெல்லோரையும்விட நன்றாகச் சிறுவர்களின் விஷமங்களைப் பற்றி அவர் அறிந்திருந்தார்.

பிளானகன் குடும்பத்தினர் தங்கள் நண்பர்கள் பலரைவிட அதிர்ஷ்டசாலிகள் என்பதை எட்டி சீக்கிரமே உணர்ந்தார். தமக்குத் தெரிந்த எல்லாச் சிறுவர்களுடைய வீடுகளிலும் தங்களுக்கிருப்பது போன்ற சமையலறைகள் இல்லை. வீடுகளுமே அவ்வளவு விசாலமானவையல்ல. அநேக வீடுகளில் சிமிட்டித் தரை கிடையாது. அண்டை வயல்களிலிருந்து கொண்டு வந்த கற்களைக் கொண்டுதான் தளம் போடப் பட்டிருந்தது. உள்நாட்டு வாழ்க்கைத் தரத்தைக் கொண்டு பார்த்தால் பிளானகன் குடும்பத்தினர் கொடுத்து வைத்தவர்களே. மெழுகுவத்தி ஏற்றப்பட்ட அறையில் சாப்பாடு. மேஜை நிறைய உணவு.

சங் பிளானகன் தம் சிறுபிராய வாழ்க்கையை சிறுவர் நகரத்துக்கு வழிகாட்டியாகப் பிற்காலத்தில் கருதினார். அதாவது பெரிய குடும்பத்தில் ஒவ்வொருவரும் உபயோககரமான பணி செய்யவேண்டும். மற்றவர் உதவியை நாடாமல் குடும்பக் காரியம் நிறைவேற வேண்டும். சிறுவர் நகரில் இருப்பது போலத்தான் எட்டியின் வீட்டில் எப்போதும்

சங்கீத ஒலி கேட்கும். அவர்களுடைய வீட்டில் பியானோ, குழல், வயலின் இருந்தன. அடிக்கடி, பிரார்த்தனைக்கு முன், பெண்கள் சாயந்திர வேளையில் பாடுவார்கள். எட்டிக்கு எடுப்பான சாரீரம் இருந்தது. உரத்த குரலில் உற்சாகமாகப் பாடுவார். ஒவ்வொரு நாளும் பிளானக்ன் குடும்பத்தார் ஒன்றாக இருந்து மாலையில் ஜெபமாலை சொல்லுவார்கள்.

பல ஆண்டுகள் வரை எட்டியின் தமையன். பாட்ரிக் சமயம் கிடைக்கும் போதெல்லாம் எட்டிக்குப் பாடங்கள் சொல்லிக் கொடுப்பார். எட்டியின் புத்திக்கூர்மையும்; சிந்தனையில் ஆழ்ந்து விடும் வழக்கமும் இப்போதுகூட சங். பாட்ரிக் பிளானகனுக்கு நன்றாக ஞாபகம் இருக்கிறது. தமையனுடைய உதவியினால் எட்டி மூன்று வகுப்புகளில் சேராமலே மேல் வகுப்புக்குத் தேறினார். மதகுருவாகத் தேர்ச்சி பெற பாட்ரிக் டப்ளினுக்குச் சென்ற பிறகு, எட்டி புதிய ஆசான் ஒருவரிடம் சென்றார். அவர் பாலிமோ என்னும் பக்கத்து ஊரிலிருந்த மதகுரு. அவரிடம் எட்டி பிரஞ்சு, லத்தின், கிரீக் பாஷைகளை ஒரே நாளில் கற்றுக் கொள்ள ஆரம்பித்தார்.

"எட்டி நிச்சயமாகப் பெரிய மனிதனாக விளங்கப் போகிறான்," என்று அவருடைய அத்தைமார்கள் கூறுவார்கள்.

"ஆமாம். ஆனால் எந்த விதத்தில்?" என்று கேட்பார்கள். அவர்களுடைய மைத்துனர்கள்.

இம் மாதிரிப் பேச்சுகளை எட்டி தம் காதில் போட்டுக் கொள்ளுவதேயில்லை. ஆகவே தமது எதிர்கால வாழ்க்கையைப் பற்றி ஆலோசிக்க தம் குடும்பத்தினர் ஒரு கூட்டம் கூட்டியபோது, அவர் ஆச்சரியப்பட்டார். வெகு காலத்துக்கு முன்பே, அவர் மிகச் சிறிய பையனாக இருக்கும்போதே ஒரு நாள் இவ்விஷயம் முடிவாக நிச்சயிக்கப்பட்டு விட்டது என்று அவர் மனதில் தோன்றியது. அன்று அவருடைய தாயார்

அவரை பாலிமோவில் உள்ள ஆலயத்துக்கு அழைத்துச் சென்றிருந்தார். பூசைக்குப் பிறகு அவருடைய தாயார் சங். பெதர்ஸ்டோன் அவர்களுடன் பேசிக்கொண்டிருக்கும் போது, "சிந்தனையில் ஆழ்ந்திருக்கும் உன்மகன் பெயர் என்ன?" என்று கேட்டார்.

"அவன் எட்டி," என்று நோரா பிளானகன் பதில் கூறினர்.

மதகுரு சிறுவனுடைய முடியைத் தழுவிக்கொண்டே, "ஒருநாள் எட்டி மதகுரு ஆவான்," என்று சொன்னர்.

சிறுவனும் தயாரும் ஒருவரையொருவர் பக்தியோடு பார்த்துக்கொண்டனர். ஆனல் அதைப்பற்றி ஒரு வார்த்தையும் பேசவில்லை. ஆலயத்திலிருந்து வீடுதிரும்பிய பிறகும் இருவரும் இத் தீர்க்கதரிசனத்தை யாரிடமும் கூறவில்லை. எனினும், பல ஆண்டுகள் கழிந்தும் இருவரும் அதை மறக்கவில்லை.

பின்பு குடும்பத்தில் பல மாறுதல்கள் ஏற்பட்டன. பாட்டனர் காலமானர். எட்டியின் தமக்கை அமெரிக்காவுக்குச் சென்று நியூயார்க் நகரில் வசித்துவந்தார். இன்னும் இரு சகோதரிகள், மேரிஜேன், கேட், மணம்புரிந்துகொண்டனர்.

இன்றே பாட்ரிக் டப்ளினிலிருந்து வீட்டுக்கு வந்திருக்கிறர். வீட்டு முற்றத்தில் குடும்பத்தினர் அனைவரும் எட்டியைப் பற்றிக் கலந்து ஆலோசிக்கின்றனர். முதலிலிருந்தே எட்டி தம் மனதிலிருப்பதைத் தெளிவாக உரைத்தார். தமது எதிர்காலத்தைப்பற்றி முன்பே தீர்மானமாகிவிட்டது என்றர். அவர் மதகுருவாகப் போவதாகக் கூறினர். யாரும் அந்த யோசனையை எதிர்க்கவில்லை.

"அதுவே சரி, எட்டி அப்படிப்பட்ட சிறுவன். ஆண்டவன் அருள் என்ன என்பது சங். பெதர்ஸ்டோனுக்குத் தெரியும். மதகுருவாக விளங்கவே எட்டி பிறந்திருக்கிறன்,"

என்றார் அவருடைய தயார் நோரா பிளானகன். எல்லோரும் அவர் கூறியதை ஒப்புக்கொண்டனர்.

சம்மர் ஹில் காலேஜில் படிக்க எட்டி போகவேண்டியது என்று அன்றிரவு முடிவு செய்யப்பட்டது. அங்குதான் அவருடைய தமையன் பாட்ரிக்கும் அதற்குமுன் வாசித்தார்.

அத்தியாயம் 3

சம்மர் ஹில் மோசமான பள்ளிக்கூடம் அல்ல. அக்காலத்துப் பள்ளிக்கூடங்களுக்கு ஒப்பிட்டால், சாதாரண பள்ளிக்கூடத்தைவிட அது உயர்ந்தது என்று சொல்லலாம். உபாத்தியாயர்கள் நல்லவர்கள், சிறுவர்களைப் பராமரிப்பதில் சமர்த்தர்கள். ஆனால், வீட்டை விட்டு வந்திருக்கும் கூச்சமான குழந்தைகளை அன்புடன் வளர்ப்பதென்பது அவர்களுக்குத் தெரியாது.

சம்மர் ஹில்லில் தாம் கற்ற பாடங்களைவிட, தாய் தந்தையரின் கருணையும், அன்புமின்று, வீட்டு நினைப்புடன் தன்னந்தனியாகக் காலங்கழித்ததே எட்டிக்குத் தெளிவாக ஞாபகமிருந்தது. "லௌகிகமானது எதுவும் மனித இதயத்தை முழுதும் திருப்தி செய்யா," என்று பிற்காலத்தில் அவர் போதனை செய்யும்போதெல்லாம் அவர் மனதில் தாம் சம்மர் ஹில்லில் தனிமையாக இருந்த நாட்கள் தோன்றும்.

ஆனால் அந்தக்காலத்தில் சிறுவர் நகர் ஒன்றும் எங்கும் கிடையாது. சிறுவர் நகரைப் போன்ற ஸ்தாபனமும் கிடையாது. தங்களுடைய சௌகர்யங்களைத் தியாகம் செய்துகூட பெற்றோர்கள் குழந்தைகளை அன்புடன் வளர்க்கலாம். ஆனால் அக் குழந்தைகளையும் பள்ளிக்கூடங்களில் கடுமையாகவே நடத்திவந்தார்கள். சாத்தானின் ஏவுதலுக்குப் பலியாகக்கூடியவர்கள் சிறுவர்கள் என்ற மனப்

பான்மையே அப்போது பொதுவாக இருந்து வந்தது. தீய வழிகளில் இறங்க வாய்ப்பு ஏற்படாவண்ணம், பிடிவாத முள்ள இளைஞர்களைக் கட்டுத்திட்டத்தில் வைத்திருப்பதுதான் நீர் செய்யக்கூடியது. தீய வழிகளைப்பற்றி பிள்ளைகள் நினைக்கு முன்பே, கட்டுப்பாடு ஆரம்பமாகட்டும்; எந்தச் சிறுவனாவது கீழ்ப்படிந்து நடக்கவில்லையென்றால், அவனை அப்புறப்படுத்தி விடவேண்டும்—அப்படி நினைத்த காலம் அது.

சில நாடுகளில் கல்விபுகட்டும் வழிகளில் பெரிய முன்னேற்றங்கள் தோன்றின என்பது வாஸ்தவந்தான். ஆனால் அந்நாட்களில், எட்டி சம்மர் ஹில்லில் வாசித்துவந்த போது, புதியதுறையை யாரும் துவக்கிவைக்கக்கூட இல்லை. அடித்துச் சீர்திருத்தம் செய்யமுடியுமென்ற தவறான எண்ணத்தையே எங்கும் மனிதன் கொண்டிருந்தான். சம்மர் ஹில் காலேஜிலும் அந்தக் கொள்கையே நிலவி யிருந்தது.

சம்மர் ஹில் வாழ்க்கை எட்டியைத் திடுக்கிடச் செய்தது என்பதில் சந்தேகமில்லை. வழக்கத்துக்கு விரோத மாகத் தனக்கும் தெரியாமல் ஒரு பையன் நடந்துகொண்டால் உடனே ஒழுங்கு நடவடிக்கை. எட்டி தமது படிப்பில் கவனம் செலுத்தி ஊக்கத்துடன் நடந்துகொண்டதால், அவருக்கு எவ்வித சங்கடமும் ஏற்படவில்லை. வகுப்பிலும் நல்ல பெயர். ஆனால் இதயமற்ற நிர்வாகத்தின்கீழ் வாழ்க்கை எவ்வளவு கசப்பாக இருக்கக்கூடும் என்பதை முதன்முதலில் அவர் அங்கு கண்டார்.

ஓர் இரவு அவருடைய வகுப்புத் தோழன், மாக், புறப் பட்டுச் செல்வதைக் கண்டார். காலேஜ் கட்டடத்தை விட்டு வெளியே சென்று ஒருநாள் அவன் சிகரெட்டுக்குடித்தான். அதற்காக அவனை வீட்டிற்கு அனுப்பிவிட்டார்கள். தாம் பழைய சுங்கானைச் சிறுவயதில் உபயோகித்ததை எட்டி ஞாபகப்படுத்திக் கொண்டார். அவருடைய தகப்பனுருக்குத்

தெரிந்திருந்தால், எட்டிக்கு அடி கிடைத்திருக்கும். ஆனால் அதைப் பெருங் குற்றமாக அவருடைய பெற்றோர்கள் கருதியிருக்க மாட்டார்கள். மாக்கைப் போல, பள்ளியிலிருந்து விலக்கப்படுவதென்றால், ஒரு சிறுவனின் வாழ்க்கையில் அது பெரிய பூகம்பமாகும்.

மற்றச் சிறுவர்கள் இன்னும் சிறிய குற்றங்களுக்காக வீடுதிரும்பினார்கள். பள்ளிக்கூடவிதிகள் அவ்வளவு கடுமை யாயிருந்தனவாகையால், தவறு செய்துவிடுவோமோ என்று சிறுவர்கள் சதா நடுங்கிக்கொண்டிருந்தனர். எட்டி சிறுவரா யிருந்தாலும், இவ்வழக்கம் சரியில்லையென்பதை உணர்ந்தார். சிறுவர்கள் பயத்துடன் வாழ்வது பிசகு என்று நம்பினார்.

சம்மர் ஹில்லில் நல்ல மார்க்குகள் வாங்கியிருந்ததால் எட்டி வகுப்பில் முதல் வரிசையில் இருந்தார். முதல் வருஷம் ஓட்டப்பந்தயத்தில் கலந்துகொண்டார். ஆனால் கணுக்கால் சுளுக்கிக்கொண்டதால் அதை விட்டுவிட நேர்ந்தது. பிறகு எப்போதும் கைப்பந்துதான் விளையாடுவார்.

ஓய்வு நேரங்களில் கைப்பந்து விளையாடுவது, அல்லது வாசிப்பது, அல்லது சுற்றிலும் நடந்து செல்வது. தனிமை யாக இருப்பதற்காக, சிலசமயங்களில் அவர் கடலோரம்வரை போவதுண்டு.

காலேஜ் இருக்கும் ஸ்லிகோ நகரில் அவர் ஒரே ஒருவ ருடன்தான் சினேகமானார். அவர் பெயர் பி. ஜி. மாக்டெர்மாட். ஏலம் போடுபவர். ஒழிந்த நேரங்களில் கப்பல்களுக்கு டிக்கட் வாங்கிக்கொடுக்கும் ஏஜண்டாகவுமிருந்தார். பிளான கன் தமக்கிருக்கும் உடைகளில் உயர்ந்ததை உடுத்துக் கொண்டு, பட்டணத்துக்குச் சென்று, மாக்டெர்மர்டுடன் பேசிவிட்டு வருவார். புதிதாக அயர்லந்திலிருந்து அமெரிக்கா செல்வோர், முன்பே போனவர்களில் அங்கே அடைந்துள்ள வெற்றி—இதைப்பற்றித்தான் பேச்சு.

"அப்புறம் டிம்மி ரூர்க்," என்று சொல்லிக்கொண்டே போவார் மாக்டெர்மாட். "அவனைக் கப்பலேற்றி அனுப்பும் போது அவன் பையில் ஆறு பென்ஸ்கூடக் கிடையாது. இப்போதோ? அவனுக்குச் சொந்த வீடு இருக்கிறது. அரசியலிலும் பெயர் இருக்கிறது. ஆள் மறைவதற்குள் பெரிய ஆசாமியாகிவிடுவான்."

இத்மாதிரிக் கதைகள் சொல்லுவதில் மாக்டெர்ட்டுக்குப் பிரியம். தம் மூலமாக வெளிநாடுகள் சென்று பலர் சுபிட்ச மடைந்ததற்கெல்லாம் தாமே ஜவாப்தாரி என்ற தோரணையில் பேசுவார்.

"பூலோகத்திலேயே அமெரிக்காதான் மகோன்னத மான நாடு. அதாவது அயர்லந்துக்கப்புறம்," என்பார்.

அமெரிக்க அதிசயங்களைப்பற்றி எட்டிக்குக் கடிதங்களும் வந்துகொண்டிருந்தன. அவருடைய தமக்கை, நெல்லி, நியூயார்க்கிலிருந்து எழுதிவந்தார். மாக்டெர்மாட்டுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளும், நெல்லியின் கடிதங்களும் எட்டியின் இதயத்தில் புதிய கனலை எழுப்பின.

கோடை விடுமுறைக்கு எட்டிவீட்டுக்குத் திரும்பினார் முடி நரைத்துக்கொண்டிருந்த தம் தந்தையுடன் ஆடுகளை வயலில் பார்த்துக் கொள்வார். இவ்வாறு, சங்கடமான நாலு வருஷங்களைக் காலேஜ் படிப்பில் எட்டி கழித்தார்.

சம்மர் ஹில்லில் மதிப்பிற்குரியவாறு பட்டம்பெற்று வெளிக்கிளம்பும்போது எட்டிக்கு வயது பதினெட்டு. அவர் காலேஜில் வாசித்திருந்த ஆண்டுகளில் துரிதமாக வளர்ந்து விட்டார். ஆறு அடிக்குமேல் உயரம்.

அவ்வருஷமே பாட்ரிக்கும் டப்ளினில் மதகுரு தேர்ச்சியில் வெற்றியடைந்து மதகுருவாக அபிஷேகம் செய்யப் பட்டார். அமெரிக்காவில் நெப்ராஸ்கா என்ற ராஜ்யத்தி

லுள்ள ஒமர்ஹா என்ற இடத்தில் குருபீடம் ஒன்றை நிறுவிக்க உதவுமாறு பாட்ரிக் அனுப்பப்பட்டார்.

எட்டியும், டப்ளினுக்குச் சென்று மதகுருவாகப் படிப்பார் என்று எல்லோரும் எதிர்பார்த்திருந்தார்கள். ஆனால் திடீரென்று திட்டங்களை மாற்றவேண்டியதாயிற்று. அதற்குக் காரணம் நியூயார்க்கிலிருந்து நெல்லி பிளானகன் லிமெக்குக்கு விஜயம் செய்தது தான்.

நன்னம்பிக்கையும் உற்சாகமும் முகத்தில் பிரகாசிக்க, நெல்லி தன் தாய் தந்தையர்க்கும் சகோதரர்களுக்கும் நியூயார்க்கின் மகிமைகளைப் பற்றிச் சொன்னாள். நெல்லிக்குப் புதுப் புது யோசனைகள் தோன்றின. எட்டி ஏன் டப்ளினுக்குச் செல்ல வேண்டும்? தன்னுடன் அமெரிக்காவுக்கு வந்து எட்டி அங்கே அவருடைய படிப்பை ஏன் முடித்துக் கொள்ளக் கூடாது?

ஜான் பிளானகனும் அவருடைய மனைவியும் அதைப் பற்றிப் பல இரவுகள் யோசித்தனர். குழந்தைகள் எல்லாம் இப்போது வளர்ந்து விட்டனர். குடும்பமும் பிரிந்து போய்க் கொண்டிருக்கிறது. இச்சமயத்தில் எட்டியையும் அனுப்பி விடுவதென்பது நினைப்பதற்குக் கஷ்டமாய்த் தான் இருந்தது. இருந்தாலும் அதனால் ஏற்படக் கூடிய அநுகூலங்களை அவர்கள் அலட்சியப்படுத்துவதற்கில்லை. அதைத்தான் செய்தாக வேண்டும் என்ற குடும்பத்தின் தீர்மானத்தைக் கடைசியில் ஜான் பிளானகன் அறிவித்தார்.

அத்தியாயம் 4

புதிய நாடு நெல்லி சொல்லியது போலவே பிரமிக்கத் தக்கதாய் இருந்தது எட்டிக்கு. அவருடைய தாய் மாமன்கள் அச்சமயம் நியூயார்க்கில் வசித்து வந்தனர். அவர்கள் எட்டியை நேராக ஒரு குருவிடம் அழைத்துச் சென்றனர்.

அவர் அதிமேற்றிராணியார் பார்லி. அவர் இளைஞனின் கோரிக்கையைக் கவனமாகக் கேட்டார்.

"அப்படியா! மதகுருவாவதற்குப் படிக்க நீ ஆவலுள்ளவனாயிருக்கிறாய். சீக்கிரமே அபிஷேகம் பெற விரும்புகிறாய். உனக்கு வயதென்ன, எட்வர்ட்?" என்று கேட்டார்.

"பதினெட்டு, ஆண்டவரே,"

"நீ வேத சாஸ்திரத்தில் பட்டம் பெற்றிருக்கிறாயா?"

"இல்லை, ஆண்டவரே."

அதிமேற்றிராணியார் பார்லி கவலையுடன் தலையை ஆட்டினார். "டன்வூடி என்ற இடத்தில் வாசிப்பதற்கு நீ மிகச் சிறியவன். ஆனால் ஒரு வேளை அங்கு படிக்க இப்போதே உன்னைத் தயார் செய்து கொள்ளலாம்.

மேரிலந்தில் உள்ள எம்மிட்ஸ்பர்க் என்ற நகரத்தில் மவுன்ட் ஸெயின்ட் மேரிஸ் என்று பெயருள்ள காலேஜ் ஒன்று இருக்கிறது. அதுவே அதிமேற்றிராணியார் மனதில் தோன்றியது. "நல்ல பள்ளிக்கூடம் அது. முதலில் நீ அங்கு போ, மகனே. அங்கே சென்று பட்டம் பெற்றுக்கொள். அதற்குள் டன்வூடிக்குச் செல்வதற்கான வயது உனக்கு ஆகும்.

குருப்பரிபாலன முடிவுக்கு மறு பேச்சு கிடையாது. எட்டியின் மாமா ஒருவர், மைக்கேல் லார்க்கின், எட்டி ஸெயின்ட் மேரிஸுக்குச் செல்வதற்கான செலவை ஏற்றுக் கொண்டார். ஆகவே அயர்லந்திலிருந்து வந்த இளைஞன் மறுபடியும் மூட்டையைக் கட்டிக் கொண்டு பள்ளிக்கூடத்தை நோக்கி வண்டி ஏறினார். இன்னும் மூன்று வருஷங்கள் பள்ளியில் இருக்க வேண்டும்.

குழந்தைகள் வளரும் போது பிரிந்து போன பிளானகனின் குடும்பம் மறுபடியும் ஓரளவுக்காவது அமெரிக்காவில்

ஒன்று சேர ஆரம்பித்தது. எட்டியின் தாய் தந்தையர்க்கு லீபெக்கில் தனிமையாக குழந்தைகளின்றிக் காலங் கழிப்பது சங்கடமாயிருந்தது. ஆகவே, அங்கு அவர்களிருந்த உடைமைகளை யெல்லாம் விற்றுவிட்டு, அட்லான்டிக் மகா சமுத்திரத்தைக் கடந்து அமெரிக்கா வந்து விட்டனர்.

எட்டியின் பெற்றோர்கள் நெல்லியுடன் நியூயார்க்கில் தங்கியிருந்தனர். அவர்களுடைய கவலை எட்டியைப் பற்றித் தான். சிறுவயதிலிருந்தே எட்டி ஜலதோஷத்தினுல் அவதிப் பட்டு வந்தவர் என்பது பிளானகன் குடும்பத்தினர் அனைவர்க்கும் தெரியும். ஆகவே, க்ஷயரோகிகள் இருக்கும் ஆஸ்பத்திரி வார்டுகளுக்கு எட்டி விஜயம் செய்து வருகிறுர் என்று கேள்விப்பட்டதும் நோரா பிளானகனுக்குக் கவலையுண்டாயிற்று. மேலும் எட்டி அதிகமாக உழைக்கிறுர் என்று நோரா நிச்சயமாய் நம்பினுர். டன்வூடியில் அவர் வாசிப்பதே அவருடைய தேக நிலைக்குச் சிரமமானது. இன்னும் ஆஸ்பத்திரி வேலையும் சேர்ந்தால், எட்டி சமாளிக்க முடியாது என்று அவருடைய தாயாருக்குத் தெரியும். எட்டி அன்னையின் பயத்தை நீக்கப் பார்த்தார். நோராவும் 1908-ம் வருஷம் கிறிஸ்துமஸ் தினம் வரை மகன் வார்த்தையில் நம்பியிருந்தார். அவ்வருஷம் மாரிக்காலம் கடுமையாக இருந்தது.

கிறிஸ்துமஸ் காலையன்று மழையும் உறைந்த பனியும் பலமாயிருந்தும், ஸெயின்ட் பாட்ரிக்ஸ் ஆலயத்தில் ஜனத்திரள் அதிகமாயிருந்தது. கூட்டம் அதிகமாயிருந்ததால், மாணவர்கள் ஒரு மூலையில் ஒதுங்கி ஒருவரை ஒருவர் நெருக்கிக் கொண்டு நிற்க வேண்டியிருந்தது. எட்டி பிளானகன் மூலையிலிருந்த நீராவி மெஷினில் சாய்ந்து நின்றிருந்தார்.

பூசை முடிந்த பிறகு அந்தச் சூட்டிலிருந்து, உறைந்த பனியும் குளிர் காற்றும் நிறைந்த வெளியில் பிளானகன் இறங்கி வீட்டை நோக்கி நடந்து சென்றுர். சாப்பிடும் போது இருமல். வீட்டிலிருந்து அவர் டன்வூடி காலேஜ் போகும்

போது காற்றில் முகம் சிவந்து விட்டது. மறு நாள் ஜல தோஷம் அவருடைய உடம்பையே உலுக்கி விட்டது. படுக்கையை விட்டு எழுந்திருக்கவும் முடியாமல் பலஹீனமாயிருந்தார்.

அறையில் உடன் வசித்திருந்த மாணவர்கள் அவர்மீது உடைகளைப் போட்டு, அவரை காலேஜ் ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் சென்றனர். டாக்டர்கள் எட்டியைப் பரிசோதித்ததும் கவலையில் ஆழ்ந்தனர். அன்றே எட்டியின் தாய் தந்தையரைக் கூப்பிட்டனுப்பினர். அவர்களுடைய மகனுக்கு டபிள் நிமோனியா நோய் என்று பிரதம டாக்டர் சொன்னார். குணமாக வேண்டுமாயின் மிக ஜாக்கிரதையாகக் கவனிக்க வேண்டும் என்றார். அந்தக் காலத்தில் பெனிஸிலின் ஏது, மற்றும் இந்நாளில் சகஜமாக நிமோனியாவுக்கு உபயோகிக்கும் மாத்திரைகள் ஏது? எட்டி பிழைப்பது இப்படி ஐம்பது, அப்படி ஐம்பது என்றார்கள் டாக்டர்கள். அவ்வளவு தான். பல மாதங்கள் படுக்கையிலிருந்து சிகிச்சை பெற வேண்டும்.

எட்டியின் பெற்றோர்களுக்கு விஷயம் புரிந்தது. எட்டியின் நுரையீரல்கள் பாதிக்கப்பட்டால், அவர் பூர்ணமாகக் குணமாகப் பல வருஷங்களாகும். கிறிஸ்துமஸுக்கு மறுதினமான அன்று, எட்டி பிளானகன் மதகுருவாவது துர்லபமாகத் தோன்றிற்று. இன்னும் போகப் போக, அவருக்கு அந்த பாக்கியம் கிட்டாது என்று தோன்றலாயிற்று.

அத்தியாயம் 5

மூன்று மாதங்கள் கழிந்த பிறகு எட்டி குணமாவார் என்று டாக்டர்கள் உறுதிகொண்டனர். ஆனால் ஒருவருஷம் வரை எட்டி வாசிப்பை நிறுத்திவைக்கவேண்டுமென்றார்கள். மனதிற்குள் எட்டி அவர்களுடைய யோசனையை நிராகரித்து விட்டார். அநுதினமும் தனக்கு ஆறுதல் சொல்ல வரும் இளைய மதகுருவிடம் எட்டி மன்றாடினார்.

அம் மதகுரு சங். பிரான்ஸிஸ் டபி. முதல் உலக யுத்தத்தில் வீரம்பொருந்திய குருவென உலகெங்கும் புகழடைந்தவர். இன்று அவருடைய ஞாபகச் சிலை நியூயார்க்கில் இருக்கிறது.

இளைய மதகுரு நோய்வாயுற்றிருக்கும் மாணவனின் முறையீட்டைச் செவிகொடுத்துக் கேட்டார். படுக்கையை விட்டு எழுந்து தமது வகுப்புக்குச் செல்ல விரும்பினார் எட்டி.

"நீ இறந்துபோவாயப்பா. ஆண்டவன் அருளிய அருமையான உயிரை நீ அலட்சியமாகப் பாவிக்க உனக்கு உரிமையிருக்கிறதா?" என்று கேட்டார் சங். டபி.

"உயிரைப் போலவே எனக்குக் கடவுள் கடமையையும் அளித்திருக்கிறார் அல்லவா?" என்றார் எட்டி.

"மதகுருவாவதுதான் அக்கடமை என்று நீ எப்படி அவ்வளவு திடமாய் நம்புகிறாய்?"

"நான் வேறு எதற்கும் லாயக்கற்றவனாயிருப்பதால் தான்." என்று பதில் கூறினார் எட்டி பிளானகன்.

சங். டபி நிலத்தை நோக்கினார். அருள் ஒளி வேண்டும் போது அவர் அவ்வாறு கவிழ்ந்து நோக்குவார். சீக்கிரமே அவ்விடத்தை விட்டு சங். டபி அகன்றார். விஷயத்தைப் பற்றி அவர்களுக்குள் ஒரு முடிவும் ஏற்படவில்லை. ஆனால் பிளானகன் உள்ளத்தில் எவ்வித சந்தேகமும் இல்லை. ஆஸ்பத்திரி அறையில் இருள் சூழ்ந்துவரும்போது, சங். டபி கேட்ட கேள்விகளுக்குப் பதில்களை யோசித்தார் பிளானகன். மதகுருவாகப் பணி செய்யவேண்டுமென்ற அவா ஏன்? பழக்கவழக்கமோ, சிறுபிராயத்திலிருந்து வளர்ந்துவந்த விதமோ மட்டும் காரணமல்ல என்பது அவருக்குத் தெரியும். லீபெக் வீட்டில் மதப்பற்றுதல் அதிகமென்றாலும், அதுவே எட்டியை இத்துணிவுக்கு வரும்படி செய்யவில்லை. அல்லது

தம் தமையனைப் போலவே தாமும் மதகுரு ஆகவேண்டும் என்ற ஆசையும் காரணம் அல்ல.

அவையெல்லாம் ஓரளவுக்கு அவருடைய முடிவை ஊர்ஜிதம் செய்திருக்கலாம். ஆனால் அவற்றில் எதுவும் காரணமாய்த் தோன்றவில்லை. அதுவே அவருக்குக் கடவுள்விரும்பிய பணியாக இருப்பதால், அவர் மதகுருவாவார். அவ்வளவு தான். சிலர் விஞ்ஞானிகளாகவோ கவிகளாகவோ பிறப்பது போல, அவரும் ஆண்டவன் பணியில் ஈடுபடப் பிறந்தவர்.

அன்று சாயந்திரம் அவர் கண்களை மூடிக்கொண்டு மெதுவாகப் பிரார்த்தனை செய்யலுற்றார். நோயாளி தலையணையையொட்டி நிமிர்ந்து உட்கார்ந்து, உதடுகள் ஸ்மரணை செய்ய கண்களை மூடிக்கொண்டு தியானிப்பதை மருந்து எடுத்துக்கொண்டு வந்த ஆள் ஆச்சரியத்துடன் கண்டான்.

எட்டியின் பிரார்த்தனைக்குப் பதில் மறுநாள் கிடைத்தது. ஒரு கட்டு புஸ்தகங்கள், பென்ஸில்கள், காகிதம் ஆகியவற்றை ஓர் ஆள் எடுத்துக்கொண்டுவந்து, எட்டியின் படுக்கைமீது போட்டார்.

"நீர்தான் பிளானகன், இல்லையா? இந்த புஸ்தகங்கள் உங்களுக்கு. வாசிப்பதற்காக வெளியே நீங்க போகமுடியும் என்று நினைத்தால் அது பிசகு. படுக்கையிலேயேதான் வாசிக்கப்போகிறீர்," என்றார் அந்த ஆள்.

அப்புறம், சங். டபி வந்தார். தினம் இரண்டுமணிநேரம் எட்டி வாசிப்பதற்கு டாக்டர்கள் அனுமதி அளித்திருக்கிறார்கள் என்று தெரிவித்தார். "நான் உனக்கு உதவிபுரிவேன்," என்றார் கண்ணைச் சிமிட்டிக்கொண்டே.

சங். டபி ஒருநாளாவது வரத்தவறவில்லை. ஒவ்வொரு நாள் மாலையும் இருவரும் எட்டியின் பாடங்களில் ஆழ்ந்தனர். அவ்வருஷம் காலேஜ் மூடுவதற்குமுன் கடைசி சில வாரங்கள்

பிளானகன் படுக்கையைவிட்டு வகுப்புக்குச் செல்லுமளவுக்குத் தேறினர். இருந்தாலும் அவர் அதிகமாக அலுத்துக் கொள்ளக்கூடாதென டாக்டர் கட்டளையிட்டிருந்தார். பிளானகனுக்கு அடிக்கடி இருமல் இருந்துவந்தது.

ஆனல் அவருக்கு ஒரே நோக்கம். பரீட்சையில் தேற வேண்டும். பரீட்சைநாள் நெருங்க நெருங்க, அவர் நடுநிசி வரை வாசிக்கத் தொடங்கினர். பல தடவைகளில் சங். டபி பிளானகனை எச்சரித்தார். இருமல் மோசமாகி வருவது வெளிப்படையாயிற்று.. ஆனல் அவ்வருஷப் படிப்பை எப்படியாவது வெற்றிகரமாக முடிக்கவேண்டுமென்று ஆவல் கொண்டிருக்கும் பிளானகன் தம் முயற்சியில் தளரவில்லை.

பரீட்சையில் மிகுந்த கீர்த்தியோடு தேறினர். வகுப்புக்கு அத்தனைகாலம் வர இயலாத பிளானகன் அவ்வளவு உயர்ந்த மார்க்குகளுடன் தேறியதைக் கண்டு அநேக உபாத்தியாயர்கள் ஆச்சரியப்பட்டார்கள். ஆனல் பிளானகனின் தேகநிலை மிகவும் பாதிக்கப்பட்டது. டாக்டர்கள் பரிசோதித்துப் பார்த்ததில் அவருடைய நுரையீரல்கள் சரியாக இல்லையென்பதைக் கண்டுபிடித்தார்கள். க்ஷயரோகம் வரக்கூடிய நிலையில் அவை இருந்தன. டாக்டர்கள் தங்களுக்குள் ஆலோசனை செய்து, பிறகு பிளானகனை அழைத்தனர். அவர்களைக் கண்டதும், அவர்களுடைய முடிவு எத்தகையது என்பதை பிளானகன் உணர்ந்துகொண்டார். அவருடைய தேகநிலை காரணமாக அவர் அடுத்த வருஷம் டன்வூழிக்கு வருவது உசிதமல்ல என்று டாக்டர்கள் அறிவித்தார்கள்.

பிளானகன் டாக்டர்களின் முகங்களை ஒவ்வொன்ருகக் கூர்ந்து கவனித்தார். யாரிடமிருந்தாவது தைரியமூட்டும் பார்வை கிடைக்கிறதா என்று நோக்கினர். கடைசியில் அவர் கேட்டார்:

“நான் என்ன செய்யவேண்டும்? உங்களுடைய யோசனை என்ன?

“ உங்களுக்குத் தெளிந்த, உலர்ந்த காற்று அவசியம்,” என்ருர் ஒரு டாக்டர்.

“ நீங்கள் மேற்கே போகலாம்,” என்ருர் மற்ெருருவர்.

தம்முடைய அறைக்குச் சென்று பிளானகன் தனிமை யாக யோசித்தார். தமக்கு நேர்ந்த ஏமாற்றத்திலிருந்தும் தேறி தைரியம்பெற, பிரார்த்தனே செய்தார். அவ்விருளில், ஓமாஹாவிலிருக்கும் தமது தமையன் பாட்ரிக் ஞாபகம் வந்தது பிளானகனுக்கு. அவரிருந்த நகரம் மேற்கே இருக் கிறது. அவரும் அடிக்கடி அவ்விடத்துச் சுற்றுப்புறத்தைப் பற்றி எட்டிக்கு உற்சாகத்துடன் எழுதியிருந்தார்.

அடுத்த நாள் பிளானகன் டன்மூடியில் தமக்கு நேர்ந்த கதியைத் தம் பெற்ரேருக்கும் தமக்கைக்கும் தெரிவித்தார். பிறகு தம்முடைய புதிய திட்டத்தையும் விளக்கினர் தமையன் பாட்ரிக் இருக்கும் நெப்ராஸ்காவுக்குத் தாம் செல்வதாகப் பிளானகன் கூறினர்.

“ நாம் எல்லோருமே அங்கு செல்வது நன்ருயிருக்கு மென்று தோன்றுகிறது,” என்ருர் அவர்.

சங். பாட்ரிக் கடிதங்களில் உண்மையைக் கூறமுயன்றும் கூட, ஓமாஹா நகரம் ஏதோ நாகரிக வாழ்க்கைக்கு அப்பா லுள்ள வனந்திரப் பிரதேசம் என்ற எண்ணம்தான் பிளான கன் குடும்பத்தினருக்கு இருந்துவந்தது.

“ அப்படியெல்லாம் ஒன்றுமில்லே. சில விதங்களில் அது அயர்லந்தைப்போலவே இருக்கிறது. நம் நாட்டிலிருந்து, பல ஐரிஷ்காரர்கள் அங்கு குடியேறியிருப்பதாகச் சொல்லு கிருர்கள்,” என்று தைரியமூட்டினர் எட்டி.

அந்தப்பற்றி நிறைய தர்க்கம் நடந்தது. கடைசியில் எட்டியின் கட்சியே ஜெயித்தது.

அயர்லந்தைச் சேர்ந்த பிளானகன்களில் இன்னும் சிலர் ஓமாஹாவுக்குப் பிரயாணமாயினர்.

ஒமாஹாவில் எல்லோரும் ஒருமித்துச் சாப்பிட்ட முதல் நாள் விருந்து பிரமாதமாக இருந்தது. நெல்லியும் அவருடைய தாயாரும் சமையல் செய்தனர். இன்னும் பல பெண்கள் வந்திருந்தனர். எட்டியின் தம்பி மைக்கேலும் இருந்தான். அவன் கடைசி மகன். சிறுவயதிலேயே நல்ல பாடகனைப் பிரகாசித்துச், சிறுவயதிலேயே காலமாகப்போகிறவன்.

இன்று எல்லோரும் கூடியிருந்ததால் ஒரே மகிழ்ச்சி. வீபெக்கில் வருஷக்கணக்கில் சமையல் செய்ததைப்போலவே மறுபடியும் எட்டியின் தாயார் ரொட்டியைச் சுட்டு, இறைச்சியைச் சமைத்து வைத்தார். இப்போதெல்லாம் நரைத்த தாடியுடன் காட்சியளிக்கும் ஜான் பிளானகன் எப்போதும் போல சாப்பாட்டுக்கு முன் பிரார்த்தனையை ஆரம்பித்தார்.

சாப்பிடும் போது பேச்சு சுவாரசியமாயிருந்தது. பழைய நினைவுகள். எட்டி அண்டை வீட்டுக்குச் சென்று ஆப்பிள் பறிக்க முயன்றது. கிறிஸ்துமஸ் கொண்டாட்டத்தின் போது நிறைய விருந்தாளிகள் வந்ததால், அவர்களையெல்லாம் எங்கே தங்க வைப்பதென்று தவித்தது. இத்யாதி, இத்யாதி.

எட்டியின் எதிர்காலத் திட்டத்தைப் பற்றித்தான் எல்லோரும் கவலைப்பட்டனர். அவர் மதகுருவாக வேண்டுமென்பது எவ்வளவு ஆபத்து நிறைந்த கனவு என்பதைத் தான் ஒவ்வொருவரும் மனதிற்குள் யோசித்திருந்தனர். ஆனால் அன்றிரவு யாரும் அப்பேச்சை எடுக்கவில்லை.

சில நாட்கள் கழிந்த பிறகு, சங். பாட்ரிக் தம்பியைக் கலந்தாலோசித்தார். மூத்தவர் அநுதாபத்துக்கும், கருணைக்கும் பெயர் பெற்றவர். தீவிரமாக யோசனையிலாழ்ந்திருக்கும் போதும்கூட தமாஷாக இருப்பதாகப் பாவனை செய்யும் இயல்புடையவர்.

“என்னப்பா, இந்த நிலைமையை அடைந்து விட்டாய். அலுப்படையும்படி உழைப்பதால் உண்டாகும் விபரீதம்

என்னவென்பதை தெரிந்து கொண்டாயா, இல்லையா?'' என்று பேச்சைத் துவக்கினர் அவர்.

"பாட்ரிக், அப்போ நான் விட்டுவிட வேண்டும் என்கிருயா?'' என்ருர் எட்டி.

"நீ விட்டுவிட வேண்டுமென்று தான் மற்றவர்கள் சொல்லுகிருர்கள். பகல், இரவு இரண்டு வேலையும் உழைப்பவர் மதகுரு. அதற்கு வேண்டிய சக்தி உனக்கில்லையென்று சிலர் நினைக்கிருர்கள்.''

"எப்படியோ அந்த சக்தியை நான் பெறப் போகிறேன்,'' என்ருர் எட்டி.

"ஆனல் இப்போது நீ வாசித்துக் கொண்டே போனல், உன் உயிருக்கு ஆபத்து.''

அநேகமாக, சங். டபி முன்பு உபயோகித்த வார்த்தைகள்.

"அப்படி நேர வேண்டியிருந்தால் அப்படித்தான் ஆகும்,'' என்று எட்டி பதில் சொன்னர். "ஆனல் நான் செத்து விடுவேன் என்று நினைக்கவில்லை. இதற்குள் இல்லை. ஆண்டவன் எனக்கு அருள்புரிவார் என்ற தைரியம் எனக்குண்டு.''

எட்டிக்குள்ள நம்பிக்கையும் தெய்வ பக்தியும் தமையனுக்குப் புலனயிற்று. அன்புடன் புன்முறுவல் செய்தார். "நாங்கள் இது விஷயத்தில் என்ன உதவி செய்ய முடியுமென்று பார்ப்பதைத் தவிர வேறு ஒன்றுமில்லையென்று நினைக்கிறேன்'' என்று முடித்தார்.

சங். பாட்ரிக்கின் உதவியால் எட்டி பல ஆலயத் தலைவர்களைச் சந்தித்தார். அவர்களில் மேற்ருணியார் ஸ்கான்னெல் ஒருவர். பல ஊர்கள் சுற்றுப் பிராயணம் செய்தவர். பல உயர்தரப் பள்ளிகளில் வாசித்தவர்.

எட்டியை நோக்கி அவர் சொன்னர்: "நீ போகக் கூடிய இடம் ஒன்றிருக்கிறது. அங்கே நீ நிறைய கற்றுக் கொள்ளலாம். அதாவது, உன் தேகாரோக்கியம் சரியாக......

" ஆண்டவரே, நான் இப்போது நன்றாக இருக்கிறேன்." என்றார் எட்டி. " இருமல் போய் விட்டது. இப்போது பலம் வந்திருக்கிறது. படுத்திருக்கிறேன். டன்ஹூடியிலிருக்கும் டாக்டர்கள் என் நிலைமையைப் பற்றி நினைத்தது தவறு. நீங்கள் கூறிய இடம் எங்கே இருக்கிறது?"

" ரோமாபுரி."

பிளானகன் அதை எதிர்பார்க்கவேயில்லை! கோதுமை வயல்கள் சுற்றியுள்ள இப்பிரதேசத்தில், ரோமாபுரி நகரத்தின் பெயர் எங்கோ கேள்விப்பட்ட சரித்திர விஷயமாகத் தோன்றியது.

மேற்றாணியார் கூறினார்: " மதகுரு படிப்பை முடிப்பதற்காக ரோமபுரிக்குச் செல்ல ஓர் இளைஞனுக்கு ஒரு தகுதி மிக அவசியம். அவனுக்குப் பாண்டித்யம் அவசியம். எட்டி, உனக்கு அந்த தகுதி இருக்கிறது. உன்னுடைய செலவையெல்லாம் இங்குள்ள மேற்றாணியார் ஏற்பார். அதாவது நான், ஆகவே உனக்கு என்ன கவலை?"

திடீரென்று தாரை முழங்கியது போலிருந்தது.

" நான் மட்டும் அங்கு போக முடிந்தால், ஆஹா!" என்று எட்டி வியப் பெய்தினார்.

இது வரை எட்டி வாசித்தவைப் பற்றியும், இனி வாசிக்க வேண்டியவை பற்றியும் அவர்கள் பேசினார்கள். எட்டியின் தகுதியைப் பற்றிச் சந்தேகம் இல்லை.

" இனி உன்னைப் பொறுத்தது தான். உன் முடிவைத் தெரியப்படுத்து," என்றார் மேற்றாணியார்.

மறுபடியும் குடும்பத்தினர் கலந்தாலோசித்தனர். மறுபடியும் பிளானகன் மற்றவர்களின் தடைகளுக்குச் சமாதானம் சொன்னார். அவருடைய இருமல் மறைந்து விட்டது. நிமோனியாவின் தொல்லையிலிருந்து விடுபட்டு விட்டார்.

கோடைக்கால இறுதியில் எட்வர்ட் பிளானகன் தனியாக நியூயார்க்குக்கு ரயில் வண்டியில் பயணமானார்: சில நாட்களுக்குப் பிறகு ஐரோப்பாவுக்குக் கப்பலேறினார்.

அத்தியாயம் 6

1907-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 4-ம் தேதி பிளானகன் ரோமாபுரியை அடைந்ததும், கிரெகரியன் சர்வ கலா சாலையில் சேர்ந்தார். அவர் வசித்து, வாசித்த கலாசாலைக்குப் பெயர் காலேஜியோ கப்ரானிகா. 1457-ம் ஆண்டில் கார்டினல் டாமனிக் கப்ரானிகா ஆரம்பித்து வைத்தது.

இக் காலத்தைப் போலவே, பிளானகனின் நாளிலும் சர்வகலாசாலையை சேசு சபை நடத்தி வந்தது. உபாத்தியாயர்கள் அனைவரும் தேச சபைக் குருக்கள். உபாத்தியாயர்கள் பல்வேறு தேசத்தினர். பல்வேறு மொழிகளைப் பேசினார்கள். மாணவர்களும் பல தேசங்களிலிருந்து வந்திருந்தனர். வெவ்வேறு தேசத்தினராயினும், வெவ்வேறு குருமார் சங்கங்களைச் சேர்ந்தவராயினும், வெவ்வேறு நிறமுடையவர்களாயினும், எல்லோரும் ஒரு நல்ல காரியத்துக்காக ஒன்று சேர்ந்து பாடுபட முடியுமென்று பிளானகன் அங்குதான் முதன் முதலாக உணர்ந்தார் என சில மத குருக்கள் நம்புகின்றனர்.

ரோமாபுரியில் புதிய மாணவருக்குக் கடுமையான வேலை. காலையில் பூசை, ஏழு மணிக்குச் சிற்றுண்டி. எட்டு மணிக்கு வகுப்புக்கள் ஆரம்பித்து மாலைவரை நடக்கும். நடுவில் சாப்பாட்டுக்குச் சிறிதுநேரம் அவகாசம். கப்ரானிகா காலேஜில் பிளானகன் அடிக்கடி நடுநிசிவரை புஸ்தகங்களை வாசித்துக் கொண்டிருப்பார். மற்றவர்களைவிடத் தாம் இன்னும் அதிகமாக உழைக்கவேண்டுமென்று அவர் நினைத்தார்.

நவம்பர் ஆரம்பத்தில் தொல்லை ஆரம்பித்தது. மகா மோசமான மாரிக்காலம் தொடங்கியது. மழை, குளிர். சுவர்கள் ஈரமாய்க்கிடந்தன. ஓமாஹாவின் உலர்ந்த காற்றில் மறைந்திருந்த இருமல்தோன்ற ஆரம்பித்தது. சிறு பையனாகவிருந்த போது சுளுக்கிய கணுக்கால் மறுபடியும் வீங்க ஆரம்பித்தது.

தேகாரோக்கியம் க்ஷீணமடைவதைப் பொருட்படுத்தாமல், பிளானகன் ஊக்கத்துடன் வாசித்தார். ஆனால் வெகு சிக்கிரமே மாரிக்காலம் அவருடைய ஆரோக்கியத்தைக் குலைத்துவிட்டது தெரிந்தது. மெலிந்துபோக ஆரம்பித்தார். இருமலும் வலுத்தது.

உபாத்தியாயர் ஒருவர் ஜனவரி மாதம் எச்சரிக்கை செய்தார். "நான் உன்னைப் போலப் பலரைப் பார்த்திருக்கிறேன். சாவதானமாகப் போ, இல்லையேல் அவ்வளவுதான்," என்று அவர் பட்டவர்த்தனமாய்க் கூறினார்.

ஜனவரி மாதம் பூரவும், பிளானகன் க்ஷீணமடைந்து வந்தார். கடைசியில் சர்வகலாசாலை ஆஸ்பத்திரிக்குச் செல்லவேண்டியதாயிற்று. முந்திய வருஷம் இதே சமயத்தில் டன்வூடியில் நோய். அங்கேயும் மதகுருவாகத் தேற மாணவராயிருந்தவர் ஆஸ்பத்திரிக்குச் சென்றார். தம் தேக நிலையை எவ்வளவு வெறுத்தார் பிளானகன்!

"நீ உன்னை ரொம்பத் தண்டித்துக் கொண்டாய். சிறிது ஓய்வு எடுத்தால்மட்டும் போதாது. படிப்பை விட்டுவிட்டு நீ வீடுநோக்கிச் செல்லவேண்டும்," என்றார் டாக்டர்.

"நான் படிப்பை விடவில்லையென்றால்?" எனக் கேட்டார் பிளானகன்.

"நீ போகவேண்டும் என்று நான் உத்தரவு போட முடியாது. ஆனால் நீ ரோமாபுரியில் இருந்தால், வெகு சீக்கிரத்தில் பிரேதமாவாய். அதை நான் நிச்சயமாய்ச் சொல்லமுடியும்," என்றார் டாக்டர்.

ஆகவே, மறுபடியும், மதகுருவாகாமலே 1908-ம் ஆண்டு ஜனவரி 27-ந்தேதியன்று பிளானகன் ஓமாஹாவுக்குப் பிரயாணமானார்.

குடும்பத்தினர் ஓமாஹா ஸ்டேஷனில் வந்து எட்டி பிளானகனை வரவேற்றனர். எல்லோரும் உற்சாகமாக யிருந்ததாகக் காட்டிக்கொண்டனர். ஒருவரும் குறைகூற வில்லை. எட்டி தாம் திரும்பிவந்ததில் எல்லோருக்கும் திருப்தி யென்று நினைக்கவேண்டுமென அவர்கள் நடந்துகொண் டார்கள். "நான் முன்பே சொல்லவில்லையா," என்று யாரும் கூறவுமில்லை, கூற நினைத்ததாகக் காட்டிக்கொள்ளவுமில்லை.

அவருடைய வருங்காலத்தைப்பற்றி அவர்கள் யோசிக் கும்போது, எட்டி தாம் மற்றவர்களுக்குப் பாரமாக காலங் கழிக்கப்போவதில்லை என்றார். "எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரத்தில் நான் ஏதாவது ஒரு வேலைக்குப் போகவேண்டும். ஒன்றும் செய்யாமல் நான் உட்கார்ந்துகொண்டிருக்க முடியாது," என்று சொன்னார்.

சங். பாட்ரிக் முகங்கோணினார். "நீ உயிர்வாழவேண்டு மானால், சும்மா உட்கார்ந்துகொண்டுதானிருக்கவேண்டும். அதுதான் டாக்டர்களின் உத்தரவு."

வசந்தகாலம் வந்தது. வயல்களில் பசுமை தோன்றியது. தெளிந்த காற்றின் உஷ்ணம் எட்டிக்கு உற்சாகத்தைக் கொடுத்தது. பெற்றோர்களின் இல்லத்தில் டாக்டர்களும் தமையனும் சொன்ன சொற்படி எட்டி நடந்துவந்தார். சுயேச்சையாகச் சுற்றினார். எப்போதாவது, சிறிது வாசிப் பார். மற்ற நேரங்களில் தூங்குவார். எல்லாவற்றையும் விட்டுவிட்டார்—கனவுகாண்பதைத் தவிர!

கோடைகாலத்தில், அவருடைய தேகநிலையில் அபி விருத்தி தென்பட்டது. மறுபடி சதை போட ஆரம்பித்தார். பிறகு குடும்ப டாக்டரான ஏ. டபிள்யூ ரைலி வந்து பரிசோதித்தார்.

“எட்டி இந்தத் தடவை நீ நிச்சயமாகவே தேறிவரு கிருய் என்று நினைக்கிறேன். நீ உன் உடம்பை ஜாக்கிரதையாகப் பார்த்துக்கொண்டு, சாதாரணமாய் வாழ்ந்துவந்தால், ஏதோ ஒரு வேலையைச் சம்பாதித்துக்கொண்டு மூளைக்கு அதிக சிரமம் கொடுக்கவில்லையென்ருல்......”

நோயாளி கோபத்துடன் எழுந்தார். இந்த டாக்டர் என்ன இப்படிப் பேசுகிருர்? தாம் மதகுருவாவதற்குப் படிக்க வேண்டுமென்பதை இவர் உணரவில்லையா?

“நான் எப்போது மதகுருத் தேர்ச்சிக்காக படிக்க ஆரம்பிக்கலாம்?” என்று வினவினுர்.

டாக்டர் தலையை அசைத்தார்.

“நீ இப்போது பலம் பெற்றிருக்கிருய் என்று சொன்னேன். ஏதோ சுலபமான வேலை செய்யக்கூடிய அளவுக்குப் பலமிருக்கிறது. ஆனுல் நீ கூறும் படிப்புக்குவேண்டிய சக்தி உனக்கில்லை,” என்ருர் டாக்டர்.

அவருடைய குரலில் கட்டளையின் தொனி இருந்தது. அவருடைய வாக்கு பிளானகனுக்கு மரண தண்டனையைப் போல ஒலித்ததென்பதை அவர் உணரவில்லைபோலும்.

டாக்டர் சொன்னுர்: “எத்தனையோ சுலபமான வேலைகள் இருக்கின்றன. தேக சிரமம் அதிகமில்லாததாய் ஒன்றைச் சம்பாதித்துக்கொள். ஏதாவது உனக்குப் பிடித்ததாய்ப் பார்த்துக்கொள்.”

டாக்டர் போனபிறகு, இருபத்திரண்டு வயதான பிளானகன் வெகுநேரம் உட்கார்ந்து யோசித்தார். பிறகு அவர் புத்திசாலித்தனமான முடிவுக்கு வந்தார். பொறுமையையும் நம்பிக்கையையும் அவர் கைவிடப்போவதில்லை. கடவுளின் விருப்பத்தை அறிந்து அதன்படி நடப்பதென்று தீர்மானித்தார்.

சில நாட்களுக்குப் பிறகு ஒரு நற்செய்தியுடன் வீட்டுக்கு வந்தார்: தமக்கு ஒரு வேலை கிடைத்திருப்பதாக அறிவித்தார்.

" எப்போதுமே நான் கணக்கில் கெட்டிக்காரன் என்பது உங்களுக்குத் தெரியுமே. குடாஹியில் என்னை அக்கௌண்டன்டாக எடுத்துக்கொள்ள ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்," என்று சொன்னார்.

ஓமாஹாவில் இறைச்சியைப் பதமாகக் கட்டியனுப்பும் பெரிய கம்பெனி அது. முன்பு அயர்லாந்தில் ஆடுமாடுகளைப் பராமரித்துவந்த இளைஞர் இப்போது எத்தனை ஆடுமாடுகள் கொல்லப்பட்டன என்று கணக்குப் பார்க்கும் தொழிலில் அமர்ந்தார்.

அத்தியாயம் 7

குடாஹிக்கு வந்த புதியகணக்குப்பிள்ளையை எல்லோரும் ஒரு நூதன பேர்வழியெனக் கருதினார்கள். முதலாவதாக, அவர் அயர்லாந்திலிருந்து நியூயார்க்குக்குப் போனார், அங்கிருந்து ரோமுக்குச் சென்றார். மற்ற குமாஸ்தாக்களுக்கு அவர் மார்க்கோ போலோவைப்போலக் காட்சியளித்தார். அவர் காரியாலயத்துக்கு வந்த முதல்நாளிலிருந்தே, அவரைப் பற்றி மற்றவர்களிடையே பேச்சு, வம்பளப்பு. அவர் மதகுரு ஆக விரும்பினார், ஆனால் வெற்றியடையவில்லை யென்பது அவர்கள் எல்லோருக்கும் தெரியும்.

சிலர் சிரித்தனர். சிலர் அவரைப் பார்த்து வருத்தப் பட்டனர். ஆனால் அவர்களோடு ஒருவராக அவர் காணப் படவில்லை. அவர்களோடெல்லாம் சௌஜன்யமாகப் பழகிய போதிலும், அவர் தனிப்பட்டவராகவே இருந்தார். குமாஸ்தா வேலைக்குச் சரியாகத் தம்மைப் பக்குவப்படுத்திக் கொண்டார்.

எனினும் எப்போதும் அவருடைய பையில் பூசைப் புத்தகம் இருந்தது. அவர் தினமும் பிரார்த்தனை செய்தால் தான், அவர் தமது கூட்டலைத் தவறில்லாமல் போடமுடியும் என்று காரியாலயத்தில் கிண்டல் செய்யத் தொடங்கினர்.

ஒருநாள் மாலை பிளானகன் ஹாங்க் என்ற குமாஸ்தா வுடன் வீட்டை நோக்கி ஆபீஸிலிருந்து நடந்துகொண் டிருந்தார்.

ஹாங்க் முணுமுணுக்க ஆரம்பித்தார்: "எனக்குப் புரியவில்லையப்பா, உன்னைப்போல் இருக்கும் ஆசாமி ஏன் எப்பொழுது பார்த்தாலும் கையில் பூசைப் புத்தகத்துடன் நடமாடவேண்டுமென்று, என்றைக்காவது ஒருநாள் மதகுரு வாகவேண்டுமென்று, இன்னும் உத்தேசமா?"

கணக்குப் பிள்ளை உத்தியோகத்துக்குப் போன பிறகு, பிளானகன் எதிர்கால வாழ்க்கையைப் பற்றித் தமக்குள்ள அபிலாஷையை யாரிடமும் வெளியிட்டதில்லை. ஆனால் அவர் ஹாங்கின் கேள்விக்குப் பதில் சொன்னார்.

"ஆமாம். என்றாவது நான் மதகுரு ஆவேன் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. ஆனால் அது என் ரகசியம். நீயும் யாரிடமும் அதைத் தெரிவிக்காதே. சரிதானே?"

ஹாங்க் யாரிடமும் சொல்லவில்லை. பிளானகனுக்கு இந்த சம்பாஷணையினால் புதிய சக்தி தோன்றியது. தம் அந்தர் ஆத்மாவில் கிடந்த நம்பிக்கையை வாய்விட்டுக் கூறினார். அவருடைய நண்பர்களும் உறவினர்களும் அந்தத் திட்டம் மலையேறிவிட்டது என்று நினைத்திருந்தனர்.

கணக்குப் பிள்ளை உத்தியோகமும் தமது வாழ்க்கையில் விசேஷ அம்சம் பொருந்தியதாக விளங்குமென்று பிளான கன் நினைத்தார். கணக்கு விஷயங்களையும் வியாபார வழிகளை யும் நன்றாகப் பயில முனைந்தார். வெறும் கணக்கு விவகாரங் கள் மட்டுமன்றி, லட்சக் கணக்கில் வியாபாரம் செய்யும் ஒரு

பெரிய கம்பெனி எவ்வாறு நடத்தப்படுகிறதென்பதையும் உள்ளேயிருந்து கவனிக்கும் சந்தர்ப்பம் அவருக்குக் கிடைத்தது. எவ்வாறாவது ஒரு நாள் இக் கம்பெனியில் கற்றுக் கொள்ளும் விஷயங்கள் உபயோகப்படும். ஆனால், சில டாலர்களைக் கட்டுகை வாங்கி அவற்றைக் கொண்டு ஒரு நாள் அவர் சிறுவர் நகர் ஒன்றை ஸ்தாபிக்கப் போகிறார், அதுவே நாளாக ஆக லட்சக் கணக்கான டாலர்களை முதலாகக் கொண்டு வளரப் போகிறதென்று அவர் அப்போது கனவிலும் காணவில்லை.

பிற்காலத்தில் அவர் நடத்திய முயற்சியில் லாபம் சம்பாதிக்கும் நோக்கம் இல்லை. எனினும் வர்த்தகம், பண லேவாதேவிகளில் நல்ல பரிச்சயமுள்ள ஒருவர் அம்முயற்சியைக் கவனித்து வரவில்லையென்றால் அது வெற்றியடைந்திராது. நாளடைவில் அவர் மேற்கொண்ட சில திட்டங்களை அவரைப் போல அநுபவம் பெறாதவர்கள் மேற்கொண்டிருக்க மாட்டார்கள். நடவாதது என்று தள்ளி விட்டிருப்பார்கள். ஆனால் சங். பிளானகனோ, குடாஹி காரியாலயத்தை ஞாபகப் படுத்திக் கொண்டு, "அவர் மாட்டிறைச்சி விஷயத்தில் அதைச் சாதிக்க முடியுமென்றால், நாம் சிறுவர்கள் விஷயத்திலும் இதைச் செய்ய முடியும்," என்று திடங்கொண்டார்.

குடாஹியில் கணக்குப் பிள்ளையாக நிதானமாக வேலை செய்து வர, கொஞ்சம் கொஞ்சமாக பிளானகனின் தேக நிலையும் அபிவிருத்தி யடைந்தது. ஆகவே 1909-ம் ஆண்டில் வஸந்த காலத்தில் மீண்டும் தமது திட்டங்களைப் பற்றி பிளானகன் புனராலோசனை செய்தார்.

"ஆச்சரியப்படக் கூடிய அளவுக்கு உன் தேக நிலை அபிவிருத்தியடைந்திருக்கிறது. எந்த வேலையையும் நீ மேற்கொள்ளலாம். ஆனால், நீ வசிக்கும் இடத்தைப் பற்றி மட்டும் ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும். மலைக் காற்று உள்ள பிரதேசம் நல்லது, என்றார் டாக்டர்.

சந்தோஷ மடைந்த பிளானகன் மறுபடியும் குடும்பத்தி னரிடம் பேசினார். படிப்பதற்கு அவர் தயாராயிருந்தார். பணம்? குடும்பம் உதவி செய்யத் தயாராயிருந்தது.

சங். பாட்ரிக் பிளானகன் ஒரு யோசனை சொன்னார். எட்டி ஏன் ஆல்ப்ஸ் மலையிலுள்ள கழகத்துக்குப் போகக் கூடாது? அது எல்லோருக்கும் நியாயமாகத் தோன்றிற்று. கடிதங்கள் ஐரோப்பாவுக்குச் சென்றன. அவை கடல் கடந்து போக வேண்டியிருந்ததால்; பல வாரங்கள் வரை பிளானகன் காத்திருக்க வேண்டியிருந்தது. கோடை ஆரம் பத்தில், இன்ஸ்ப்ரக் கலாசாலையிலிருந்து பதில் கிடைத்தது. அது தன் வேத சாஸ்திரப் பகுதியில் எட்வர்ட் பிளானகனை ஒரு மாணாக்கனாக ஏற்றுக் கொண்டது.

அடுத்த மாதம் பிளானகன் மற்றொரு முறை அட்லாண் டிக் மகா சமுத்திரத்தைக் கடந்தார். குடும்பத்தினரை விட்டு மறுபடியும் வாழ வேண்டிய நிர்ப்பந்தம் பிளானகனுக்கு ஏற் பட்டது.

அத்தியாயம் 8

இன்ஸ்ப்ரக் கலாசாலை டைரால் என்ற பிரதேசத்தில் இருக்கிறது. அங்கு பிளானகன் மூன்று ஆண்டுகள் வாசித் தார். முதலிலிருந்து கடைசிவரை ஆனந்தமாகவே காலங் கழித்தார். தேக அசௌக்கியத் தொல்லை ஏதும் இல்லை.

தமது நிலைமை மிக மோசமாயிருந்த நாட்களில்கூட பிளானகன் மனத் தளர்ச்சி யடைந்ததில்லை. தாம் மதகுரு வாகத் தோன்றும் நாள் வரும் என்ற நம்பிக்கை என்றும் அவர் மனத்தில் குடி கொண்டிருந்தது.

1912-ம் ஆண்டு ஜுலை மாதம் 26-ம் தேதி யன்று அவருடைய கனவு நனவாயிற்று. பிரார்த்தனைகளுக்குப் பதில்

கிடைத்தது. அபிலாஷை பூர்த்தியாயிற்று. அன்று காலை இன்ஸ்ப்ரக்கிலுள்ள செயின்ட் இக்னேஷியஸ் ஆலயத்தில் அபிஷேக ஊர்வலம் புறப்பட்டது.

பிளானகனின் உறவினர், நண்பர்கள் எல்லாம் பல்லாயிரக் கணக்கான மைல்களுக்கு அப்பால் இருந்தனர். கலாசாலைக்குப் பக்கத்தில் வசித்தவர்களுடைய குடும்பதினர் வந்து அம் மகோன்னத வைபவத்தைப் பார்த்துக் குதூகலித்தனர். ஆனால் பிளானகனின் குடும்பதினர் கடல்களையும் கண்டங்களையும் கடந்து வருவதென்பது அவ்வளவு எளிதான விஷயமல்ல. அவர்கள் பணக்காரர்களுமல்ல. ஆகவே பிளானகனின் அபிஷேக வைபவத்தைக் காண அவரைத் தவிர அவருக்கு வேண்டியவர்கள் யாரும் அங்கு இல்லை. அவருடைய வாழ்க்கையிலேயே மகா புனிதமான சந்தர்ப்பத்தில் அவர் தனிமையாகவே நின்றார்.

அடுத்த நாள் காலை சங். பிளானகன் அவருடைய முதல் பூசையைச் செய்தார். பிறகு வீடு போகப் புறப்பட்டார். மூன்று வருஷங்கள் பிரிந்திருந்து பிறகு மறுபடியும் ஒமாஹா விலிருக்கும் தமது குடும்பதினரிடம் சென்றார்.

அத்தியாயம் 9

“சங். பிளானகன்! சங். பிளானகன்!”

அந்தக் குரல்களை அவர் எங்கேயும் கண்டு பிடித்து விடுவார். அவருடைய சகோதரிகள், நெல்லியும் ஸூஸியும் ஒமாஹாவிலிருந்து துறைமுகத்துக்கு வந்திருக்கிறார்கள் அவரை வரவேற்க.

அவர்கள் நியூயார்க்கில் லார்க்கின்ஸ் குடும்பத்தினரோடு சில நாட்கள் தங்கியிருந்தனர். கிழக்கேப் பன்னிரண்டாவது தெருவிலிருக்கும் செயின்ட் ஆன் ஆலயத்தில் அமெரிக்காவில் தமது முதல் பூசையைச் செய்தார். பிறகு தமது சகோதரிகளுடன் சங். பிளானகன் ஒமாஹாவுக்குச் சென்றார்.

வீட்டில் அவரை சங். எட்வர்ட் என்று அழைத்தார்கள். அவர்களையெல்லாம் அவர் சந்தித்து மூன்று வருஷங்கள் ஆயின. ஆனால் இம்முறை அவர் வெற்றியுடன் வீடு திரும்பினார். அவரைவர வேற்பதில் அவருடைய சுற்றத்தார் பாசாங்கு உற்சாகம் காட்டவேண்டிய அவசியம் இல்லை. மற்றோர் அரிய தினம் சீக்கிரமே வந்தது. ஓமாஹாவில் அவர் இருந்த முதல் ஞாயிறன்று, தமது தமையன் மதகுருவாக இருக்கும் ஆலயத்தில் பூசைசெய்தார்.

வருங்காலத்தைப்பற்றித் தம்பியுடன் சங். பாட்ரிக் பேசியது இயற்கையே. ஓமாஹா குருவினாட்சியில் சேரப் போவதாக சங். பிளானகன் அறிவித்தார். ஆனால் சங். பாட்ரிக் அவரைப் பொறுமையுடன் இருக்கும்படி கேட்டுக் கொண்டார். அவரை மேற்றிராணியார் எங்கே போகச் சொன்னாலும் போகும்படி சொன்னார். அவர் புதிதாகையால், ஏதாவது ஒரு சிறிய ஆலயத்தில் மற்றொரு மதகுருவிடம் அநுபவம் பெறும்படி சங். பிளானகனை மேற்றிராணியார் அனுப்பலாம் என்பதைச் சுட்டிக்காட்டினார். ஓமாஹாவுக்கு வந்த ஒரு வாரத்திற்குப் பிறகு 200 மைல்களுக்கப்பாலுள்ள ஓநீல் என்ற நகரத்துக்கு சங். பிளானகன் அனுப்பப்பட்டார்.

ஓநீலிலுள்ள செய்ன்ட் பாட்ரிக்ஸ் ஆலயத்தின் மதகுரு சங். மைக்கேல் காஸிடி என்பவர். பக்தி சிரேஷ்டர். அநுதினமும் வெகுநேரம் பிரார்த்தனை, தியானம் செய்பவர். சாப்பாட்டு நேரங்களில் சங். பிளானகனுக்கும் அவருக்கும் அதிக பேச்சு இராது. முதலில் சங். பிளானகனுக்கு இது சிரமமாயிருந்தாலும், சங். காஸிடியின் ஆத்மீக சக்தியைக் கண்டு பரவசமடைந்தார்.

"ஒரு மதகுருவின் வாழ்க்கையில் தியானத்தின் மகிமையை நான் அவரிடமிருந்துதான் கற்றுக்கொண்டேன்," என்று பிற்காலத்தில் சங். பிளானகன் கூறுவதுண்டு.

ஒரீலேச்சுற்றி வசித்து வந்தவர்களில் பெரும்பாலோர் இடையர்கள். அவர்களுடைய இல்லங்கள் இங்கொன்றும் அங்கொன்றுமாகச் சிதறிக்கிடந்தன. அவர்களுடைய ஆன்மார்க்க தேவைகளைக் கவனிப்பதில் சங். பிளானகனுக்கு நிறைய வேலை இருந்தது.

அலுவல்களை முடித்துக்கொண்டு மீண்டும் ஒரீலுக்கு வந்து ஓய்வுநேரங்களில் வாசிக்கத் தொடங்கினர். கடவுளுக்கு இன்னும் அதிக சேவை செய்வதற்கான மார்க்கங்களைப்பற்றி யோசித்தார்.

சங். பளானகனின் ஆசையை சங். காஸிடி சீக்கிரமே புரிந்துகொண்டார். சங். பிளானகன் அங்கே ஆறு மாதங்கள் இருந்தபிறகு, சங். காஸிடி அவரிடம் சொன்னர்: "ஒருவேளை உமக்கு இது ரொம்ப தனிமையான இடமாக இருக்கலாம்.

" அப்படி ஒன்றுமில்லை, தந்தையே, எனக்கு இங்கே நிறைய நண்பர்கள் இருக்கிறார்கள் இப்போது," என்ருர் சங். பிளானகன்.

" இளவயதில் சுறுசுறுப்பாக இருக்க விரும்புவது இயற்கைதானே. இன்னும் அதிக சந்தர்ப்பங்கள் நீர் பெறுவதற்கு நாள் நெருங்கிவிட்டது. நீர் இங்கே உம்முடைய வேலையை நன்ருகச் செய்து வருகிறீர்கள்," என்ருர் சங். காஸிடி."

மூத்த மதகுருவின் மனதில் என்ன யோசனை இருந்தது என்பது சங். பிளானகனுக்குத் தெரியாது. ஆனல் சில தினங்கள் கழிந்தவுடன், ஓமாஹா மேற்றிராணியாரிடமிருந்து உத்தரவு வந்தது. ஓமாஹாவுக்கே சங். பிளானகன் மாற்றப்பட்டார். அங்குள்ள செய்ன்ட் பாட்ரிக்ஸ் ஆலயத்தில் உதவி மதகுருவாக நியமிக்கப்பட்டார்.

கடவுளே மறுபடியும் மறுபடியும் சங். பிளானகனை ஓமாஹாவுக்கு அழைத்துவருவது போலிருந்தது. அங்கே அவருக்காக ஏதோ விசேஷ அலுவல் காத்திருப்பதுபோலிருந்தது.

அத்தியாயம் 10

1913-ம் ஆண்டில் வேனிற்காலம் கடுமையாயிருந்தது. மத்திய மேற்குப் பிரதேசம் முழுவதும் கோதுமை, சோளப் பயிர்கள் கரிந்துபோயின. உஷ்ணக் காற்றினுல் உண்டான சேதம் அநேக மக்களை நிர்க்கதியாக்கிற்று. செய்ன்ட் பாட்ரிக்ஸ் மதகுருவுக்கு அவர்களுக்கு உதவி செய்யும் சந்தர்ப்பம் கிடைத்தது. அந்த உதவியிலிருந்துதான் அவரது வாழ்க்கையிலேயே முக்கியமான தொண்டு ஆரம்பமாயிற்று.

மதகுரு ஜான் டி ஸ்மித் என்பவருக்கு உதவி மதகுருவாக காலம் முழுவதும் சங். பிளானகன் உழைத்தார். ஏழை எளியவர், நோயாளிகள், மனக்கலக்கம் கொண்டவர்கள் ஆகியோருக்கு சிச்ருஷை செய்வதில் ஈடுபட்டார். ஓமாஹாவில் அப்போதே வறுமையில் பலர் வாடிவந்தனர். மற்ற ஊர்களிலிருந்து அநேகர் அந்நகரத்துக்கு அடிக்கடி வருவார்கள். ஒவ்வொரு மாதமும் நூற்றுக்கணக்கில் ஜனங்கள் வரலாயினர். அவர்கள் எல்லோரும் ரயில்வேயிலோ, இறைச்சி கம்பெனியிலோ, மற்ற ஸ்தாபனங்களிலோ வேலை கிடைக்குமோ என்று சுற்றிவந்ததால், நகரத்தில் குடும்பங்களுடன் வேலையில்லாமல் பலர் கஷ்டப்பட்டு வந்தனர்.

அம்மாதிரி தங்க இடமின்றித் தவிக்கும் குடும்பங்களுக்கு உதவி செய்ய சங். பிளானகன் தாமாகவே முன்வந்தார். அவர்களுக்கு உணவும் வேலையும் சம்பாதித்துக் கொடுத்தார். இது அவருக்கு, ஆலய அலுவல்களோடு அதிகப்படியான வேலை. முதலில் அது எளிதாகத்தான் இருந்தது. ஆனால் பயிர்கள் கரிந்துபோனபிறகு, அவருடைய வேலை அதிகமாயிற்று.

மத்திய மேற்குப் பிரதேச ராஜ்யங்களில் அந்தக் காலத்தில் அறுவடை காலத்தில் விவசாயிகளுக்கு உதவிசெய்வோர் ஆயிரக்கணக்கில் இருந்தனர். அவர்களுக்கு வேறுவேலை கிடையாது. சதாரணமாக அவர்கள்

கான்ஸாஸ் ராஜ்யத்திலிருந்து புறப்படுவார்கள். ஒவ்வொரு ராஜ்யமாக அறுவடை காலத்துக்குச் சரியாக அவர்கள் பிரயாணம் செய்வார்கள். நாற்பது அல்லது ஐம்பது பேர்கள் ஒன்ருய்ச் சேர்ந்து கும்பல் கும்பலாக அவர்கள் போவார்கள். அறுவடை செய்வதற்கு அவர்களுக்கு நல்ல கூலி கிடைக்கும். அவர்கள் நெப்ராஸ்கா சேருவதற்குள், தொடர்ந்து வரும் மாரிக்காலத்துக்குத் தேவையான பொருளைச் சேமித்து வைத்துக் கொள்வார்கள். மாரிக்காலத்தில் ஓமாஹாவில் பொழுதைப் போக்கிக்கொண்டு வசந்தகாலம் வரும்வரை காத்திருப்பார்கள்.

ஆனுல் 1913-ம் ஆண்டில் அவர்கள் கான்ஸாஸில் புறப்பட்டபோதே அறுவடைக்குப் பயிர் இல்லை. மற்ற வருஷங்களைப் போலவே அவர்கள் வடக்குநோக்கி நகர்ந்தார்கள். ஆனுல் எங்கேயும் அதே அனுபவம்தான். ஏதோ இங்கும் அங்குமாகச் சிலருக்கு அறுவடை வேலை கிடைக்கும்; அவ்வளவுதான்.

இலையுதிர்காலம் ஆரம்பமாகும்போது, பஞ்சடைந்த கண்களுடன் அகதிகள் ஓமாஹாவுக்கு வரத்தொடங்கினர். சிறு சிறு கோஷ்டிகளாக துயரம் தோய்ந்த முகங்களுடன் அவர்கள் வந்தார்கள். பல மாதங்களாக அவர்களுக்கு வேலையில்லையாதலால் யாரிடமும் பணமில்லை. நகரத்தில் ஏதாவது வேலைபார்க்கலாமென்று அவர்கள் வந்தார்கள். ஆனுல் அறுவடை மோசமாயிருந்ததால், வியாபாரமும் மந்தப்பட்டிருந்தது. முன்புபோல் வேலை கிடைக்கவில்லை.

வெளியே போகும்போதெல்லாம், சங். பிளானகன் அந்த அதிருஷ்டமற்ற மக்களைக் காண்பார். நம்பிக்கை இழந்து, எதிர்காலத்தைப்பற்றிய பீதியுடன் அவர்கள் தெரு ஓரங்களிலும், முனைகளிலும் நின்றுகொண்டிருப்பார்கள். அவர்கள் பிச்சைக்காரர்கள் அல்ல, தொழிலாளர்களாயிருந்

தவர்கள். அவர்கள் பணம் கேட்கவில்லை. உண்ண உணவும், உடுக்க உடுப்புமே அவர்கள் கோரினர்.

சங். பிளானகனின் சம்பளம் சொற்பந்தான். மாதம் இருபத்தைந்து டாலர்கள் (119 ரூபாய்). அதிலிருந்து அவர் அவர்களுக்கு அதிகம் கொடுக்க முடியவில்லை. ஆனால் ஆலயத்தின் மூலமாகச் சிறிது உணவு பகிர்ந்து கொடுக்க முடிந்தது. ஆனால் நாளுக்குநாள் பட்டினிப் பட்டாளம் பெரிதாகிக்கொண்டே வந்தது. கோயில் வருமானம் அதைச் சமாளிக்க முடியாதென்பதை சங். பிளானகன் உணர்ந்தார். வேறு ஏதாவது புதிய திட்டம் ஒன்றை யோசிக்கலானார்.

கோயிலுக்கருகே ஒரு பலசரக்குக் கடை இருந்தது. அதன் சொந்தக்காரர் சங். பிளானகனின் நண்பர். இருவரும் இப்பிரச்னையைப்பற்றி யோசித்தார்கள்.

“மனிதர்கள் பட்டினிகிடக்க நாம் பார்த்துக்கொண்டிருக்க முடியாது,” என்றார் பலசரக்குக் கடைக்காரர்.

“காப்பியும், சிறிது உணவுமாவது நாம் கொடுக்க முயற்சி செய்வோம்,” என்றார் பிளானகன்.

அதற்கு வேண்டிய பணத்துக்காகத் தமது சம்பளத்தில் ஒரு பகுதியைக் கொடுக்க சங். பிளானகன் முன்வந்தார். பலசரக்குக் கடைக்காரரும் பண உதவி செய்ய ஒப்புக்கொண்டார். இருவருமாகத் தங்களுடைய நண்பர்களையும் உதவி செய்யுமாறு தொந்தரவு செய்வதென்று தீர்மானித்தார்கள். அவர்கள் ஒரு பங்கீடு திட்டத்தை வகுத்தார்கள். வேலையில்லாதவன் மதகுருவின் இடத்துக்கு வந்து சீட்டுப் பெற வேண்டும். அச்சீட்டைப் பலசரக்குக் கடையில் கொடுத்து அதற்குப் பதிலாக காப்பி, பால், காய்கறி முதலியவற்றைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

சீட்டுகள் நிறைய கொடுக்க முடியாதென்பதைச் சீக்கிரமே அவர்கள் உணர்ந்தார்கள். பசியால் வாடும் மக்கள்

மதகுரு அகத்து வாசலில் காத்துக்கிடந்தனர். அதுமட்டுமின்றி, கதிபற்ற இம்மக்களுக்கு உணவு அளித்தால் மட்டும் போதாது என்பதை சங். பிளானகன் கண்டார். பலருக்குத் தங்க இடமில்லை தினப் பத்திரிகையைப் படுக்கையாக விரித்துப் போட்டு, அநேகர் திறந்த வெளியிலும், நிலக்கரி மேடுகளிலும் படுத்து உறங்கி வந்தனர். நகர அதிகாரிகளோ பிரச்னையைத் தீர்க்க வழி தெரியாமல் தவித்தனர். குளிர் காலமும் நெருங்கிக் கொண்டிருந்தது.

செய்ன்ட் வின்ஸென்ட் டி, பால் சபைக்காக நன்கொடை சேகரிப்பதில் சங் பிளானகனுக்கு ஒரு சமயம் ஒரு வியாபாரி உதவி செய்திருந்தார். அவரிடம் ஓர் இரவு சங். பிளானகன் அகதிகளின் விஷயத்தைப் பிரஸ்தாபித்தார். "இம் மனிதர்கள் எப்படி வசிக்கிறார்களென்று நானே நேரில் பார்க்கலாமா?" என்று அவ் வியாபாரி கேட்டார்.

இருவருமாக நிலக்கரி மேடுகளுக்குச் சென்றார்கள். இருட்டில் முதலில் ஒன்றும் தெரியவில்லை. கொஞ்சம் கொஞ்சமாக, உருவங்கள் தென்பட்டன. சிலர் நின்று கொண்டிருந்தனர். மற்றவர்கள் தரையிலும், பழைய மரப் பலகைகள் மீதும் பத்திரிகைகளை விரித்து ஒடுங்கிப் படுத்திருந்தனர். அவர்கள் ஒழுங்காக வேலை செய்து, ஜீவிதம் செய்து வந்தவர்கள். ஒவ்வொருவரும் இன்றும் வேலை செய்து, பிழைக்கத் தயாராயிருந்தவர்கள் ஆனால் அவர்களுக்கு வேலை கிடைக்கவில்லை. அவர்களுக்கு மனச் சோர்வு ஏற்பட்டு விட்டது. அவர்களைத் தூக்கி விட்டு ஒத்தாசை செய்ய யாரும் இல்லை.

"நகர அதிகாரிகள் ஏன் ஏதாவது செய்யக் கூடாது?" என்று கேட்டார் வியாபாரி.

"அவர்கள் பெண்களையும் குழந்தைகளையும் பராமரிக்கிறார்கள். ஆனால் ஆண்களுக்குக் கிடைப்பதெல்லாம் நாங்கள் கொடுக்கும் உணவுச் சீட்டுகள் தான். அவை எல்லோருக்கும்

கிடைப்பதுமில்லை," என்று பதில் சொன்னார் சங். பிளானகன்

"நாம் என்ன செய்யலாம்?"

"நாம் பிரார்த்தனை செய்யலாம், கடவுள் வழி காட்டுவார்," என்றார் சங். பிளானகன் நம்பிக்கையோடு.

அன்றிரவு முழுதும் உறங்காமல் படுத்திருந்தபோது, சங். பிளானகனுக்கு இதைப் பற்றியே யோசனை. அகதிகளுக்கு உதவி செய்யுமாறு பொது மக்களை எப்படி தட்டி எழுப்புவது என்று யோசித்தார். கடைசியில் ஓர் எண்ணம் உதித்தது. முதலில் அவருக்கே அது பிரம்மப் பிரயத்தனமாகப் பட்டது. ஆனால் முயற்சி செய்யுமாறு ஏதோ ஒரு அமானுஷ்ய சக்தி அவரைத் தூண்டிற்று.

ஒரு ஹோட்டலை ஏற்படுத்த சங். பிளானகன் முடிவு செய்தார்.

முதலில் மூத்த மதகுருவிடம் சென்றார். சங். ஸ்மித் அவரது கையைக் குலுக்கி விட்டு, மேற்றாணியாரிடம் அவரை அழைத்துச் சென்றார். ஆலயத்துக்குச் சொத்து அதிகமில்லையென்பதை மேற்றாணியார் சுட்டிக் காட்டினார். இருக்கும் பணத்தைக் கொண்டு அநாதைகள், நோயாளிகள் முதலியோருக்கு சிச்ருஷை செய்து வருகிறது தேவாலயம். அவர்களைத் தேவாலயம் கை விட்டுவிட முடியாது. இத்தருணத்தில் நூற்றுக்கணக்கான அகதிகளுக்கும் உதவி செய்யத் தேவாலயத்தால் இயலாது என்றார் மேற்றாணியார்.

"ஆனால் நீர் விரும்பினால் உங்களால் ஆன முயற்சியைச் செய்து பாருங்கள். எங்களுடைய ஆசிர்வாதமும் ஆத்மீக ஆதரவும் உங்களுக்கு உண்டு. அதற்கு மேல் நாங்கள் செய்யக் கூடியது ஒன்றுமில்லை. பண உதவி செய்வதென்பது முடியாத காரியம்," என்றார் அவர்.

சங். பிளானகனுக்குப் பரம திருப்தி, மேற்றாணியார் பண உதவி செய்ய மறுத்தார் என்று அவர் மனச் சோர்வு

அடையவில்லை. தாம் மேற்கொண்டு முயற்சி செய்ய உத்தரவு கிடைத்து விட்டதே அது வெற்றி. இனி அவர் செய்ய வேண்டியதெல்லாம் என்ன? பணம் வேண்டும்.

பிற்காலத்தில் சங். பிளானகனே சொன்னார்: "அப்போது துடிப்பும் உற்சாகமும் கொண்ட இளைஞனாகவே இருந்தேன் நான். பணத்தைப் பற்றி அதற்கு முன் அதிகம் நான் யோசித்ததில்லை. பிறகு தான் பணம் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்று நான் உணர்ந்தேன்."

அன்றிரவு தம்மைப் போலவே துடிப்பும் உற்சாகமும் நிறைந்த இளைஞர்களை அழைத்தார். எல்லோரும் அவருடைய நண்பர்கள். சிறிய சம்பளங்களைக் கொண்டு குடும்பங்களைக் காப்பாற்றி வருபவர்கள். சில டாலர்களுக்கு மேல் அவர்களில் ஒருவராவது கொடுக்க முடியாது.

எனினும், சங். பிளானகன் கிடைக்கக் கூடிய தொகையைக் கூட்டிப் பார்த்தார். "உங்களிடமிருந்து மொத்தம் ஐந்திலிருந்து பத்து டாலர்கள் ஒவ்வொரு மாதமும் நான் எதிர்பார்க்கிறேன். என் குடும்பதினரிடமிருந்து நான் ஏதாவது பெறலாம். ஆனால் இதைக் கொண்டு ஒரு ஹோட்டலை நடத்த முடியாதே. அதாவது வாடகை கொடுக்க வேண்டியிராத இடமாகக் கிடைத்தாலொழிய."

"அப்படி ஏதாவது இடம் கிடைத்தால் அது ஓர் அற்புதம் தான்," என்றார்கள்.

"அது வாஸ்தவம் தான்."

வர்த்தகமும் பயிர்த்தொழிலும் முடங்கிக் கிடந்த அந்நாளிலும், நகரம் முழுதும் நிறைய வீடுகள் காலியாயிருந்தனவே ஒழிய, சங். பிளானகன் கொடுக்கக் கூடிய வாடகைக்கு வீடு கிடைக்கவில்லை. பலசரக்குக் கடைக்காரர் சொன்னார்: "நல்ல யோசனை தான். ஆனால் உங்களிடம் சில டாலர்கள் தான் இருக்கின்றன. அதை முதலாகக் கொண்டு

ஹோட்டல் நடத்த யோசிக்கையில், வீட்டு வாடகைக்கு எங்கே போவீர்?

“நம்பிக்கையும் ஒரு வித முதல் தான்,” என்றார் சங். பிளானகன்.

அவருடைய நம்பிக்கையும் இரண்டு மூன்று நாட்களில் பலனளித்தது. ஒரு வீட்டைக் கண்டுபிடித்தார். ஆனால் அதை ஓர் அற்புதம் என்று யாரும் வர்ணிக்க முடியாது. பழங்காலத்துக் கட்டடம். ஒரு காலத்தில் அது பர்லிங்டன் ஹோட்டல் என்ற பெயருடன் புகழ் பெற்றிருந்தது. செங்கல் சுவரில் அந்தப் பெயரின் எழுத்துக்கள்கூட லேசாகத் தென் பட்டன. ஆனால் சமீபத்தில் பல ஆண்டுகளாக அதில் யாரும் வசிக்கவில்லை. ஜன்னல் கண்ணாடிகள் உடைந்து போயிருந் தன. கதவுகளைத் திறக்க முடியாது.

யாரும் நெருங்காத அவ்வீட்டைப் பார்த்ததும், சங். பிளானகனின் இதயம் பூரித்தது. ஏதோ கிடைப்பதற்கரிய மாணிக்கத்தைக் கண்டெடுத்தது போல் இருந்தது அவருக்கு. இடம் எவ்வளவு மோசமாக இருக்கிறதோ, அவ்வளவும் அவருக்கு நல்லது தானே. அப்போது தான் அவருக்கு அந்த இடம் மலிவாகக் கிடைக்கும்.

வீட்டுச் சொந்தக்காரருடன் சங். பிளானகன் உள்ளே சென்று பார்த்தார். அவர் எதிர்பார்த்ததைவிட மோசமா யிருந்தது உட்புறம். கதவுகள் கீல்களை விட்டு விழுந்து விடும் போலிருந்தன. சுவர்களிலிருந்து சுண்ணம்பு கீழே விழுந்து கிடந்தது. மாடிக்குச் சென்றால், அங்கே கூரையில் பெரிய துவாரம் அவர்களை வரவேற்றது.

“கொஞ்சம் சரி பார்க்க வேண்டும்,” என்று ஒப்புக் கொண்டார் வீட்டு முதலாளி.

அவர் கேட்ட வாடகை சொற்ப தொகைதான். முதல் மாத வாடகை கொடுப்பதற்கு வேண்டிய பணம் சங். பிளான கனின் பையில் இருந்தது.

இருப்பினும், அவர் மிகவும் ஆவலாய் இருப்பதாய்க் காட்டிக் கொள்ளவில்லை. வர்த்தகக் கம்பெனி அநுபவம் அவருக்குத் துணையாக இருந்தது.

"கூரையிலிருக்கும் துவாரத்தை நீங்கள் அடைத்துக் கொடுத்தாலொழிய, நான் இவ்வீட்டை வாடகைக்கு எடுத்துக் கொள்ள யோசிக்க மாட்டேன். மழையிலும் பனியிலுமிருக்கிற ஏழைகளை இங்கே அழைத்து வருவதில் அர்த்தமில்லை. இங்கேயும் அவர்கள் மீது பனியும் மழையும் கொட்டும்," என்றார் அவர் சாவதானமாக.

வீட்டு முதலாளி துவாரத்தை அடைத்துக் கொடுக்கத் தயாராயிருந்தார்.

சங். பிளானகனுக்கு ஹோட்டல் கிடைத்து விட்டது.

இந்த சாதனையில் பெருமையடைந்து, சங். பிளானகனின் நண்பர்கள் இன்னும் சில டாலர்களைச் சேகரித்தனர். எல்லோரும் தங்களாலான உதவியைச் செய்யத் தயாராயிருந்தனர். ஆனால் அவர்களுக்கு வேலை இருந்தது. ஆகவே, ஹோட்டலை நிறுவிக்க வேண்டிய வேலை பூராவும் சங். பிளானகனின் தோளிலேயே விழுந்தது. அவர் அவருடைய தமக்கையின் உதவியை நாடினார்.

சங். எட்வர்ட் வாடகைக்கு எடுத்திருக்கும் வீட்டை நெல்லி பார்த்தார். "இது இடிந்து விழுந்துகொண்டிருக்கிறதே. இதிலா ஏழை மக்களைக் குடியிருக்கச் சொல்லப் போகிறாய்? இதையெல்லாம் பழுது பார்க்க முடியுமா?" என்று கேட்டார் அவர்.

"எல்லாவற்றையும் சரியாக்கப் போகிறோம். ஆனால் எப்படி என்று இப்போது என்னைக் கேட்காதே. ஒரு யோசனை இருக்கிறது," என்று பதில் சொன்னார் சங். பிளானகன்.

அன்றிரவு அவர் கிலக்கரி மேட்டுக்குச் சென்று, அங்குள்ளவர்களிடம் சொன்னார். "நான் ஒரு ஹோட்டலை ஆரம்பிக்க நினைத்திருக்கிறேன். சாதாரண ஹோட்டல் அல்ல. நீங்கள் எல்லோரும் தங்குவதற்கான இடம்."

அவர்கள் அவரை முறைத்துப்பார்த்தார்கள். "எங்களிடம் பணமில்லையென்று உங்களுக்குத் தெரியாதா, தந்தையே," என்று கேட்டார்கள்.

அவர் பர்லிங்டன் ஹோட்டலை வர்ணித்தார். அவர்களில் சிலர் வந்து அதைப் பழுதுபார்க்கலாம். அவர்கள் அங்கே தங்கியிருக்கப் பணம் கொடுக்க வேண்டியதில்லையென்று தெரிவித்தார். இதற்குள் அவரைச்சுற்றி நூறு பேர்க்குமேல் சேர்ந்துவிட்டார்கள். பலர் தாங்கள் வரத் தயார் எனக் கத்தினர்.

"எந்த வேலையையும் செய்ய எங்களிடம் ஆட்கள் இருக்கிறார்கள், தந்தையே. தச்சர்கள், குழாய் போடுவோர்கள். யார் வேண்டும் உங்களுக்கு?"

குளிர் காலம் தொடங்க இருந்தது. நாட்களை வீணாக்க முடியாது. மறுநாளே ஆட்கள் சங். பிளானகனின் ஹோட்டலில் சந்தித்தனர். சரித்திரத்திலேயே நூதனமான வேலை துவக்கமாயிற்று. சுயமரியாதையுள்ள, ஆனால் காசில்லாத சிலர் மறந்துபோன தொழில்களை ஒருமத குருவின் ஆக்ஞையின்கீழ் செய்யத் தொடங்கினர். இடிந்து கடந்த வீட்டை ஹோட்டலாக்க முனைந்தனர்.

அடுத்ததாக வீட்டைப் பழுதுபார்க்க சாமான்கள் வேண்டுமே. சங். பிளானகன் புறப்பட்டார். அடுத்துள்ள கடைகளுக்கும் கம்பெனிகளுக்கும் சென்று விஷயத்தை விளக்கினார். வர்ணம், பிரஷ், சுண்ணாம்பு, கல் எல்லாம் எப்படியோ கொணர்ந்து வந்து சேர்த்தார்.

தச்சர்கள் மேஜைகள், நாற்காலிகள், கட்டில்கள் முதலிய வற்றைச் செய்யத் தொடங்கினர். உதவாத மரப்பலகைகள், பழைய மரச் சாமான்கள் முதலியவற்றைப் பலர் அளித்து உதவினர்.

பத்து நாட்களில் பர்லிங்டன் ஹோட்டலின் சுவர்களுக்குச் சுண்ணும்பு பூசி ஆயிற்று. தரை சுத்தம் செய்யப்பட்டது. கட்டில்களும் நாற்காலிகளும் தயாராயிருந்தன. வேலை யில்லாத அறுவடைகாரர்களுக்கு அன்னதான சமாஜம் தோன்றிவிட்டது.

பல சரக்குக் கடைக்காரர்கள், பால்காரர்கள், ரொட்டிக் கிடங்குக் காரர்கள் எல்லோரையும் அணுகினுர் சங். பிளான கன். ஒரு கடைக்காரர் தினமும் அவரைக்காய் கொடுப்ப தாகச் சொன்னுர். மற்றொருவர் உருளைக்கிழங்கு அனுப்ப ஒப்புக்கொண்டார். பால் கிடங்குகளும் ரொட்டி கிடங்கு களும் மிகுதியாகும் பாலையும் ரொட்டியையும் அனுப்பின. நண்பர்களும், உறவினரும் பண உதவியும் செய்தனர். ஓமாஹா நகரத்துப் பெண்டிர் கிழிந்த ஆடைகள், ஜமக்காளங் கள், உபயோகத்திலில்லாத கட்டில்கள்கூட அனுப்பி வைத் தனர்.

வெகு நாட்கள் வரை மனித வாசனையில்லாமல் தூங்கிக் கொண்டிருந்த பர்லிங்டன் ஹோட்டலைத் திறந்த அன்றிரவு அதுவரை ஏற்பட்ட செலவைக் கணக்கு பார்த்தார் சங். பிளானகன். 150 டாலர்களுக்கும் குறைவாகத்தான் செல வாகியிருந்தது. அதுவும் நண்பர்களிடமிருந்து கிடைத்த நன்கொடைகள். எல்லோருக்கும் சேரவேண்டிய பாக்கியைக் கொடுத்த பிறகும், அடுத்த மாத வாடகைக்கு உதவும்படி சில டாலர்கள் மிகுதியாக இருந்தன.

அகதிகளுக்காக ஆரம்பித்த ஹோட்டல் நடக்கத் தொடங்கியது.

அத்தியாயம் 11

முதலில் அதிக அகதிகள் அங்கு வரவில்லை. ஒவ்வொரு வராகச் சந்தேகத்துடன் நிலக்கரி மேட்டிலிருந்து அவர்கள் வரலாயினர். முன்பே வேலைசெய்ய ஒப்புக்கொண்ட கோஷ்டியும் மற்றும் சிலரும்தான் முதலிரவன்று இருந்தனர்.

சங். பிளானகன் கால்கடுக்க நின்று கொண்டு வருவோரை வரவேற்று உபசரித்தார். பழைய ரொட்டி, பால், விரிப்பு இல்லாத படுக்கைகள் தாம் அவர் அவர்களுக்கு அளிக்க முடிந்தது. சமையல் வேலையை இன்னும் ஆரம்பிக்கவில்லை. எனினும் நிலக்கரி மேட்டுக்கு இது எவ்வளவோ மேலாயிற்றே.

மறுநாள் மூவர், நால்வராக வரத்தொடங்கினர். சில நிமிஷங்கள் ஹோட்டலுக்கு வெளியே நிற்பார்கள். உள்ளே எட்டிப்பார்ப்பார்கள். அவர்களுக்குத் தெரிந்தவர்கள் யாராவது தென்பட்டால், உள்ளே நுழைவார்கள்.

முதல் வாரத்தில் ஐம்பத்தியேழு "விருந்தாளிகள்" வந்தார்கள். பிறகு, நூறுபேர்வரை ஹோட்டலில் தங்கியிருக்கலாயினர். இப் புதுமாதிரிச் சத்திரத்தில் எல்லோரும் அவர்களால் முடிந்த வேலையைச் செய்யவேண்டும். எல்லோரும் உற்சாகமாகச் செய்தார்கள்.

ஒருவன் வீட்டைப் பெருக்கினால், மற்றொருவன் ஜன்னல் களைக் கழுவவேண்டும். இன்னொருவன் படுக்கைகளைப் போடவேண்டும். சிலர் சமையற்காரர்களானார்கள். சிலர் கடைகளுக்குச் சென்றார்கள். மற்றும் சிலர் உணவைத் தானமாகப் பெற்று எடுத்து வந்தார்கள். புதிதாக ஹோட்டலுக்கு வர விரும்புவோரை சிலர் விசாரித்துச் சேர்த்தார்கள்.

தொந்தரவு கொடுப்போரும் ஹோட்டலில் இருந்தார்கள். ஹோட்டலைத் திறந்த சில நாட்களுக்குப் பிறகு, சங். பிளான

கன் வாசல் வழியே போய்க்கொண்டிருந்தார். மேல்மாடியில் ஒரே கஃளபரம். விரைந்து சென்ருர். அங்கே ஒரு வேலையாள் மற்ருெரு வேலையாளை விளக்குமாற்ருல் புடைத்துக்கொண்டிருந்தான். சண்டையில் கலந்துகொள்ளத் தயாராக ஐந்தாறுபேர் காத்துக்கொண்டிருந்தனர். மதகுரு ஒரு கூச்சல் போடவே, நிசப்தம் நிலவியது. சண்டையும் ஓய்ந்தது.

“என்ன சமாச்சாரம்?” என்று கேட்டார் சங். பிளானகன்.

விளக்குமாருேடு இருந்தவன் தலையில் ஒரு குட்டையைக் கட்டிக்கொண்டு அறையைச் சுத்தம் செய்துகொண்டிருந்தானும். மற்றவன், “அதோ பார், கிழவி பெருக்கிக்கொண்டிருக்கிருள்,” என்ருனும்.

“கிழவி” உடனே விளக்குமாற்றைப் பிரயோகிக்க ஆரம்பித்தான்.

அவர்கள் எங்கே இருக்கிருர்கள் என்பதை மறந்துவிட்டார்களா என்று கேட்டார் சங். பிளானகன். “இம்மாதிரி உங்கள் தாய் வீட்டில் சண்டையோடுவீர்களா,” என்ருர்.

“நிச்சயமாக” என்று பதில் வந்தது.

“ஆனுல் இங்கே சண்டை போடக்கூடாது”, என்று கட்டுத்திட்டப்படுத்தினுர்.

பொதுவாக, எல்லாம் தொந்தரவின்றியே நடந்து வந்தது. பழைய துணிகளைத் தைத்து அவற்றை உபயோகிப்பதற்காக, ஒரு தையல்கடை ஆரம்பிக்க வேண்டுமென்று சங். பிளானகன் யோசனை சொன்னுர். விருந்தாளிகளில் ஒருவன் முன்வந்தான். அவன் அறுவடைத் தொழிலில் இறங்குமுன் தையல்காரனுயிருந்தவன். சங். பிளானகன் சிறிது சம்பளம் தருவதாகக் கூறினுர். ஹோட்டலின் ஒரு பகுதியில் தையல் கடை திறக்கப்பட்டது.

ஒரு நாள் காலை ஓமாஹா நகரத்தைச் சேர்ந்த மூன்று பெண்மணிகள் ஹோட்டலுக்குள் நுழைவதை சங். பிளானகன் கண்டார். அவர்கள் பணக்காரக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள். அவருக்கு உதவிசெய்ய ஆசைப்பட்டார்கள். அதிலிருந்து ஆரம்பமாயிற்று ஹோட்டலின் "பெண்டிர் உதவி". அதில் பல மதங்களைச் சேர்ந்த குடும்ப ஸ்திரீகள் பங்கெடுத்துக்கொண்டனர். பணம் வசூலித்துக் கொடுப்ப தோடல்லாமல் அவர்கள் அறைகளை அலங்கரித்து, சமையல் வேலை செய்தனர். சங். பிளானகன் பூரிப்படைந்தார். அவர் அப்பொழுதும் ஆலய அலுவல்களைக் கவனித்து வந்தார். ஹோட்டலை நடத்துவது ஓய்வு நேரத்து வேலையாக இருந்தது.

வெகு சீக்கிரத்தில் பலர் முழு நாட்களுக்கும் வேலைக்கு அமர்த்தப்பட்டுச் சம்பளம் கொடுக்கப்பட்டனர். வேலை சம் பாதித்துக் கொடுக்கும் ஸ்தாபனம் ஒன்றும் ஹோட்டலில் ஏற்படுத்தப்பட்டது. அதற்கு ஓமாஹா மக்கள் அனைவரும் உதவி செய்தனர். நகரத்தில் எங்கு வேலை காலியாயிருந் தாலும் பர்லிங்டனுக்கு வந்து விஷயத்தைச் சொன்னார்கள். ஹோட்டலிலுள்ள ஸ்தாபனம் வேண்டிய ஆட்களை அனுப்பி வைக்கும்.

வரும் விருந்தாளிகளிடம் பணம் இல்லாதவரையில் அவர்கள் இலவசமாக ஹோட்டலில் தங்கியிருக்கலாம். பணம் சம்பாதிக்கத் தொடங்கினால், தங்குவதற்கு ஒரு நாளைக்கு பத்து சென்ட் வீதமும், ஒரு சாப்பாட்டுக்கு ஐந்து சென்ட் வீதமும் ஹோட்டலுக்குப் பணம் கொடுக்க வேண்டும்.

ஹோட்டலிலேயே நிரந்தரமாகத் தங்கியிருந்தவர் 75 பேர். அவ்வப்போது வந்து தங்கியிருந்து செல்வோர் பலர். அடிக்கடி ஒரு நாளில் 100 பேர்களுக்கு மேல் ஹோட்டலில் தங்கியிருப்பது சகஜமாயிற்று. சிலர் வாசலில் படுத்துக் கொள்ளவேண்டி வரும். ஆனால், இடமில்லையென்று யாரை

யும் போகச்சொல்ல நேர்ந்ததில்லையென்பதில் சங். ப்ளானக னுக்குப் பெருமை.

குளிர்காலம் முடிவடைவதற்குள் ஹோட்டலின் நிர்வாகம் நிலைத்து விட்டது. வேலையில்லாத அறுவடைக்காரர்கள் விட்டு வேலையில் நன்கு தேர்ச்சி யடைந்துவிடவே ஓமாஹா நகரத்துக் குடும்பஸ்திரீகளின் உதவி அவசியமில்லாமற் போயிற்று. அவர்களும் தங்களுக்கு ஒன்றும் வேலையிருப்ப தில்லை யென்று குறை கூறலாயினர்.

வசந்தகாலம் பிறக்க, ஹோட்டல் விருந்தாளிகள் ஒவ் வொருவராகப் புறப்படலாயினர். ஜூன் மாதத்திற்கெல்லாம் எல்லோருமே சென்று விட்டனர். பர்லிங்டன் ஹோட்டல் மறுபடியும் "விரிச்" சென்றிருந்தது. சங். ப்ளானகன் கணக்குப் போட்டுப் பார்த்தார். ஓமாஹா நகரத்தினர் ஆதர வினால், நஷ்ட மடையாமல் சிறிது லாபத்துடனேயே ஹோட்டலை நடத்துவது சாத்தியமாயிற்று. பர்லிங்டனைப் போன்ற ஓர் இடம், தங்க இடமில்லையென்று யார் வந்தாலும் அவர்களை வரவேற்கத்தக்க ஸ்தாபனமாக சாசுவதமாக இருக்க வேண்டுமென்று சங். ப்ளானகனுக்குத் தோன்றிற்று. அதற்கு பர்லிங்டன் போதாது. பெரிய இடம் ஒன்றைத் தேடிச் சுற்ற ஆரம்பித்தார் மதகுரு.

அவர் புதிதாகக் கண்டுபிடித்த ஹோட்டல் நான்கு மாடிகள் கொண்ட வீடு. நூற்றுக்கணக்கானவர்கள் தங்க வசதியுள்ள இடம். வாடகை குறைவு. பர்லிங்டன் ஹோட்டலை விட நல்ல நிலைமையில் இருந்தது அக் கட்டடம். பர்லிங் டனில் தங்கியிருந்த சிலருடைய உதவியைக் கொண்டு அது பழுது பார்க்கப்பட்டது. சில வாரங்களில், புதிய இடம் "தொழிலாளர்களின் ஹோட்டல்" என்ற பெயருடன் குளிர் கால வாடிக்கைக்காரர்களை வரவேற்கத் தயாராயிருந்தது.

இவ் வருஷம் நல்ல விளைச்சல். அறுவடை வேலை செய்துவரும் ஆட்களும் பணத்துடன் திரும்பினர். ஆனால்

புலர் சங். பிளானகனுடைய ஹோட்டலைத் தேடிக்கொண்டு வந்தனர். அவர்கள் மதகுருவுடன் தங்க விரும்பினர். புதிய ஹோட்டலில் செய்திருக்கும் அபிவிருத்திகளைப் பார்த்த வுடன் அவர்களுக்கு ஒரு கவலை தோன்றிற்று.

"இந்த விஷயம் எல்லோருக்கும் தெரிந்தால் பலவித மான ஆட்கள் வரத் தொடங்குவார்கள். எங்களைப் போலத் தொழிலாளர்கள் மட்டுமல்ல. உதவாக்கரைகள், குடியர்கள் முதலியோரும் வருவார்கள். பிறகு உங்களுக்குத் தொந்தரவு தான்," என்று அவர்கள் சங். பிளானகனை எச்சரித்தார்கள்.

சங். பிளானகன் பெருமூச்சு விட்டார். அவர் குடியர் களையும் வரவேற்கத்தான் வேண்டும். அப்பேர்ப்பட்டவர்களை எப்படி சமாளிப்பது என்று அவர் கேட்டார். பலர் பல யோசனைகளைக் கூறினர். துப்பாக்கி வைத்திருங்கள் என்றார் சிலர். காவலாளிகளை அமர்த்துங்கள் என்றார் சிலர். எல் லோரும் சங். பிளானகனுக்கு ஆபத்து ஏதும் ஏற்படக்கூடா தென்றே கவலைப்பட்டனர். மோசமான ஆட்களைத் தனியாக ஹோட்டலில் ஒரு புறத்தில் ஒதுக்கி வைக்க வேண்டுமென்று அவர்கள் சொன்னார்கள்.

"அது நல்ல யோசனையாகத்தான் தோன்றுகிறது. அப்படியானால், தொந்தரவு கொடுப்போரை வீட்டினடித் தளத்தில் ஒதுக்கி வைக்கலாம்," என்றார் சங். பிளானகன்.

அதிலிருந்து ஹோட்டலின் அடித்தளம் "கீழ்ப்பாகம்" என்ற பெயர் பெற்றது. தொழிலாளர் எச்சரித்தது போலவே, 1914-ம் ஆண்டின் குளிர்கால மாதங்களில் குடியர்கள், திருடர்கள், கொலைகாரர்கள் முதலியவர்கள் சங். பிளான கனின் ஹோட்டலுக்கு வந்தார்கள். பலர் சட்டத்துக்கு விரோதமாக நடந்து போக்கிரிகள் என்ற பட்டம் பெற்றவர் கள். அப்பேர்ப்பட்டவர்கள் சாதாரணமாக மோசமான ஹோட்டல்களில் தங்கிக் கஷ்டப்படுவது வழக்கம். இப்போது

அந்த ஹோட்டல்களைவிட மலிவாக நல்ல படுக்கையும் உணவும் சங். பிளானகனின் ஹோட்டலில் அவர்களுக்குக் கிடைத்தது. அவர்களைப் பிடித்திருந்த சனி மதகுருவின் உதாரண குணத்தை ஏளனம் செய்வது போலிருந்தது.

"ஆமாம். நான் இவர்களைப் பிடித்து ஆட்டி வைக்கிறேன். கடவுளின் கடாட்சம் இவர்களுக்குக் கிட்டாமல் செய்கிறேன். நீர் அதைப்பற்றி என்ன செய்ய முடியும்," என்று அது சொல்லுவது போலிருந்தது.

அத்தியாயம் 12

அவர் அதைப்பற்றி அதிகமாக எதுவும் செய்ய முடியவில்லை யென்பதை உணர்ந்து வருந்தினர். பிடிவாதக்காரர்களும் திருட்டுத்தனமுடையவர்களும் ஹோட்டலுக்கு வந்தார்கள். பலர் பலவிதமாக இருந்தனர். சிலர் அதிர்ஷ்டமற்றவர்கள். சிலர் சோம்பேறிகள். சிலர் குற்றவாளிகள்,

ஆனால் அவர்களை யாரும் எவ்விதக் கேள்வியும் கேட்பதில்லை. அவர்கள் விரும்பினல் அவர்களுடைய வாழ்க்கை வரலாற்றைக் கூறலாம். அல்லது மௌனமாக இருக்கலாம். பணமிருந்தால் கொடுத்தார்கள். இல்லையென்ருல் அவர்களுடைய செலவை ஹோட்டலே ஏற்றுக்கொண்டது.

அக்டோபர் மாதத்துக்குள் ஹோட்டலிலிருந்தவர்களின் எண்ணிக்கை ஐந்நூறுக்கு மேலாயிற்று. பல தகராறுகள் நேர்ந்தன. சண்டை சச்சரவுகள் தோன்ருமலிருப்பதற்காகப் பாதுகாப்புகள் ஏற்படுத்தப்பட்டன. ஹோட்டலின் அடித்தளத்தில் இருப்பவர்கள் இரவு பத்து மணிக்குள் படுக்கையில் படுத்தாகவேண்டும் என்ற கட்டுப்பாடு விதிக்கப்பட்டது.

ஓர் இரவு சங். பிளானகன் தமது மேஜைக்கெதிரே உட்கார்ந்திருந்தார். முப்பது வயதுள்ள ஒரு மனிதர் அவரிடம் வந்து நின்ருர். அவருடைய உடை அழுக்கடைந்திருந்

தாலும் விலையுயர்ந்ததாகக் காணப்பட்டது. இரவுப் பொழுதை ஹோட்டலில் தாம் கழிக்கலாமா வென்னப் பெருந்தகைமையோடு அவர் கேட்டார்.

"அதற்கு வேண்டிய பணம் கொடுக்க என்னிடம் ஒன்றுமில்லை யென்பதை நான் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன்," என்றார் அவர். அவருடைய பேச்சு அவர் ஐரோப்பியவாசியென்பதைக் காண்பித்தது.

மதகுரு புன்னகையுடன் சொன்னார்: "நீர் படுத்துக் கொள்ளக்கூடிய இடத்தைக் காண்பிக்கிறேன். தனி அறைகள் இங்கு இல்லையென்பது உமக்குத் தெரிந்திருக்கலாம்."

ஹோட்டல் பல மாதங்களாக நடந்து வந்தது. பல விதமான ஆட்கள் வந்து போய்க்கொண்டிருந்தனர். ஆனால் புதிதாக வந்தவர் அதிசயமான பேர்வழியாகத் தோன்றினார். ஹோட்டலின் நிர்வகாகத்துடன் பூர்ணமாக ஒத்துழைத்தாலும், தம்மைப்பற்றியோ தமது வாழ்க்கை வரலாற்றைப் பற்றியோ யாரிடமும் அவர் பேசியதே கிடையாது.

எல்லோருக்கும் அவரை பிடித்திருந்தது. அவர் புத்திசாலி. ஹாஸ்ய உணர்ச்சி உள்ளவர். சலியாது உழைக்கக் கூடியவர். திறமை சாலி. ஆனால் அவர் தம்மைப் பற்றி மூச்சு விடாமல் இருந்ததால், அவரைப் பற்றிப் பல கட்டுக் கதைகள் கிளம்ப ஆரம்பித்தன.

எனினும், சங். பிளானகன் இப் புதியமனிதரை நம்பி, அவரை இரவு குமாஸ்தாவாக நியமித்தார். வாலிபராயிருப்பதால், இரவு குடித்துவிட்டு நேரங்கழித்து வருவோரை அவர் சாமளிக்க முடியுமோ என்று சங். பிளானகன் அஞ்சினார். ஆனால் அந்த அதிசய மனிதர் அம்மாதிரி சங்கடங்களை மிகச் சாதுர்யமாகச் சமாளித்தார். குடித்துவிட்டு வந்து கும்மாளம் போடுவோரைக் குழந்தைகளைப்போல அவர் நடத்தினார். தட்டிக் கொடுப்பார், அல்லது இழுத்துக்

கொண்டுபோய் படுக்கையில் தள்ளுவார். அவர் சிரமப்படு வது போலவே தோன்ருது.

ஓர் இரவு அவரும் சங். பிளானகனும் தனிமையா யிருக்கும் போது, அக் குமாஸ்தா சொன்ஞர்: "தந்தையே நீங்கள் என்னைப் பற்றி ஆச்சரியப் பட்டிருப்பீர்கள். என் மீது உங்களுக்கு சந்தேகம் வேண்டாம். நான் உயர்ந்த குலத்தில் பிறந்தவன். ஹங்கேரிய தேசத்துக் குலமகன்."

அவருடைய கதையைச் சொன்ஞர். ஹோட்டலில் எளியவர்களோடு அவ்வளவு சுமுகமாகப் பழகிய அவர் பெரிய ஜமீனில் பிறந்து நல்வாழக்கையில் வளர்ந்தவர். உயர்தரக் கல்விக்காக அமெரிக்கா வந்தவர்.

"பிறகு ஐரோப்பாவில் ரகளை ஆரம்பமாயிற்று. என்னுடைய உறவினரின் கதி என்ன ஆயிற்று என்று எனக்குத் தெரியாது. அவர்களிடமிருந்து எனக்கு ஒரு தகவலும் கிடைக்கவில்லை. என்னிடமிருந்த பணமும் கரைந்து கொண்டு வந்தது. வேலை கிடைப்பதும் துர்லபமாகி விட்டது. எனக்கோ வியாபாரத்தில் அனுபவமில்லை," என்ருர் அவர்.

கையிலிருந்த பணம் செலவான பிறகு, தெருத் தெரு வாகத் திரிய ஆரம்பித்தார் அவர். வயல்களில் ஏதாவது வேலை கிடைத்தால் செய்வது. கிடைக்கும் பணத்தைக் கொண்டு மற்ருேர் ஊருக்குக் கிளம்புவது. இப்படியாக அவர் காலங் கழித்தார். குற்றவாளிகள், திருடர்கள் முதலியோருடன் பழகலாஞர். ஒமாஹாவிலிருந்து சில மைல்களுக்கப்பாலுள்ள நகரத்தில் சங். பிளானகன் நிர்மாணித்திருக்கும் ஹோட் டலைப் பற்றிக் கேள்விப்பட்டு, உடனே புறப்பட்டு ஒமாஹா வந்து சேர்ந்தார்.

சங். பிளானகனிடம் தமது வாழ்க்கையைப் பற்றிக் கூறியபிறகு, அவர் தம் சக குமாஸ்தாவிடமும் விஷயத்தைச் சொல்லுவது எளிதாயிற்று. சமாசாரம் ஹோட்டலில்

இருப்பவர்களுக்கெல்லாம் பரவிற்று. அவர்களுக்கு சந்தோஷம் தாங்கவில்லை. பிரபுக்கள் வம்சத்தைச் சேர்ந்தவர் ஹோட்டலில் சிப்பந்தியாக இருந்து தங்களுக்குச் சேவை செய்கிறார் என்பதில் அவர்களுக்கு ஆனந்தம்.

சங் பிளானகனும் அவரை வெகு பிரியத்துடன் நடத்தி வந்தார். பல முறைகளில் அக்குமாஸ்தா மதகுருவை ஆபத்தினின்றும் காப்பாற்றியிருக்கிறார். போக்கிரிகளையும் குற்றவாளிகளையும் ஹோட்டலில் அநுமதித்தால், எப்போதும் அவர்களுக்கு ஆபத்தான நிலைமைதான். மிகச் சாதுவாக நடந்துகொள்ளும் ஒரு பேர்வழி திடீரென ஒரு சச்சரவைத் தொடங்கிவிடுவான்.

ஓர் இரவு சங். பிளானகன் கதவோரமாய் நின்றுகொண்டிருந்தார். ஒரு தடியன் தள்ளாடி அவரிடம் வந்து, தனது இரு பெருங்கைகளால் மதகுருவைத் தூக்கி வாசலில் எறிந்தான். அக்குடியன் பிறகு விழுந்துகிடந்த மதகுருவை நோக்கி விரைந்தான். நல்லவேளையாக ஹங்கேரிய குலமகன் அங்கிருந்தார். ஓடிப்போய் குடியனைப் பிடித்துக்கொண்டார். சில நிமிஷங்களில் சம்பவம் முடிந்துவிட்டது. மற்றவர்களின் உதவியோடு, குலமகன் குடியனைச் சாமாதானப்படுத்தி அடித்தளத்துக்கு அழைத்துச் சென்றார். படுக்கையில் விழுந்த அவன் உடனே உறங்கிவிட்டான். மறுநாட் காலை அவன் எழுந்தபோது அவனது முந்திய இரவுத் தாக்குதலைப்பற்றி அவனுக்கு ஒன்றுமே ஞாபகமில்லை.

அக்காலத்தில் ஹோட்டலில் 1,000 மனிதர்களுக்கு அதிகமாகத் தங்கியிருந்தனர். அவர்களில் பெரும்பாலோர்க்கு சங். பிளானகன்மீது அபாரபிரியம். மாலை வேளைகளில் அவர்கள் வாசலில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருப்பார்கள். அவர்கள் எல்லோரைப்பற்றியும் ஒரு விஷயம் நன்கு வெளிப்பட்டது. அவர்களுடைய வாழ்க்கையில் மதக்கொள்கைகள் இடம்பெறவில்லை. ஏதோ கடவுளின்மீது நம்பிக்கை இருப்பதாகவே

அநேகர் கூறினர். ஆனால் ஒருவராவது ஆலயத்துக்குச் சென்றதில்லை. கடவுள் வழிபாட்டைப்பற்றியும் கவலைப்பட்டதில்லை.

ஹோட்டலை நடத்துவதில் சங். பிளானகனுக்குத் தங்களால் இயன்ற உதவியைச் செய்யத் தயாராயிருந்தார்கள். கையில் பணமிருந்தால் ஹோட்டலுக்குச் சேரவேண்டிய தொகையைக் கொடுக்க முன்வந்தார்கள். ஆனால் மதகுரு கடவுளைப்பற்றியோ மதத்தைப்பற்றியோ பேச்சு எடுத்தால், அவர்கள் அவ்விடத்தை விட்டு நழுவலாயினர்.

"அதுக்கெல்லாம் எங்களுக்கு வயதாகிவிட்டது. தந்தையே," என்பார்கள்.

சிலர் மதகுருவின் தூண்டுதலுக்குப் பணிந்து கோயிலுக்குச் சென்றனர். ஆனால் பெரும்பாலோர் புன்னகைபுரிந்து நிற்பார்கள்.

"நான் பல தப்புக் காரியங்களைச் செய்திருக்கிறேன். என் பழக்க வழக்கங்களை இப்போது மாற்றுவதென்பது முடியாதகாரியம். அதுவும் இத்தனை வருஷங்களுக்குப் பிறகு," என்றான் அவர்களில் ஒருவன்.

அவர்களுக்குத் தைரியமில்லை என்பதல்ல. ஐரோப்பாவில் யுத்தம் தொடர்ந்து நடந்துவந்த காலத்தில், ஹோட்டலில் தங்க வந்த பலர் பிரிட்டிஷ் படையிலோ பிரஞ்சுப் படையிலோ சேர்ந்து போர்முனைக்குச் சென்றனர். யுத்தத்தில் வீரர்களாகப் பிரகாசித்தார்கள். சிலர் போரில் உயிரிழந்தனர்.

அவர்களுடைய வாழ்க்கை எவ்வளவு மாசு அடைந்ததாயினும், நல்ல அம்சங்கள் இருக்கத்தான் செய்தன. யுத்த முழக்கம் கேட்டவுடன் அவர்கள் சேவைக்கும் தியாகத்துக்கும் தயாராகப் புறப்பட்டனர். ஆண்டவன் அடிபணிய உற்சாகம் தோன்றவில்லை அவர்களுக்கு ஏன்? அவர்கள் கூறிய

சமாதானம் உண்மையானது என்று தோன்றிற்று சங். பிளானகனுக்கு. கடவுளின் வழியைப் பின்பற்றக்கூடிய நிலையைக் கடந்துவிட்டது அவர்கள் வாழ்க்கை.

அவ்வப்போது சிறுவர்களும் ஹோட்டலுக்கு வருவார்கள். அது ஒரு பெரும் பிரச்னையாக விளங்கும் சங். பிளானகனுக்கு. அச் சிறுவர்கள் வயதான குற்றவாளிகளுடனும் உதவாக்கரைகளுடனும் பழகத் தொடங்கினால் அவர்களது பிற்கால வாழ்க்கை எவ்வாறு சிதறிவிடும் என்பதை நினைத்து மதகுரு நடுங்குவார். அதற்காக அச்சிறுவர்களை ஹோட்டலின் மேல்மாடியில் தங்கச் செய்வார். அடிதளத்தில் இருப்பவர்களுடன் பழக நேரிடாதபடி பார்த்துக் கொள்ளுவார்.

அந்த மேல்மாடி அறைகளிலிருந்துதான் சிறுவர் நகர் ஈளடைவில் உதயமாயிற்று.

அத்தியாயம் 13

ஒருநாள் சங். பிளானகன் வாசலில் உலாவிக்கொண்டிருந்தார். ஒன்பது வயதுப் பையன் ஒருவன் அவரை அணுகினான். முகமெல்லாம் தூசியும் எண்ணெயும் படிந்திருந்தன. அவனுடைய சிகப்புச் சட்டைக் கிழிந்திருந்தது. தலையில் தொப்பி கிடையாது. சிறுவன் குளிரில் நடுங்கிக் கொண்டிருந்தான்.

"கருப்பு அங்கி அணிந்திருப்பவர் நீங்கள்தானா?" என்று அவன் கேட்டான்.

"நான் அவர்களில் ஒருவன். என்ன விஷயம், குழந்தாய்?" என்றார் சங். பிளானகன்.

"நான் இங்கே இருக்கலாமா?"

எத்தனைதரம் அதே கோரிக்கையை பிற்காலத்தில் அவர் கேட்கப்போகிறார். சிறுவனது பக்கத்தில், மண்டி

யிட்டுக்கொண்டு, மதகுரு வினவினர்: "நீ ஏன் இங்கே தங்க ஆசைப்படுகிருய்?

"இலவசமாக இங்கே நீங்கள் அநுமதிப்பதில்லையா? என்று கேட்டான் சிறுவன்.

"அனுமதிப்போம், ஆனுல் உன்னைப்போன்ற சிறுவர் களையல்ல. உன்னைப் போன்ற சிறுவன் வீட்டில் அல்லவா இருக்கவேண்டும்.'!

"இல்லை ஐயா, எனக்கு வீடு கிடையாது"

அச்சிறுவனின் பெயர் பால். அவனுடைய தாயார் அவனை வளர்த்துவந்தாள். சில வாரங்களுக்குமுன் உயிர் துறந்தாள். தாயை இழந்தபிறகு இங்கும் அங்குமாக அவன் அலைந்து வந்தான். கடந்த சில இரவுகளாக அவன் பரந்த வெளியில்தான் படுத்து உறங்கவேண்டியிருந்தது. ஒருநாள் ப்ட்டினி.

"ஆமாம், நாம் ஏதாவது சாப்பிடுவதற்குமுன், முகத் தைக் கழுவி சுத்தம் செய்துகொள்ளவேண்டாமா?" என்ருர் சங். பிளானகன்.

பால் கைகால்களைக் கழுவியபின், அவர்கள் சாப்பிடும் இடத்துக்குச் சென்றனர். பால் வயிறு நிறைந்துவிட்டது என்று சொல்லும்வரை சாப்பிட்டான். பிறகு மாடியில் படுக்கையைக் காண்பித்தார் சங். பிளானகன். "தந்தையே, படுக்கை சுகமாயிருக்கிறது. சாப்பாடும் நன்ருயிருக்கிறது," என்ருன் சிறுவன்.

சங். பிளானகன் கவலையில் ஆழ்ந்தார். பால் விஷயத் தைப்பற்றி யோசித்தார். என்ன செய்வது? நகர அதிகாரி களுக்கு விஷயம் தெரிந்ததும், அவர்கள் 'அவனைச் சர்க்கார் விடுதிக்கு அழைத்துச் சென்றுவிடுவார்கள். குழந்தை யில்லாத ஒரு குடும்பத்தின் பொறுப்பில் சங். பிளானகன் பாலை விட்டுவைத்தார்.

பாலின் சரிதையைக் கேட்டதில் அவருக்கு ஒரு விஷயம் நிச்சயமாகத் தெரிந்தது. நூறு மைல் சுற்றுப்புறத்தில் பாலின் உறவினர் ஒருவர்கூடக் கிடையாது. வருந்தத்தக்கது என்னவெனில் இம்மாதிரி பையன் பால் ஒருவன்தான் என்று யாரும் சொல்ல முடியாது. ஒவ்வொரு நகரத்திலும் இம்மாதிரி சிறுவர்கள் பலர் இருக்கின்றனர். பல சிறுவர்களுக்குத் தாய்தந்தையர்கள் இருந்தும் அநாதை வாழ்வு வாழ்கிறார்கள் அவர்கள். வீட்டில் பராமரிப்போ அன்போ கிடையாது. குழந்தைகள் போகிற போக்கில் விடப்படுகிறார்கள். அவர்கள் தெருக்களில் வளருகிறார்கள்.

சங். பிளானகன் ஒவ்வொரு தினமும் பத்திரிகைகளில் வாசிப்பதுண்டு. பலவித குற்றங்களைச் செய்ததாக போலீஸார் சிறுவர்களைக் கைது செய்து கோர்ட்டுக்கு அனுப்புவதைப் பற்றி அவர் வாசித்தார். இச் சிறு குற்றவாளிகளை நீதிபதிகள் சீர்திருத்தப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்பினார்கள்.

ஒன்பது வயதுச் சிறுவனை ஹோட்டலில் சந்தித்ததற்குப் பிறகு, மெதுவாக சங். பிளானகனின் மனதில் ஒரு புதிய கருத்து உருவகமாயிற்று. மூன்று ஆண்டுகளுக்கு மேலாக அவர் ஆதரவற்ற மனிதர்களுக்காக உழைத்தார். அவர்களைச் சீர்தூக்கி விடவேண்டுமென்பதே அவருடைய லட்சியம். ஒரு சிலரைத் தவிர மற்றவர்களின் விஷயத்தில் அவர் வெற்றி காணவில்லை. அவர்களுக்கு உணவு அளித்தார். உறங்க இடம் கொடுத்தார். அவ்வளவுதான் அவர்களும் விரும்பியது. மற்ற விஷயங்களைப்பற்றி அவர்கள் கவலைப் படவில்லை. பேச்செடுத்தாலும், அதற்கெல்லாம் தங்களுக்கு வயதாகிவிட்டது, இனி தாங்கள் திருந்துவது சாத்தியமில்லை என்றார்கள்.

ஆனால் சிறுவர்கள் திருந்த முடியும்; அதுவும் யாராவது அவர்களுடைய விஷயத்தில் அக்கறை காட்டினால், மனிதனைச் சீர்திருத்தம் செய்யவேண்டுமானால், அதற்குரிய

நேரத்திலேயே அந்த வேலையைத் துவக்க வேண்டும். நாட்களாகிவிட்டால், பழுது அதிகமாகிவிட்டால், காரியம் மிஞ்சிவிடும். களிமண் ஈரமாக இருக்கும்போதே அதற்கு உருவமும் எழிலும் கொடுக்கவேண்டும்.

மனிதனை மேம்படுத்த அவன் சிறுவனாயிருக்கும்போதே வேலை ஆரம்பமாக வேண்டும்.

அத்தியாயம் 14

குற்றங்களைப்பற்றிய பிரச்னையைக் குழந்தைகளின் பிரச்னையிலிருந்து பிரித்து வைத்து அலசிப்பார்க்க முடியாதென்பதை முதலிலிருந்தே சங். பிளானகன் உணர்ந்து வந்தார். மனிதனைக் காப்பாற்ற வேண்டுமானால், முதலில் சிறுவனை ரட்சித்தாகவேண்டும். ஆமாம், பிரச்னையை ஆராய்ந்து விட்டோம். அதைத் தீர்த்துவைப்பது எப்படி? குற்றங்களைத் தவிர்க்கக் கைகண்ட மருந்து கிடையாது, மார்க்கமும் இல்லை; அதாவது மனிதனுடைய இதயத்தில் குடிகொள்ளும் தெய்வ அன்பைத் தவிர வேறு ஒரு வழியும் கிடையாது. சங். பிளானகன் நம்பிக்கை கொண்டார்; இத் துறையில் உண்மையாகவும் தைரியமாகவும் ஈடுபட்டுள்ள பலருடைய முயற்சிகளுக்கும் ஆக்கமளிக்க வேண்டும்; கடவுளைப் பிரார்த்தித்த வண்ணம் காரியங்களை ஒரு சேரக் கவனிக்க வேண்டும்; இதுதான் நம்பிக்கைக்கு வழி என்பது அவருக்குத் தெரியும்.

சங். பிளானகன் அடிக்கடி கோர்ட்டுகளுக்கு விஜயம் செய்யலானார். நீதிபதிகளும் அவருடன் சிநேகமானார்கள். அவ்வப்போது அவரைத் தங்களுடைய அறைகளுக்கு அழைத்துச்சென்று வந்திருக்கும் கேசுகளைப்பற்றி அவருடன் அவர்கள் பேசுவார்கள்.

சிரமமான கட்டுத்திட்டங்களுக்குட்பட்டு உழைப்பவர்களானாலும், குழந்தைகளின் பிரச்னையைத் திருப்திகரமாய்த்

தீர்க்க அவர்களுக்கு ஆவல் இருந்ததை சங். பிளானகன் கண்டார்.

அவர் ஒரு நீதிபதியைக் கேட்டார்: "அப்படியிருந்தும் ஏன் நீங்கள் இந்த பிள்ளைகளை—அவர்கள் முதிர்ந்தவர்களாயினும் சரி சிறுவர்களாயினும் சரி, அநாதைகளாயினும் சரி—ஒரே சீர்திருத்தப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்புகிறீர்கள்?

"அவர்களை அனுப்பிவைக்க வேறு இடம் இல்லாததால்தான், தந்தையே" என்றார் அந்த நீதிபதி. "அவர்களுடைய வீடுகளோ பிரயோசனமில்லை, அவர்களை எங்காவது அனுப்பித்தானே ஆகவேண்டும்?"

இப் பரிதாபகரமான நிலைமை சங். பிளானகனுக்கு வருத்தத்தை உண்டாக்கியது. இந்த நிலைமையில் தவறிப் போகும் சிறுவர்கள் திருந்துவதற்குச் சந்தர்ப்பமே கிடையாதென்பதை அவர் உணர்ந்தார்.

சங். பிளானகன் இப் பிரச்னையைப் பூர்ணமாக ஆராய விரும்பினார். ஒவ்வொரு ராஜ்யத்திலுள்ள அதிகாரிகளுக்கும் கடிதங்கள் எழுதினார். வீடில்லாத குழந்தைகள், குற்றம் செய்த சிறுவர்கள் எத்தனைபேர் என்றும், அவர்களைச் சீர்திருத்தப்பள்ளிக்கூடங்கள், அநாதாஸ்ரமங்கள் முதலியவற்றில் எவ்வாறு நடத்துகிறார்கள் என்றும் விசாரித்தார்.

வழி தவறிப் போகும் சிறுவர்களை மீட்க நடத்தப்படும் எந்த இயக்கத்தையும் அவர் விட்டுவிடவில்லை. ஒவ்வொரு இடத்திலும் கையாளப்படும் வழிகளை அலசிப்பார்த்தார். மற்ற அலுவல்கள் முடிந்த பிறகு, பல இரவுகள் உட்கார்ந்து அங்கிருந்து கிடைத்த ரிப்போர்ட்டுகளைப் பரிசீலனை செய்தார். எல்லாத் திட்டங்களிலுமே அவர் பாராட்டி ரஸிக்கக்கூடிய அம்சங்கள் இருந்தன. ஆனால் அநேகமாக எல்லாவற்றிலும் இரு முக்கிய தவறுகள் இருந்தன. அத் திட்டங்களில்

அன்பு, பக்ஷம் என்பவை இல்லை; திட்டங்களை வகுத்தவர்கள் கடவுளை மறந்துவிட்டார்களெனவும் தோன்றிற்று.

சங். பிளானகளின் மனதிலோ அவ்விரண்டு அம்சங்களே மற்றெல்லா நிர்வாக வெற்றிகளுக்கும் மேலானவையாகப்பட்டது. நல் வாழ்வுக்கு வேண்டிய அம்சங்களையோ, மனோதத்துவ ஆராய்ச்சியை ஆதாரமாகக் கொண்ட அம்சங்களையோ அவர் எதிர்க்கவில்லை. அவர் சிறுவர்களுக்காகவும் கடவுளுக்காகவும் உழைத்தார்.

“குழந்தைகளைக் குற்றத்தினின்றும் காப்பாற்றினால், நாம் குற்றங்களை ஒழித்துவிடலாம். நாம் குழந்தைகளைக் குற்றத்தினின்றும் காப்பாற்றவில்லையென்றால் நமது நாகரிகம் அழிந்துவிடும். அதுவே இப் பிரச்னையின் அதி முக்கிய சவால்” என்று அவர் தீவிரமாகச் சொல்லுவதுண்டு.

அதனால்தான் அவர் அடிக்கடி ஒமாஹா கோர்ட்டுக்குச் சென்றார். அதனால்தான் குழந்தைகளின் பிரச்னையைப் பற்றி விசாரித்தார், கடிதங்கள் எழுதினார், சதா யோசனை செய்துவந்தார். எப்படியாவது இப் போரில் இறங்குவது என்று அவர் தீர்மானித்தார். அவர் கைக்கொள்ளக் கூடிய வழியைப்பற்றி அவருக்கு அப்போது நிச்சயமாகத் தோன்றவில்லையென்றாலும், எப்படியாவது அதைக்கண்டு பிடிப்போம் என்ற நம்பிக்கையும் துணிவும் அவருக்கு இருந்தன.

தகராறுகளில் சம்பந்தப்பட்ட சிறுவர்களுடன் பழகும் சந்தர்ப்பம் அவருக்கு அதற்கு முந்தியே கிடைத்திருந்தது. அவர் கோயிலைச் சேர்ந்த பகுதியிலுள்ள சிறுவர்களில் சதா தொந்தரவு கொடுக்கும் சிறுவர்களைச் சமாளிக்கும்படி அவருக்குச் சில சமயம் உத்திரவிட்டிருக்கிறார்கள். சிறுவர்கள் தொந்தரவு கொடுப்பதற்கு அடிப்படையாகவுள்ள காரணங்களை அவர் அடிக்கடி கண்டுபிடித்தார். மற்றொரு சிறுவன் தன்னைவிட அதிக சலுகைகள் பெறுவது, வீட்டில்

யாருக்கும் சிறுவன் மீது சிரத்தை இல்லாதது இம்மாதிரி காரணங்கள் தாம். இவற்றைப் போக்கினால், சிறுவர்கள் ஒழுங்காக நடக்கத் தொடங்குவார்கள்.

தமது ஹோட்டலுக்கு வரும் சிறுவர்களையும் சங். பிளானகன் கவனித்திருக்கிறார். அநேகமாக அவர்கள் வீட்டைவிட்டு ஓடிவந்தவர்கள். தங்கள் வாழ்க்கையில் தோன்றிய பிரச்னையை வேறுவிதமாகத் தீர்க்க முடியாததால் வீட்டை விட்டு ஓடி அதிலிருந்து தப்பித்துக்கொள்ள முயற்சி செய்வோர்.

சிறுவர்களின் பிரச்னையைக் குறித்து மதகுருவின் மனதிலிருக்கும் கருத்துகள் உன்னதமானவையென்பதை ஒமாஹா சிறுவர் கோர்ட்டு நிர்வாகிகள் உணர்ந்தனர். ஒரு நாள் காலை, கோர்ட்டு நடவடிக்கை முடிந்ததும், நீதிபதி அவரை அழைத்தார். "நேற்றிரவு ஒரு சந்தில் தூங்கிக் கொண்டிருந்ததாகக் கொண்டுவரப்பட்ட அந்த இரண்டு சிறுவர்களை நீங்கள் கவனித்தீர்களா," என்று நீதிபதி சங். பிளானகனைக் கேட்டார்.

"கவனித்தேன். அவர்களுக்கு வீடு இருக்கிறதல்லவா?" என்றார் மதகுரு.

நீதிபதி சொன்னார்: "அவர்களுக்கு வீடு இருக்கிறது. ஆனால் அவர்களுடைய தகப்பன் குடிகாரன். தாய்க்கோ பையன்களைக் கட்டுப்படுத்தக்கூடிய பலம் இல்லை. அவர்களும் கெட்ட பையன்கள் அல்ல. ஆனால் அவர்களையாராவது பார்த்துக் கொள்ளவேண்டும். நான் யோசிக்கிறேன்......"

நீதிபதி மதகுருவை நோக்கிப் புன்னகை புரிந்தார். "உங்கள் பராமரிப்பில் அவர்களை விட்டு வைத்தால் என்ன என்று யோசிக்கிறேன்," என்று அவர் முடித்தார்.

அவர்களை அழைத்துச் செல்ல ஓரிடமும் இல்லையென்றாலும், சங். பிளானகன் அந்த யோசனையை ஒப்புக் கொண்

டார். சிறுவர்களுக்கு வயது பன்னிரண்டு, பதினுன்கு. அவர்களுடன் சிறிது நேரம் பேசிவிட்டு, அவர்கள் தம்மை வாரத்துக்கு ஒரு முறை சந்திக்க வேண்டுமென்று ஏற்பாடு செய்தார். அவர்களை ஹோட்டலுக்கு அழைத்துச் சென்ருல், அங்குள்ள காலிகளை அவர்கள் சந்திக்க நேரிடும் என்பதற்காகச் சிறுவர்களை சங். பிளானகன் தெருவில் ஒரு விளக்கடியில் சந்திப்பது வழக்கம்.

சிறுவர்கள் அவரைக் காணும்போது தங்களுடைய நடவடிக்கைகளை விவரிப்பார்கள். பள்ளிக்கூடத்தில் வாசிக்கும் பாடங்கள், விளையாடும் விளையாட்டுகள், பத்திரிகைகளை விற்பதில் கிடைக்கும் லாபம் முதலியவற்றைப்பற்றிச் சொல்லுவார்கள்.

ஏதாவது தங்களுக்குச் சங்கடம் நேர்ந்தால், அதையும் ஒளிக்காமல் மதகுருவிடம் கூறினுர்கள் அச்சிறுவர்கள். அவர்களுடைய கூற்று உண்மையா பொய்யா என்று பரிசோதிக்க சங். பிளானகன் முயற்சி செய்யவே இல்லை.

“நீங்கள் நல்ல பிள்ளைகள். நான் உங்களை நம்பலாம் என்று எனக்குத் தெரியும்,” என்ருர் அவர்.

எப்போதாவது அந்த விளக்கடியில் அவர்களிடம் அவர் மதத்தைப் பற்றியும் பேசுவதுண்டு. சிறுவர்களின் தாயும் தந்தையும் ஆலயத்துக்குப் போவதில்லை. கடவுள் கருணையற்றவர்; ஆகாயத்தில் வீற்றிருக்கும் அவர் அவர்களை என்ருவது ஒரு நாள் தண்டிப்பார். இதுவே அவர்களுக்கு இருந்த கடவுளைப் பற்றிய கருத்து.

சிறிய பையன் ஒரு நாள் சொன்னுன்: “ஆமாம். நீங்கள் தவறு செய்தால் கடவுள் கட்டாயம் தண்டிப்பார்.”

மதகுரு உடனே பதில் சொன்னுர்: “நீங்கள் கடவுளைப் பற்றி பயப்படக் கூடாது. அவர் அன்புள்ள பிதா. ஒரு

சிறுவன் ஏன் தவறு செய்து விடுகிறுன் என்பது அவருக்குத் தெரியும், கோபிக்கமாட்டார்.''

சில வாரங்களில் சிறுவர்கள் தவருமல் ஞாயிறன்று கோயிலுக்குப் போக ஆரம்பித்தார்கள்.

அவர்களுடைய தகப்பன் இன்னும் குடித்துக் கொண்டு தான் இருந்தான். தாயும் நோயுற்று அவர்களைக் கவனிப்ப தில்லை. எனினும், அச் சிறுவர்கள் எவ்விதத் தகராறிலும் ஈடுபடவில்லை. இரவில் வெளியே சுற்ருமல், வீட்டிலேயே தூங்கினுர்கள். சங். பிளானகனின் பராமரிப்பில் அவர்கள் சாதாரண வாழ்க்கையை நடத்தி வந்தார்கள்.

நீதிபதிகளும் சங். பிளானகனின் சாமர்த்தியத்தைக் கண்டனர். மேலும் அதிக சிறுவர்கள் சங். பிளானகனின் பராமரிப்பின் கீழ் வந்தனர். அப்போதும் அவர்களைச் சந்திக்க வேறு இடமில்லாததால், தெரு முனைகளில் தான் மதகுரு அவர்களுடன் பேசுவார். எனினும் அவர் கையாண்ட முறை புதிதாக வந்த சிறுவர்களிடமும் வெற்றியடைந்தது. கோர்ட்டு நிர்வாகிகள் ஆச்சரியப்பட்டார்கள். சங். பிளானகனிடம் அனுப்பி வைக்கப்பட்ட பையன்கள் ஒழுங்காக நடந்துகொண் டார்கள். மறுபடியும் குற்றம் செய்ததாகக் கோர்ட்டுக்கு வர வில்லை. இது என்ன தந்திரம் என்று அவர்கள் வியந்தனர்.

அவருடைய தந்திரம் அன்பும் அநுதாபமும்தான் என்ருல், சட்ட நிபுணர்களுக்கு மதகுருவின் வார்த்தையை ஒப்புக் கொள்ளுவது சிரமமாயிருந்தது.

வெப்பமாயுள்ள இரவுகளில், அவர் தம்முடைய பராமரிப் பிலுள்ள சிறுவர்களுடன் ஓமாஹா பார்க்குக்கு நடந்து செல் வார். அங்கே அவர்கள் புல் தரையில் உட்கார்ந்து கொண்டு மதகுருவுடன் பேசுவார்கள். அவர்கள் கூறுவதை அவர் சந்தேகிப்பதே கிடையாது. அவர்கள் மறுபடியும் குற்றம் செய்தால் தண்டனை கிடைக்கும் என்று ஒரு முறைகூட

அவர் பயமுறுத்த முயன்றது கிடையாது. அவர்களைப் பற்றி அவர் கோர்ட்டுக்கு ரிப்போர்ட்டு கொடுக்க வேண்டுமென்று அவர்களுக்கெல்லாம் தெரியும். ஆகவே தாங்கள் ஒழுங்காக நடந்து கொள்ளவேண்டுமென்பதையும் அவர்கள் உணர்ந்தார்கள்.

அவர் தங்களுடைய நண்பர் என்பதை உணர்ந்ததும், அவர்கள் அவருடைய சொற்படி நடக்கலானார்கள். ஒரு நாள் அவர்கள் பார்க்கிலிருந்து கிளம்பும் சமயத்தில் ஒரு சிறுவன் சங். பிளானகனைக் கேட்டான் :

" தந்தையே, நாங்கள் ஒழுங்காக நடந்து கொள்ளுவோம் என்று உங்களுக்குத் தெரியும் என்கிறீர்களே, உங்களுக்கு அது எப்படித் தெரியும்? "

மதகுரு ஒரு விநாடி யோசித்தார். " அதற்கு ஒரே பதில் தான் இருக்கிறது. நீங்கள் கடவுளுடைய பாதையைப் பின் பற்றக் கற்றுக் கொள்ளுகிறீர்கள் என்பதை நான் காண்பதால் அது எனக்குத் தெரியும். "

உண்மையும் அது தான். அச் சிறுவர்கள் கடவுளின் பாதையைப் பின் பற்றலானார்கள். தெரு விளக்கடியில் கூறும் பொன் மொழிகளுக்குப் பலன் கிடைத்தது. சங். பிளானகனிடம் ஒப்புவிக்கப்பட்ட சிறுவர்கள் எல்லோரும் சிறு குற்றங்களுக்காக கோர்ட்டுக்கு வந்தவர்கள். அவர்களைவிட மோசமான சிறுவர்களை நல்வழிக்குத் திருப்புவதே சங். பிளானகன் அடுத்த படியாக மேற்கொள்ள வேண்டிய வேலை.

ஒமாஹாவில் அப்போது ஏக அமர்க்களம். கடைகளைச் சூறையாடுதல், வீடுகளில் புகுந்து கொள்ளையடித்தல், தெருவில் போவோர்களை அனுவசியமாக அடித்தல் முதலிய சம்பவங்கள் அடிக்கடி நேரிட்டன. இச்சம்பவங்களுக்கெல்லாம் காரணம் தென் ஒமாஹாவிலிருந்த ஒரு வாலிபக் கோஷ்டி.

சுற்றுப் புறத்திலுள்ள பொது மக்களுக்கு ஒரே பயம் தங்களுடைய புத்திரர்களும் இப் போக்கிரிகளுடன் சேர்ந்து துஷ்டர்களாகி விடுவார்களோ, அல்லது இவர்களிடம் அடி வாங்குவார்களோ என்று அஞ்சினர். போலீஸார் குற்றவாளி களைக் கண்டுபிடிக்க வேண்டும் என்று அவர்கள் கூக்குரலிட் டனர். இம்மாதிரி குற்றங்களைச் செய்வோருக்குத் தலைமை வகிக்கும் வாலிபர்களைத் தண்டித்து, மற்ற இளைஞர்கள் கெட்டுப் போகாதபடி அதிகாரிகள் பார்த்துக் கொள்ளவேண்டு மென்று அவர்கள் கோரினார்கள்.

பொது ஜன கோரிக்கைக்கு இணங்கி போலீஸார் சுறு சுறுப்புற்றனர். போக்கிரிப் பையன்களைக் கைது செய்தனர். அவர்களைப் பற்றிய தகவல்களையும் சேகரித்தனர். இருபத்தி யொன்று வயது வரை ஒவ்வொரு பையனும் சீர்திருத்தப் பள்ளிக் கூடத்தில் இருக்க வேண்டும் என்று நீதிபதி தீர்ப்பு கூறும்படி அவ்வளவு ருசு அவர்களுக்கெதிரில் இருந்தது.

அந்த ஏழு பையன்களையும் போலீஸார் கோர்ட்டுக்கு அழைத்து வந்த தினத்தன்று சங். பிளானகன் கோர்ட்டில் இருந்தார். பொது ஜனங்கள் இவ்விஷயத்தில் என்ன கருத் துக் கொண்டிருந்தார்கள் என்பது அவருக்குத் தெரியும். பையன்களின் மீது கருணை காட்டக் கூடாதென்பதே அவர்க ளுடைய அபிப்பிராயம்.

கைதிக் கூண்டில் பையன்கள் வரிசையாக நிறுத்தப் பட்டனர். மதகுரு அவர்களுடைய முகங்களைக் கூர்ந்து கவனித்தார். ஆச்சரியத்துடன் பின் சாய்ந்தார். அந்த ஏழு பேரில் ஒருவனுக்காவது பதினேழு வயதுக்கு மேலிராது.

அகங்காரம் கொண்ட குற்றவாளிகள் என்று அவர்களை பத்திரிகைகள் வர்ணித்திருந்தன. ஆனால் அவர்களுடைய முகங்களில் மமதையைக் காணோம். பயம்தான் தென்பட்டது.

நீண்ட குற்றச் சாட்டை வாசித்தார் கோர்ட்டு அதிகாரி. கைதிகள் குற்றச் சாட்டை மறுக்க வில்லை. திருடினர்,

பொருள்களை நாசம் செய்தனர், ஆட்களை அடித்தனர் என்பது குற்றச் சாட்டு. அவர்கள் மமதை கொண்ட போக்கிரிகளா யிருந்தால் இத்தருணத்தில் பெருமையுடன் நின்றிருப்பார்கள். தங்களுடைய புகழ் பரவுகிறதென்று உற்சாகப்பட்டிருப்பார் கள். அலட்சியமாய் இருந்திருப்பார்கள். ஆனால் அவர்கள் நடுக்கத்துடன் நிற்பதை மதகுரு கண்டார்

அப் பயம் அவர்களுடைய நிலைமையை நன்கு வெளிப் படுத்தியது. அவர்கள் இன்னும் சிறுவர்கள்தான். அவர் களைத் திருத்த முடியும் என்று அவர் நம்பினார்.

கைதிகளை நிற்கும்படி நீதிபதி உத்தரவிட்டார். தண்டனையைச் சொல்லப்போகிறார். அத்தருணத்தில் சங். பிளானகன் எழுந்து நின்றார். "இக் கேஸ் விஷயமாக, நீங்கள் ஏதாவது சொல்ல விரும்புகிறீர்களா?" என்று வினவினார் நீதிபதி.

"ஆம்," என்றார் மதகுரு ஆணித்தரமாக. "என் னுடைய பராமரிப்பில் அப்பிள்ளைகளை விட்டுவைக்கும்படி நான் கேட்டுக்கொள்ளுகிறேன்."

கோர்ட்டில் வேடிக்கை பார்க்க வந்திருந்தவர்கள் முணு முணுத்தனர். "ஒழுங்கு, ஒழுங்கு" என்று நீதிபதி மேஜை யைத் தட்டிவிட்டு, மதகுருவைப் பார்த்தார். "இப்பையன்களை எடுத்துக்கொள்வதில் உள்ள சங்கடத்தை நீங்கள் யோசித் தீர்களா? அவர்களுடைய நடத்தை எப்படிப்பட்டது என்பதை கவனித்தீர்களா?" என்று கேட்டார் சங். பிளானகனை.

"அது எனக்குத் தெரியும். அவர்களுடைய வாழ்க்கை எப்படிப்பட்டது என்பதும் எனக்குத் தெரியும்."

"அப்பையன்களைத் திருத்த முடியும் என்ற நம்பிக்கை உங்களுக்கு இருக்கிறதா?" என்றார் நீதிபதி.

மதகுருவின் கோரிக்கையைப்பற்றி முடிவு செய்வது நீதிபதிக்குச் சுலபமான காரியமல்ல. பையன்களைத் தண்டிக்க

வேண்டும் என்பது பொதுஜன அபிப்பிராயம். எனினும் நீதிபதி நியாயமான மனிதர். சிறுவர்களைச் சமாளிப்பதில் மதகுருவுக்கு இருக்கும் சாமர்த்தியத்தை அவர் அறிந்திருந்தார். கடைசியில் அவர் சொன்னார் :

" தந்தையே, நீங்கள் கோரிய சந்தர்ப்பதை உங்களுக்கு அளிக்கிறேன். இப்பையன்களை நீங்கள் சீர்திருத்த முடியும் என்று நம்புகிறேன்."

கைதிகளைநோக்கி நீதிபதி கூறினார் : " இப்போது உங்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம் கிடைக்கிறது. அதனால் நீங்கள் பலனடைவீர்களா மாட்டீர்களா என்று எனக்குத் தெரியாது. உங்களுக்கு உதவிசெய்ய முடியுமென்று சங். பிளானகன் நினைக்கிறார். அவர் குறுக்கிடவில்லையென்றால், இப்போது நீங்கள் சீர்திருத்தப் பள்ளிக்கூடத்துக்குப் போய்க் கொண்டிருப்பீர்கள் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்."

கோர்ட்டிலேயே இத்தீர்ப்பினால் மிகவும் ஆச்சரியமுற்றவர்கள் அச்சிறுவர்கள்தான். ஒருவரையொருவர் பார்த்தனர். பிறகு ஏழுபேரும் அச்சத்துடன் மதகுருவை நோக்கினர். அந்த நிமிஷம்வரை, அவர்கள் ஜெயிலுக்குப் போகவேண்டியிருக்கும் என்று நினைத்திருந்தனர். அவர்களுடைய ஆச்சரியத்தை சங். பிளானகன் கவனித்திருந்தால், அவர் அதைக் காண்பித்துக்கொள்ளவில்லை. அவர்களிடம் சென்று, அவர்களைத் தம்முடன் வரச்சொன்னார்.

மெதுவாக, மௌனமாக, அவர்கள் அவரைப் பின் தொடர்ந்தனர். அவர்களும் சங். பிளானகனும் கோர்ட்டை விட்டு வரிசையாகப் போவதை அங்கிருந்த எல்லோரும் கண்ணிமை கொட்டாது பார்த்துக்கொண்டிருந்தனர்.

அத்தியாயம் 15

கோர்ட்டைவிட்டு வெளியே வரும்போது சங். பிளானகன் தமது பையிலிருந்து சாக்லேட்டுகளை எடுத்தார். ஒவ்வொரு சிறுவனுக்கும் கொடுத்தார். அவர்கள் மலைத்துப் போனார்கள். பிறகு தெம்புவர ஆரம்பித்தது. நடக்க நடக்க, பேசவும் தொடங்கினார்கள்.

"அந்த நீதிபதியைக் கண்டு நான் பயந்தேனா?'' என்று முணுமுணுத்தான் ஒருவன்.

"ஆமாண்டா, அங்கேயிருந்த மாங்கா மூஞ்சிகள்......'' என்று ஆர்ம்பித்தான் மற்றொருவன்.

சங். பிளானகன் குறுக்கிட்டார்: "பிள்ளைகளே, அதெல்லாம் போதும். அம்மாதிரி பேச்சு வேண்டாம். கஷ்டமான சமாசாரத்தையெல்லாம் மறந்துவிடலாம்.''

ஒரு சிறுவன் முணகினான்: "எப்படி நாங்க மறந்துவிடுவது? நாங்க கோர்ட்டுக்குப் போய் ரிப்போர்ட்டு பண்ணனுமே.''

"நீங்கள் என்னிடம் எல்லா விஷயங்களையும் சொல்லுங்கள். கோர்ட்டு விஷயத்தை நான் பார்த்துக் கொள்கிறேன். இனிமேல் என்ன நடக்கப்போவது என்பதுதான் நமது கவலை,'' என்றார் மதகுரு.

அவர்கள் நடந்துகொண்டேயிருந்தார்கள். சிறிது நேரத்துக்குப் பிறகு ஒரு சிறுவன் கேட்டான்: "என்னை என்ன செய்யப் போகிறீர்கள் தந்தையே?''

மதகுரு பட்டவர்த்தனமாய் பதில் கூறினார்: "இன்னும் எனக்குத் தெரியாது. ஆனால் நீ நன்றாக பேஸ்பால் (கிரிக்கெட்டைப் போன்ற அமெரிக்க விளையாட்டு) விளையாடுவாய் அல்லவா?''

" ஓ, விளையாடுவேனே. ஆனால் பேஸ்பாலுக்கும் இதற்கும் என்ன சம்பந்தம். அது தண்டனையாகாதே?" என்றான் சிறுவன்.

" தண்டனை ஒன்றும் கிடையாது. நான் சொல்லுவதைப் புரிந்துகொள்ளுங்கள். நீங்கள் புதிய வாழ்க்கையை ஆரம்பிக்கிறீர்கள்," என்று கர்ஜித்தார் மதகுரு.

அவர்களுக்கெதிரே ஒரு மைதானம் தென்பட்டது. மதகுரு நின்று அதைப் பார்வையிட்டார். " இந்த இடம் போதும். நாம் உட்கார்ந்து பேசலாம்," என்றார்.

அவருடைய மனதில் என்ன எண்ணம் தோன்றிறறு என்பதைத் தாங்கள் அறிந்திருந்ததாகச் சிறுவர்கள் நினைத்தார்கள். அவர்கள் ஒரு பெரிய மதப் பிரசங்கம் செய்யப் போகிறார் என்று எதிர்பார்த்தார்கள். ஆனால் அவர்கள் ஏமாந்தார்கள். அவர் பாபத்தைப்பற்றிப் பேசவில்லை. பேஸ்பாலைப்பற்றியே அன்று முழுதும் பேசினார்.

அவர்களுக்கு ஆனந்தம் தாங்கவில்லை. "இங்கே பக்கத்தில் வீடு ஒன்றுமில்லை. இந்த இடத்தை நாம் உபயோகிக்கலாமென்று நினைக்கிறேன். நான் இதன் முதலாளியோடு பேசி முடிக்கிறேன். இங்கேதான் நீங்கள் உங்களுடைய சாமர்த்தியத்தைக் காண்பிக்கவேண்டும். சேர்ந்து உழைத்து நல்ல பேஸ்பால் கட்சியாக நீங்கள் பிரகாசிக்கவேண்டும்," என்றார் மதகுரு.

இதற்குள் அவர் தங்களுடைய நண்பர் என்பது நிச்சயமாகிவிட்டது சிறுவர்களுக்கு. அவர் சொல்லுவதை உற்றுக் கேட்டனர். அவர்கள் தங்களையே மறந்தனர். பேஸ்பால் ஆட்டத்துக்கு வேண்டியபடி இடத்தைச் சரிப்படுத்தலாயினர்.

" எப்பொழுது ஆட்டம் ஆரம்பிக்கலாம், தந்தையே?' என்று கேட்டார்கள் சிறுவர்கள்.

சங். பிளானகனுக்கோ இன்னும் தினசரி ஆலய அலுவல்கள் இருந்துவந்தன. ஹோட்டலின் நிர்வாகத்தை யும் கவனித்துக் கொள்ளவேண்டும். தம் பராமரிப்பில் உள்ள மற்றச் சிறுவர்களையும் பார்த்துக்கொள்ளவேண்டும்.

"நீங்கள் எல்லோரும் வீட்டுக்குப் போங்கள். ஆனால் வாரத்துக்கு மூன்று முறை மாலையில் நாம் இங்கே சந்திப் போம்," என்றார் மதகுரு அந்த ஏழு பையன்களை நோக்கி.

மாலையில் பேஸ் பால் ஆடுவார்கள். மற்ற நேரங்களில் இச்சிறுவர்கள் என்ன செய்வார்களோ? சங். பிளானகன் இப்பிரச்னையை யோசித்தார். இறைவனே அதைத் தீர்க்க வேண்டும் என்று அவரிடம் அதை ஒப்புவித்தார்.

சிறுவர்கள் விளையாடுவதற்கு வேண்டிய பந்து முதலிய சாமான்களை சங். பிளானகன் மற்றவர்களிடம் கெஞ்சிக் கேட்டு வாங்கி வந்தார். சீக்கிரமே மற்ற கட்சிகளிலிருந்து சவால்கள் வந்தன. அவற்றுடன் தாங்கள் போட்டி விளையாடலாமா என்ற சந்தேகம் ஏழு சிறுவர்களுக்கு. சங். பிளானகனைக் கேட்டார்கள். "ஏன் விளையாடக்கூடாது. நீங்கள் பயந்தாங் கொள்ளிகள். அக்கட்சிகளைத் தோற்கடிப்போம் என்ற தைரியம் கிடையாது," என்றார் அவர்.

அவர்கள் விளையாடும்போது அவர் போயிருந்து உற்சாக மூட்டினார். விளையாட்டு முடிந்ததும், அவர்களை அவர் களுடைய தினசரி அலுவல்களைப் பற்றி அவர் விசாரிப்பார். சிலருக்கு வேலை சம்பாதித்துக் கொடுத்தார். ஏழு பேரும் அவருடைய ஆக்ஞைப்படி வாரந்தோறும் அவர்களுடைய கோயில்களுக்குப் போகலாயினர்.

அவர்களில் யாரும் பரம சாதுவாகிவிடவில்லை. அவ்வப் போது சண்டைகளில் இறங்குவார்கள். பூர்ணமாகச் சீர்திருந்த நாட்களாகும். ஆனால் சட்டத்தை மீறும் வழக்கம் நின்றது. சிறு தகராறுகளில் கலந்து கொண்டனர் என்றாலும், ஒருவனு

வது மறுபடியும் போலீஸாரிடம் தவறு செய்து சிக்கவில்லை. அப்போதுமில்லை, சாகும் வரையிலுமில்லை.

இன்னும் அதிகமான சிறுவர்களை நிதிபதிகள் சங். பிளானகனிடம் அனுப்பலாயினர். அவருக்கு ஆலய வேலை நிறைய இருந்த போதிலும், கோர்ட்டாருடைய வேண்டு கோளை ஏற்க மறுத்ததில்லை. ஆனால் சிறுவர்களைக் கவனித்துக் கொள்வதற்குச் சரியான நிர்வாகமில்லையே என்பது தான் அவருக்குக் கவலையாயிருந்தது. அப்போதும் அவர் சிறுவர் களைப் பார்க் பெஞ்சில்தான் சந்தித்துப் பேசி வந்தார்.

எனினும் அவருடைய திட்டம் வெற்றியடைந்து வருவது தெளிவாகத் தெரிந்தது. ஆகவே அவருடைய கருத்து சரியானதென்பதில் சந்தேகமில்லை. சீர்திருத்த மடைய முடியாத அளவுக்கு எப்பையனும் கெட்டவன் அல்ல.

ஒரு நாளிரவு வெகு நேரத்துக்குப் பிறகு அவர் இது விஷயமாக ஒரு தீர்மானத்துக்கு வந்தார். அப்போது தொழி லாளர் ஹோட்டலில் அவர் தமது அறையிலிருந்தார். சிறுவர்களை உய்விப்பதென்பது ஓய்வு நேரங்களில் செய்யக் கூடிய வேலையல்ல என்பது அவருக்குத் தெளிவாயிற்று. ஒரு மனிதன் தனது வாழ்க்கையையே அதற்கு அர்ப்பணம் செய்ய வேண்டும். அவர் மனதில் ஒரு புதிய கருத்து துளிர்விட ஆரம்பித்தது.

ஹோட்டல் நிர்வாகத்தை விட்டுவிட வேண்டும் என்று அவர் முடிவு செய்தார். வேலையில்லாத மனிதர்களைப் பாது காக்கும் வேலையை மற்றக் கழகங்கள் எடுத்துக் கொள்ளட்டும். தமக்கு மற்றொரு வேலை இருக்கிறது என்று தீர்மானித்தார் மதகுரு.

“ இதையெல்லாம் நீ எப்படிச் சாதிக்கப் போகிருய்,” என்று சங். பிளானகன் தம்மையே கேட்டுக் கொண்டார்.

மதகுருவாக அவருக்குக் கிடைக்கும் வருமானமோ பெரி தல்ல. தமக்கென்று சொத்து கிடையாது. யாரிடமிருந்து பணம் பெறலாமென்றும் திட்டம் எதுவுமில்லை. ஆனால் அவர்நம்பிக்கையை இழக்கவில்லை.

தமக்கு என்ன சிரமங்கள் தோன்றினாலும் அவற்றை ஆண்டவன் தீர்த்து வைப்பார் என்ற திட நம்பிக்கையுடன், அவர் ஒரு தீர்மானத்துக்கு வந்தார். விடில்லாத சிறுவர்களுக்கு யாரும் அக்கறை காட்டாததால் தவறான பாதைகளில் சென்ற சிறுவர்களுக்கு ஒரு புதுமாதிரி வீட்டை ஏற்படுத்தவேண்டு மென்று, அவர் தீர்மானித்தார்.

அத்தியாயம் 16

அதிமேற்றாணியார் ஜெரிமியா ஹார்ட்டி தம்முன் நிற்கும் வாலிப மதகுருவை அன்புடன் நோக்கினார். அவர் மதகுருவுக்கு உதவிசெய்ய முடிந்தால் நன்றாயிருக்குமே என்று நினைத்தார். கைவிடப்பட்ட சிறுவர்களின் பரிதாபகரமான சரிதைகள் எத்தனையையோ அவர் கேட்டிருக்கிறார். சங். பிளானகன் கூறுவதைப்போன்ற ஒரு நிலையத்தை ஏற்படுத்து வது அவசியம் என்பதை அவர் உணர்ந்தார்.

ஆனால் அந்த அதிமேற்றாணியார் கோயில் பணத்தைக் கொண்டு அப்போதே ஓர் அநாதாஸ்ரமத்தை நடத்தி வந்தார். இன்னும் மற்ற விடுதிகளுக்கு ஆதரவு அளித்து வந்தார். இருந்த பணவசதியோ குறைவு. புதிய ஸ்தாபனங்களுக்காகப் பணம் செலவு செய்ய இயலாது.

"நீங்களே எப்படியாவது இதை நடத்த வேண்டு மென்பது தெரியுமல்லவா," என்று அவர் சங். பிளானகனைக் கேட்டார்.

மதகுரு தெரியும் என்றார். அதிமேற்றாணியார் பணத் தைக் கொண்டு உதவிசெய்ய முடியுமென்று சங். பிளானகன்

எதிர்பார்க்கவில்லை. அதிமேற்றுணியார் தமது திட்டத்தை ஆமோதித்ததே அவருக்குத் திருப்தி அளித்தது.

அவருக்கு இப்போது வேண்டியதெல்லாம் பணம்தான். சிரமங்கள் இருந்தன என்று உணர்ந்தாலும், அவர் சந்தோஷமாயிருந்தார். மாதா மாதம் ஹோட்டலை நடத்தி அநுபவம் பெற்றிருந்தார் அல்லவா? புதிய திட்டம் இன்னும் அதிக சிரமத்தை அளிக்கப் போகிறது. வேலையில்லாத கிழவர்களை ஆதரிக்க வேண்டுமென்றால் ஜனங்கள் உதவி புரிவார்கள். ஆனால் போக்கிரிப் பையன்களுக்காக ஒரு வீடு உண்டாக்க வேண்டுமென்றால், அநாதாஸ்ரமங்களும், சர்க்காரின் சீர்திருத்தப் பள்ளிக்கூடங்களும் இல்லையா என்று ஜனங்கள் கேட்பார்கள். ஆனால் அவர் பயப்படவில்லை.

சங். பாட்ரிக்கின் வீட்டில் தம் குடும்பத்தினருடன் சாப்பிடும்போது சங். பிளானகன் தமது திட்டத்தை விவரித்தார். அவர்களுக்கு இது எதிர்பாராதொரு விஷயமாயிருந்தது. எல்லோரும் அவர்களுடைய அபிப்பிராயங்களைத் தெரிவித்தனர்.

அவருடைய தாயார் சொன்னார்: "இப்பிள்ளைகளுக்காக நீ இதுவரை உழைத்து வந்தாய். இப்போது அவர்களைக் குடும்பமாக எடுத்துக் கொள்ளுகிறேன் என்கிறாய். நீ எப்போதுமே ஒரு குடும்பத்தை நடத்தினதில்லையே!"

சங். பிளானகன் புன்முறுவல் செய்தார். "ஆனால் நான் பெரிய குடும்பத்தில் பிறந்து வளர்ந்தவனாயிற்றே, அம்மா. அதை நடத்தியவர்களும் கெட்டிக்காரர்களாயிற்றே. நான் வளர்ந்த வீடு மாதிரியே இச்சிறுவர்களுக்கும் ஒரு வீடு இருக்க வேண்டும்."

"ஆமாம். அங்கே எங்களுடைய உதவி இருந்தது உனக்கு. பெண்கள்தானே சமையல் வேலை செய்தது, துணிமணிகளைத் தைத்துக் கொடுத்தது. வீடு நிறைய பையன்கள்

இருந்தால் அந்த வேலையெல்லாம் யார் செய்வார்கள்?'' என்று கேட்டார் அவருடைய அன்னை.

சங். பிளானகன் சொன்னார்: "வேண்டுமானால், நீங்களும் நெல்லியும் வந்து உதவி செய்யலாம். சில கன்னியர்களையும் அனுப்பி வைப்பதாக அதிமேற்றாணியார் சொல்லியிருக்கிறார். மற்றப்படி ஆண்டவன் இருக்கவே இருக்கிறார்.''

ஒரு மணி நேரத்துக்குள் அவர்கள் எல்லோரும் சம்மதித்தார்கள். அவர்களுடைய முடிவான அபிப்பிராயத்தை சங். பாடரிக் வெளியிட்டார். "பிளானகன் ஒரு காரியத்தைச் செய்ய நினைத்தால், அதைச் செய்யத்தான் போகிறான். நாம் முடிந்தால் அவருக்கு உதவி செய்வதைத்தவிர வேறு ஒன்றும் செய்யமுடியாது.''

ஆனால் ஓமாஹாவில் மற்றவர்கள் அவ்வளவு எளிதில் உதவி செய்ய முன்வரவில்லை.

உதவாக்கரைப் பையன்களைக் காப்பாற்றுவது சர்க்காரின் பொறுப்பு என்று வாதித்தார்கள் பலர்.

"போலீஸாரும் கோர்ட்டுகளும் கவனிக்கவேண்டிய விஷயம் அது. தந்தையே, கடவுளின் வாக்கைப் பரப்புவது உங்கள் வேலை. அதைச் செய்யுங்கள். சிறுவர்களின் குற்றம்—அதெல்லாம் வேறு பிரச்னை,'' என்றார் ஒருவர்.

"அதிருஷ்டமற்ற சிறுவர்களுக்கு ஆண்டவனின் வாக்கைப் போதிக்க வேண்டாமா,'' என்று மதகுரு கேட்டால், "அதற்கு தனி ஸ்தாபனங்கள் இருக்கின்றன. அந்த ஸ்தாபனங்களின் முறைகளில் ஏதாவது தவறு இருந்தால் ஜனங்களுக்கு அது சீக்கிரம் தெரியத்தான் செய்யும்'' என்று பதில் கிடைத்தது.

ஒரு தகப்பனார் சொன்னார்: "நாங்கள் எங்கள் பிள்ளைகளுக்கு எல்லா வசதிகளும் செய்து கொடுக்கிறோம். நீங்கள் சொல்லும் பையன்கள் போக்கிரிகள், தந்தையே. சட்டம்

தான் அவர்களைப் பார்த்துக் கொள்ளவேண்டும். அதற்குத் தானே நாங்கள் வரி கொடுக்கிறோம்.''

இம் மனிதர்கள் இரக்கமற்றவர்கள் அல்ல. சீர்திருத்தப் பள்ளிக்கூடங்களிலுள்ள கொடுமைகளைப்பற்றியும், பொதுவாக அதிருஷ்டமற்ற சிறுவர்களின் துர்பாக்கிய நிலைமையைப்பற்றியும் மதகுரு கூறுவதை அவர்கள் நம்ப விரும்பவில்லை. அவருடன் சென்று நேரில் அவர்களே பார்க்கவும் விரும்பவில்லை. அதனால்தான் அந்த அலட்சிய மனப்பான்மை. ஆனால் நகரில் செல்வாக்குள்ள மற்றவர்கள் நாளா வட்டத்தில் சங். பிளானகனின் திட்டத்தை ஆமோதித்து, உதவி செய்யத் தயாராயிருந்தார்கள். கத்தோலிக்கர்கள், புராட்டஸ்டண்டுகள், யூதர்கள், ஆண்கள், பெண்கள், வாலிபர்கள் அனைவரும் உதவிக்கு வந்தார்கள்.

நண்பர் ஒருவருடன் ஒருநாள் டிராம் வண்டியில் சங். பிளானகன் போய்க் கொண்டிருக்கும்போது தமது திட்டத்தைச் சொன்னார்: "இன்னும் திட்டம் உருவாகவில்லை. முதலாவதாக, நான் ஒரு கட்டத்தைக் கண்டுபிடிக்கவேண்டும். சிறுவர்களுடைய மனதைக் கலைக்கக் கூடிய சுற்றுப்புறமுள்ள இடமாயிருக்கக்கூடாது. வாடகையும் குறைவாயிருக்க வேண்டும்.''

டிராம்வண்டி நின்றது. பல பிரயாணிகள் ஏறினார்கள். அவர்களில் ஒரு பெண்மணி, சங். பிளானகனுடைய நண்பருக்குத் தெரிந்தவர். "அவர்தான் காதரின் ஷீல்ட்ஸ். வீடு வியாபாரம் செய்பவர்,'' என்றார் அந் நண்பர்.

இருவரும் அவ்வம்மையார் உட்கார்ந்திருந்த இடத்துக்குச் சென்றனர். நண்பர் சங். பிளானகனின் திட்டத்தைப்பற்றிக் கூறினர். "உங்களுக்குத் தேவையான வீடு இருக்கிறது; சமீபத்தில்தான். இங்கேயே இறங்கலாம். கண்டக்டர், வண்டியை நிறுத்தப்பா,'' என்றார் ஸ்ரீமதி ஷீல்ட்ஸ்.

தெருவுக்குப் பின்புறமாக இருந்த ஒரு மாடி வீட்டிற்கு அவர் சங். பிளானகனையும் அவருடைய நண்பரையும் அழைத்துச்சென்றார். பழங்காலத்து வீடு. வாடகை 90 டாலர்கள். அட்வான்ஸாகக் கொடுக்கவேண்டும் என்றார் ஸ்ரீமதி ஷில்ட்ஸ்.

தம்மிடம் தற்சமயம் அவ்வளவு பணமில்லையென்று சங். பிளானகன் சொன்னார். அப்போது அவரிடம் ஒரு டாலர்கூடக் கிடையாது. "ஒன்று அல்லது இரண்டுநாளில் கொடுக்கலாமல்லவா?" என்று தைரியமாய்க் கேட்டார்.

முதல் மாதத்து வாடகையை அவர் ஒரு நண்பரிடம் கடன்வாங்கிக் கொடுத்தார்.

அத்தியாயம் 17

சங். பிளானகன் சிறுவர் விடுதியை ஆரம்பித்தபோது ஐந்து பையன்கள் இருந்தார்கள். பேஸ்பால் கட்சியினரி லிருந்து ஒருவன்கூட விரவில்லை. அவர்களுக்குத் தாய்தந்தை யர் இருந்தனர். அவர்களுடன் அச் சிறுவர்கள் இருக்க வேண்டுமென்று சங். பிளானகன் கட்டளையிட்டார். விடுதியி லிருந்த ஐவரில் மூவர் அநாதைகள். சில நாட்களுக்கு முன்புதான் கோர்ட்டாரால் சங். பிளானகனிடம் அனுப்பப் பட்டவர்கள். மற்ற இருவர் விடுதியை ஆரம்பித்த தினத் தன்று, அதாவது 1917-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 12-ம் தேதியன்று, சிறுவர் கோர்ட்டிலிருந்து சங். பிளானகனின் பராமரிப்பின் கீழ் வந்தவர்கள்.

காலையில் அவர்களை நேரே கோர்ட்டிலிருந்து அழைத்து வந்து விடுதியில் சேர்த்தார். அன்று மாலை மற்ற மூவரை யும் கொணர்ந்தார். அவர்களை வரவேற்கக் காத்திருந்தவர் கள் அதிமேற்றிராணியார் ஹார்ட்டி அனுப்பியிருந்த மூன்று கன்னியர்.

வந்த சிறுவர்களுக்கு விடுதி பெரிய மாளிகையைப் போன்று இருந்தது. சங். பிளானகனும் அவருடைய சகோதர சகோதரிகளும் நண்பர்களும் அங்கும் இங்குமாகச் சம் பாதித்த பழைய நாற்காலிகளும், மேஜைகளும், கட்டில்களும் கிடந்தன.

அதிமேற்றிராணியார் வந்தார். விடுதியின் மேன் மாடியில் ஆலயத்தை நிறுவினர்.

இவ்வாறு சங். பிளானகனின் சிறுவர் விடுதி தொடங்கப் பட்டது. சிறுவர்கள் எட்டிலிருந்து பத்து வயதுக்குட் பட்டவர்கள். வந்த சிறிது நேரத்துக்கெல்லாம் அவர்களுக்கு இடம் பழகிவிட்டது. வீட்டைச் சுற்றிப் பார்வையிட்டார்கள். அன்று இரவு சாப்பிடுவதற்குள் இரு சிறுவர்களுக்குள் சண்டையும் மூண்டுவிட்டது. அவர்களிருந்த அறையில் ஜன்னல் ஓரமாய் யார் படுத்துக்கொள்வது என்பது பற்றி ரகளை. கன்னியர் வந்து அவர்களைச் சமாதானப்படுத்தி னார்கள்.

சாப்பிடும்போது சிறுவர்கள் சங். பிளானகனைப் பல கேள்விகள் கேட்கலாயினர். இன்னும் பையன்கள் வருவார் களா? அவர்கள் பள்ளிக்கூடம் போகவேண்டுமா? வெளியே சென்று அவர்கள் விளையாடவேண்டுமா? இத்யாதி.

சங். பிளானகன் உண்மையைச் சொன்னார்: “இன்னும் ஒன்றும் தெரியாது எனக்கு. உங்களுக்குப் பள்ளிக்கூடம் இருக்கும். விளையாடுவதற்கும் நேரம் இருக்கும். மழையில்லை யென்றால் வெளியில் விளையாடலாம். ஆனால் இப்போது நீங்கள் தெருவில் இறங்கக்கூடாது.”

மதகுரு சிறுவர்களை அலட்சியமாகப் பாவிக்கவில்லை. வயதான வாலிபர்களிடம் பேசுவதுபோலவே அவர் அவர்க ளிடம் சொன்னார்: “நாம் செய்யவேண்டிய காரியங்கள், கற்றுக்கொள்ளவேண்டிய விஷயங்கள் நிறைய இருக்கின்றன.

இங்கேயே பள்ளிக்கூடம் ஒன்றை ஆரம்பிக்க வேண்டும். உங்களுக்கெல்லாம் எப்படியாவது புதிய உடைகளைச் சம்பாதிக்கவேண்டும்.''

ஆனால் அவரது பை காலியாக இருந்ததை அவர் உணர்ந்தார். அன்றாட அலுவல்களைச் சரிக்கட்டுவதே பிரமப்பிரயத்தனமாக இருந்தது. வெகுமதிகளும் நன் கொடைகளும் கொஞ்சம் கொஞ்சமாக வந்தன. அவர்களுக்குத் தேவையான உணவை வாங்குவதற்கே அப்பணம் செலவாகிவிட்டது. சங். பிளானகனது சேவையைப் போற்றிய நீதிபதிகள் நாளுக்குநாள் புதிய பையன்களை அனுப்பினார்கள். ஆனால் அவர்களுக்கு வேண்டிய செலவுக்காகப் பண உதவி செய்வது நீதிபதிகளால் ஆகாத காரியம். சிறுவர் விடுதியில் உணவுக்காக மட்டுமே பணம் அதிகமாகச் செலவாகத் தொடங்கியது.

அதோடுகூட, வயதானவர்களுக்கு ஹோட்டலை நடத்துவது வேறுவிஷயம். சிறுவர் விடுதியை நடத்துவது வேறு விஷயம். இப்போது துடுக்கான பையன்களுக்குத் தாயும் தந்தையுமாக விளங்கினார் சங். பிளானகன். ஒரு வீட்டின் தலைவராயிருந்தார் அவர்.

பண உதவிக்காகப் பலருக்குக் கடிதங்கள் எழுதுவார். மற்ற நேரங்களில் பிள்ளைகள் விளையாடவும் வேலை செய்யவும் திட்டம் போட்டு நிறைவேற்றுவார். இவ்வாறாக அவர் உழைத்தார்.

விடுதியை ஆரம்பித்த சில நாட்களுக்குப் பிறகு ஓர் இரவு, ஒரு பையன் அழுவதைக்கேட்டு சங். பிளானகன் விழித்துக்கொண்டார். சிறுவர்கள் இருக்கும் அறைக்குப் போனார். அங்கே படுக்கையில் உட்கார்ந்துகொண்டு அப் பையன் காதுவலி என்று சொல்லி அழுதான். இந்த நெருக்கடியை அவர் எதிர்பார்க்கவில்லை. இப்பொழுது

என்ன செய்வது? டாக்டரைக் கூப்பிடவேண்டுமா என்று யோசித்தார்.

பக்கத்திலிருந்த பையன் ரொம்ப சாவதானமாகச் சொன்னான்: "எனக்குக் காதுவலி வரும்போதெல்லாம், எங்கம்மா என்னைத் தூக்கி வைத்துக்கொண்டு, பாடிக் கொண்டே நடப்பார்கள்."

மதகுரு சில விநாடிகள் யோசித்தார். பிறகு காதுவலி யுள்ள பையனைத் தூக்கியெடுத்துக்கொண்டு அறையில் உலாவ ஆரம்பித்தார். தாம் சிறுபிள்ளையாக இருந்தபோது அயர்லந்தில் தம்முடைய தாயார் பாடிய பாட்டுக்களை ஞாபகப்படுத்திக்கொண்டு மெதுவாகப் பாடினார். சிறிது நேரத்தில் நல்லவேளையாகப் பையன் உறங்கிவிட்டான். வியாதியைக் குணப்படுத்தக்கூடிய சக்தி தமது குரலுக்கு இருக்கிறதேயென்று சங். பிளானகன் சந்தோஷப்பட்டார்.

விடுதியிலிருந்த ஐந்து சிறுவர்களும் தங்களாலான உதவியைச் செய்ய முன்வந்தார்கள். ஆனால் அவர்களிட மிருந்து உதவிக்குப் பதிலாகத் தொந்தரவுதான் அதிகமாகக் கிடைத்தது. ஒருவன் தான் ஒரு செப்படிவித்தைக்காரன் எனக் கனவு கண்டான். மறுநாள் ஒருகையில் எத்தனை பிளேட்டுகளைத் தூக்கிச்செல்ல முடியும் என்று பரீட்சை செய்யலானான். பல பிளேட்டுகளைக் கீழேபோட்டு உடைத்த பிறகு, அவன் விடுதிப் பிளேட்டுகளை வைத்து பரீட்சை செய்வதை நிறுத்தினான்.

முதல் வாரம் முடிவதற்குள், விடுதியில் பதினைந்து பையன்கள் வந்து சேர்ந்தார்கள். விடுதியிலிருந்த கட்டில்கள் போதவில்லை. இன்னும் அதிக கட்டில்களைக் கொண்டுவர முயற்சி செய்யலானார் சங். பிளானகன்.

இந்த நெருக்கடியில் நல்ல வேளையாக, அதிமேற்றிராணியா ரிடமிருந்து ஒரு செய்தி வந்தது. சங். பிளானகன் சிறுவர்

களுக்குச் செய்துவரும் சேவை முக்கியமானதாகக் கருதப் படுவதால், அவர் இனி ஆலய அலுவல்களை கவனிக்க வேண்டியதில்லை யென்று அதிமேற்றுணியார் ஹார்ட்டி அறிவித்தார். அச்செய்தி அச்சந்தர்ப்பத்தில் மதகுருவுக்குக் கிடைக்கவில்லையெனில், அவர் ரொம்ப சங்கடப்பட்டிருப்பார்.

"எப்பொழுது திரும்பிப்பார்த்தாலும், கோர்ட்டிலிருந்து புதிதாக ஒரு பையன் வந்திருப்பதைக் காண்கிறேன். இத்தனை பிள்ளைகள் வீடுவாசலின்றி இருந்தனர் என்று நான்கூட இதுவரை உணர்ந்ததில்லை," என்றுர் சங். பிளானகன் கன்னியர் ரோஸ் அவர்களிடம்.

கிறிஸ்துமஸுக்கு முந்தின தினம், அதாவது விடுதியை ஆரம்பித்த இரண்டு வாரங்களுக்குள் விடுதியில் 25 சிறுவர்கள் இருந்தார்கள்.

அதற்குள்ளாகவே, பலமதத்தினரும் இனத்தினரும் விடுதியில் சேரலாயினர். சிறுவர்களில் கத்தோலிக்கர்கள், புராட்டஸ்டன்டுகள், யூதர்கள், வெள்ளையர்கள், நீக்ரோக்கள் இருந்தனர். முதலிலிருந்தே அவர்களை சங். பிளானகன் எவ்விதத்திலும் பிரித்துவைக்கவில்லை. ஒரு சிறுவன் எந்த இனத்தைச் சேர்ந்தவன், எந்நிறமுடையவன் என்று அவர் யோசித்ததில்லை. ஒவ்வொரு பையனும் தன்னுடைய மதத்தைச் சேர்ந்த ஆலயத்துக்குச்சென்று கடவுளை வழிபட வேண்டுமென்பதைத் தவிர அவர் மற்றென்றையும் வற் புறுத்தவில்லை. கத்தோலிக்க மதகுருவால் ஆரம்பிக்கப்பட்டு, கத்தோலிக்கக் கன்னியரின் உதவியால் நடத்தப்படுவதா யினும் அச் சிறுவர் வீடு எல்லாச் சிறுவர்களையும ஆதரித்தது, ஆதரித்து வருகிறது.

சங். பிளானகனின் தீவிர முயற்சியாலும்கூட விடுதியி லிருந்த பையன்கள் ஒரே நாளில் யோக்கியன்களாக மாறிவிட வில்லை. முதல் வாரத்தில் தொந்தரவு ஏதும் உண்டாக வில்லையெனலாம். அடுத்த வாரத்தில் பையன்கள் அதிக

மாக ஆக, வீடு நிறைய கூச்சலிடும் சிறுவர்கள் இருப்பதின் தொல்லை நன்கு விளங்கியது.

மாடியில் இருட்டில் திடீரென்று ஒரு சத்தம் உண்டாகும். காதைப் பிளக்கும் அந்த சத்தத்தால் என்ன நேர்ந்து விட்டதோ என்ற அதிர்ச்சியுடன் சங். பிளானகனும் மற்றவர்களும் படுக்கையிலிருந்து எழுந்து விரைந்து மாடிக்குச் செல்வார்கள். பையன்களுக்குள் சண்டையாக இருக்கலாம் அது. அல்லது ஒரு சிறுவன் ஏதாவது கனவுகண்டு மருண்டு கூச்சலிட்டிருக்கலாம். அல்லது விடியற்காலையில் ஒரு பையன் எழுந்து நெருப்பணைக்கும் உத்தியோகஸ்தனுய் மாறிவிடுவதின் விபரீதவிளைவாக இருக்கலாம். ஜன்னலிலிருந்து ஒரு துணியைப் பிடித்துக்கொண்டு தொங்கும் அச் சிறுவனைக் காப்பாற்றிவிடுவதற்குள், மற்ருெரு மூலையில் வீட்டைச் சுத்தம் செய்துகொண்டிருக்கும் இரு சிறுவர்கள் சண்டைபோட ஆரம்பித்து அறையிலிருக்கும் நாற்காலியை உடைத்துவிடுவார்கள். இந்தக் களேபரத்தின் நடுவில் கோர்ட்டிலிருந்து புதிதாக வரும் சிறுவர்களை வரவேற்ருக வேண்டும்.

இதனுல் சங். பிளானகனின் மனது சலிப்படையவில்லை. சில நாட்களில், தமது பெற்ருேர்களும் சகோதரர்களும் இருக்கும் வீட்டிற்குச் சென்று அவர்களிடம் தமது விடுதியில் நடக்கும் அமர்க்களத்தை விவரிப்பார். அடுத்த நிமிடமே அவர் சிரித்துக்கொண்டு சொல்லுவார்:

"அவர்கள் எல்லோரும் நல்ல பிள்ளைகள். இன்னும் எல்லாவற்றையும் சரியாக அமைத்து விட்டால், தொந்தரவு ஒன்றும் இருக்காது. ஆனுல் சில சமயங்களில் அவர்கள் செய்யும் சேஷ்டைகளோ—ஏன் அப்படிச் செய்கிருர்கள் என்றே புரிவதில்லை."

அவருடைய தாயார் மகனைப்பார்த்துப் புன்முறுவல் செய்வார்கள்: "நீ என்ன எதிர்பார்த்தாய், சங். எட்வர்ட்?"

நீ சிறுவனுயிருக்கும்போது என்னென்ன விஷமங்கள் செய்தாய்?''

விடுதியிலிருந்த சிறுவர்களின் சேஷ்டைகளுக்குச் சமமாகத் தாம் எதையும் செய்ததாக மதகுருவுக்குத் தோன்றவில்லை. ஆனால் திரும்பி விடுதிக்கு வரும்போது, பொறுமையின் அவசியத்தைப்பற்றி அவர் நினைத்துக்கொள்ளுவார். விடுதிக்கு வந்ததுமே புதிய புதிர்.

ஒருநாள் திடீரென்று சிறுவர்கள் பரக்கப் பரக்க ஓடிவந்து கத்தினர்கள். டானியைக் காணேம் என்ருர்கள். அவன் வீட்டைவிட்டு அடிக்கடி ஓடிவிடுகிருன் என்பதற்காகத்தான் அவனைச் சங். பிளானகனிடம் அனுப்பியிருந்தார்கள். உடனே எல்லோரும் அவனைத் தேட ஆரம்பித்தனர். வீடு முழுவதும் அலேந்தாயிற்று. டானியின் துணிமணிகளும் மற்ற சாமான்களும் விடுதியிலேயே கிடந்தன. ஆனல் சிறுவனைக் காணேம்.

மாடியில் ஓர் உள்ளறை இருந்தது. அப்பக்கமாகப் போகும்போது, சங். பிளானகனுக்கு ஏதோ ஓசை கேட்டது போல் தோன்றிற்று. யாரோ சிரிப்பை அடக்க முயலும் சத்தம்போல் இருந்தது அது. அவர் சட்டென்று திரும்பி உள்ளறையின் கதவைத் திறந்தார். அங்கே தரையில் உட்கார்ந்துகொண்டு இடியிடியென நகைத்துக்கொண்டிருந்தான் டானி. பெருமூச்சுவிட்டுக்கொண்டே, சங். பிளானகன் தமது அறையை நோக்கிச் சென்ருர், விடுதியின் வரவு செலவுக் கணக்கைப் பார்க்க.

அத்தியாயம் 18

அந்தக் குளிர்காலம் முழுதுமே ஒரு சோதனை காலமாக இருந்தது சங். பிளானகனுக்கு. அடுத்தநாள் தேவைகளுக்கோ, அடுத்தமாத வாடகைக்கோ வேண்டிய பணம் இருப்பதில்லே.

அதோடு, அவரைப்பற்றி ஒரு சர்ச்சையும் நகரில் கிளம்பியது. இப்பரம ஏழையான மதகுரு எதைச் சாதிக்க விரும்புகிறார் என்று சிலர் கேள்வி கேட்க ஆரம்பிததனர். வயிற்றுக்குப் போதிய அளவு ரொட்டிக்கூட கொடுக்க முடியாதபோது, சங். பிளானகன் ஓர் ஒட்டைவீடு நிறையப் பையன்களைச் சேர்த்துவைத்து அவர்களை எவ்வாறு சீர்திருத்தம் செய்யமுடியும் என்றனர். மதகுரு கண்டித்த சர்க்கார் ஸ்தாபனங்களில் உணவாவது பிள்ளைகளுக்கு நிறையக் கிடைத்ததே என்று கேட்டனர்.

வளரும் குழந்தைகளுக்குப் பசியினால் ஏற்படும் உபாதையைப் பற்றி அவர்கள் மதகுருவுக்கு எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியமில்லை. யாருக்கும் உணவு கிடைத்தால் மட்டும் போதாது என்று ஞாபகப்படுத்துவார் சங். பிளானகன் குறைகூறுபவர்களை நோக்கி. இச்சிறுவர்கள் அநாதைகளாகக் கிடந்தனர். தனிமையால் திண்டாட்டப்பட்டுக் கொண்டிருந்தனர். உணவைப்போலவே அவர்களுக்கு அன்புள்ள உபசரிப்பும் அவசியம் என்றார் மதகுரு.

கோர்ட்டு நீதிபதிகளும் உத்தியோகஸ்தர்களும் அவரை ஆதரித்துப் பேசினார்கள். மதிப்பதற்கு முடியாத கருணையையும் கவனத்தையும் அவர் சிறுவர்களுக்கு அளித்தார் என்பதை அவர்கள் உணர்ந்தார்கள். அவருடைய பணி எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பது அவர்களுக்குத் தெரியும். ஆனால் சில சமூகநல ஊழியர்களுக்கு அது புரியவில்லை. வறுமையே சிறுவர்களின் கெட்ட நடவடிக்கைகளுக்குக் காரணம் என்பது அவ் ஊழியர்களின் சித்தாந்தம்.

வறுமை ஓரளவுக்குக் குற்றங்களுக்குக் காரணமாய் விளங்கினாலும், அதுவே முக்கிய காரணமாகாது என்று சங். பிளானகன் வற்புறுத்தினார். தமது விடுதியின் மூலம் அதை நிரூபித்துவந்தார். அவருடைய சிறுவர்கள் வறுமையில்

வாழ்ந்தாலும் அதனுல் உண்டாகும் படிப்பினையைக் கிரஹித்துக் கொண்டார்கள்.

சீர்திருத்தப் பள்ளிக்கூடங்களுக்கும் லாயக்கில்லையென்று கருதப்பட்ட போக்கிரிகள் சங். பிளானகனின் கட்டுப்பாட்டின்கீழ் ஒழுங்கான சிறுவர்களாக மாறினுர்கள். அதனுல்தான் நீதிபதிகள் புதிய சிறுவர்களை மதகுருவிடம் அனுப்பி வந்தனர். பிறகு மற்ற ஸ்தாபனங்களிலிருந்தும் சங்.பிளானகனின் விடுதிக்குச் சிறுவர்கள் வரலாயினர்.

விடுதியிலோ இடம் போதவில்லை. வருகிற சிறுவர்கள் எல்லோரையும் அநுமதிக்க இயலாத நிலையில் மதகுரு இருந்தார். கடைசியில், புதிதாய் வரும் பிள்ளைகளில் சிலரை மட்டும் பொறுக்கி எடுத்துக் கொள்ளவேண்டியதாயிற்று. ஜனவரி மாதம் முடிவதற்குள் விடுதியில் ஐம்பது சிறுவர்கள் இருந்தனர்.

ஐம்பது சிறுவர்களுக்கும் உணவும் உடையும் அளிக்க வேண்டும். நோய்வாயுற்றபோது அவர்களுக்கு சிகிச்சை செய்யவேண்டும் ; கல்வி புகட்டவேண்டும், விளையாட்டு வசதி செய்யவேண்டும். இவை யனைத்தையும் கவனிக்க முழு நேரமும் வேலை செய்ய ஆட்கள், இருந்தாக வேண்டும். ஆனுல் அவர்களுக்குக் கிடைக்கும் பண உதவியைக்கொண்டு அம்மாதிரி முழுநேரம் வேலைசெய்யக்கூடிய சிப்பந்திகளை அமர்த்துவது இயலாத காரியம். விடுதியின் அலுவல்களை சங். பிளானகனும், அதிமேற்ருணியார் அனுப்பியிருந்த மூன்று கன்னியர்களுமே சமாளித்து வந்தனர்.

அடிக்கடி மதகுருவின் தாயாரும் தமக்கை நெல்லியும் வந்து சிறுவர்களின் உடைகளை எடுத்துச் செல்வார்கள். தங்கள் வீட்டில் அவற்றைச் சுத்தம்செய்து, தைத்து திருப்பித் தருவார்கள். அவர்களுக்கு இது வீண் சிரமம் என்று சங். பிளானகன் கூறுவார். "அதெல்லாம் பரவாயில்லை சங். எட்வர்ட். ஒரு பெரிய குடும்பத்தை நடத்தி எங்களுக்குப்

பழக்கம்தான். லீபெக்கில் நாம் வாழ்ந்ததைப் போலத்தான் இருவும்'', என்பார் அவருடைய சகோதரி நெல்லி.

பிள்ளைகளுக்குக் கல்வி புகட்டுவது சிக்கலான பிரச்னையாக விளங்கிற்று. வீடுவாசல்களில் வாழ்ந்து வராததால், பல சிறுவர்கள் சரியாக வாசித்து வந்ததில்லை. அவர்களுக்கு ஒழுங்காகப் பாடங்கள் சொல்லிக்கொடுக்க வேண்டியது அத்தியாவசியமாயிற்று. விடுதியில் சிறுவர்களின் எண்ணிக்கை அதிகமாயிருந்ததால், அங்கே ஒரு பள்ளிக்கூடத்தை நடத்துவதென்பது சாத்தியமாகாது. ஒமாஹா பொது பாடசாலைகளின் நிர்வாகிகளிடம் சென்று சங். பிளானகன் விஷயத்தைச் சொன்னார். மற்றப் பிள்ளைகளுடன் தமது விடுதியில் உள்ளவர்களும் சேர்ந்து வாசிக்கவேண்டும் என்று மதகுரு விரும்பினார்.

" அவர்கள் துஷ்டர்கள் அல்ல என்பதை நீங்கள் உணரவேண்டும். சாதாரணமான வீடுகளில் வசித்திராததால் அவர்களைக் கவனிப்பார் இல்லை. எங்கள் விடுதிக்கு வந்த பிறகு அவர்கள் ஒழுங்காக இருக்கிறார்கள். அவர்களுக்குக் கல்வி வசதி அளிக்கவேண்டும். அதற்கு அவர்களுக்கு உரிமை இருக்கிறது,'' என்று வாதாடினார் சங். பிளானகன்.

கல்வி அதிகாரிகளுக்கு இப் பேச்சு நியாயமற்றதாகத் தோன்றிற்று. விடுதியிலிருந்த பல பையன்கள் சட்டத்தை மீறினவர்கள் என்பது அவர்களுக்குத் தெரியும். ஆனால் அப் பையன்களுடைய நன்னடத்தைக்கு மதகுரு பொறுப்பு ஏற்றுக்கொண்டார். ஆகவே அவருடைய யோசனைக்கு அதிகாரிகள் வேண்டா வெறுப்புடன் சம்மதித்தார்கள்.

சில டாலர்களுக்கு ஒரு குதிரை வண்டியை ஏற்பாடு செய்து அதில் பிள்ளைகளை சங். பிளானகன் பாடசாலைக்கு அனுப்பிவந்தார்.

விடுதியில் " அமைதிக்கும் பங்கம்'' விளைவிக்கும் சம்பவங்கள் நேரிடாமலில்லை. சண்டைகளும் சச்சரவுகளும்

இருக்கத்தான் செய்தன. சில பையன்கள் அவ்வப்போது விதிகளை மீறி நடந்தார்கள். ஆனால் முதலிலிருந்தே சங். பிளானகனின் விடுதியில் குற்றம் செய்ததற்காக யாரையும் அடிப்பது கிடையாது. அடிப்பது குழந்தைகளை நியாயமான முறையில் திருத்த முடியவில்லை என்பதைத்தான் நிரூபிக்கும் என்று, சங். பிளானகன் கருதினர். அடியின் வலியினால், பயத்தினால் ஒரு சிறுவனைப் பணிந்து நடக்கும்படி செய்தால் அவனுடைய குணம் உயர்ந்துவிடாது என்று அவர் நம்பினர்.

தவறு செய்தால் சலுகைகள் போய்விடும், அதிக நேரம் படிக்கவேண்டும் அல்லது வேலை செய்யவேண்டும். அதுவே விடுதியில் அநுஷ்டிக்கப்பட்டு வந்த ஒழுங்கு நடவடிக்கை. மற்றச் சிறுவர்கள் விளையாடிக் கொண்டிருக்கும் போது தவறு செய்தவன் சமையல் அறையில் வேலை செய்ய வேண்டியிருக்கும். அல்லது அவனுக்குப் பழம் கிடைக்காமல் போகும். சனி ஞாயிறன்று வெளியே சுற்றுவதற்கு அநுமதி கிடைக்காது.

நாளாக ஆக, விடுதியின் பொருளாதார நிலைமை மோசமாயிருந்தாலும், நிர்வாகம் சரிவர நடந்து வந்தது. பண உதவியும் நெருக்கடியைச் சமாளிக்குமளவுக்குக் கிடைத்து வந்தது. உதவியெல்லாம் பணமாகவே கிடைத்தது என்று அர்த்தமில்லை. ஒரு விவசாயி உருளைக்கிழங்கு அனுப்பினர். அத்தெரு முனையிலிருந்த ஒரு கிழவி காலையில் தட்டு நிறைய பிஸ்கட்டுகள் கொண்டு வந்து கொடுப்பாள். பழைய துணிகள், செருப்புகள், விளக்குமாறுகள் இத்யாதி......வரும்.

வீட்டைச் சுத்தமாக வைத்திருக்கச் சிறுவர்கள் நாளடைவில் பழகிக் கொண்டனர். ஒவ்வொரு பையனும் தனது அறையிலுள்ள படுக்கை முதலியவற்றைச் சுத்தப்படுத்துவது மட்டுமின்றி மற்றுமுள்ள அலுவல்களையும் கவனித்துக் கொள்ளுவான்.

குளிர்காலம் முடியுமுன், வீடு நிர்வகிக்கப்படும் முறை முக்கியமாக நகரிலுள்ள மாதர்களிடையே பிரபலமடைந்தது. பலர் சங். பிளானகனைப் பாராட்டிக் கடிதங்கள் எழுதினர். கடிதங்களுடன் சிறிது பணமும் அனுப்பிவைத்தனர்.

ஆனால் எதிர்ப்பும் பலத்தது. சீர்திருத்தப்பள்ளிக் கூடங்கள்தான் அச்சிறுவர்களுக்குச் சரியான இடம் என்று வாதாடினவர்கள் அப்போதும் இருந்தார்கள். இப்போதும்கூட அத்தகைய மனிதர்கள் இருக்கிறார்கள். துஷ்டச் சிறுவர்களைச் சரிப்படுத்த பிரம்பு அவசியம் என்பது அவர்களுடைய அசைக்க முடியாத நம்பிக்கை. மதகுருவின் நூதன கருத்துக்களை அவர்கள் நிர்த்தாட்சண்யமாகப் புறக்கணித்தார்கள்.

விடுதியின் உதவிக்காக நடத்திய கூட்டங்களில் அம்மாதிரி மனிதர்களோடு எதிர்த்து வாதாடும் அவசியம் சங். பிளானகனுக்கு ஏற்பட்டது. "அன்பு, பரிவு என்ற அர்த்தமற்ற பேச்சுகளால் நீங்கள் எப்படிக் குற்றவாளிகளின் குணத்தை மாற்ற முடியும்? அச்சிறுவர்கள் சட்டத்தையும் ஒழுங்கையும் மதிக்கும்படி நீங்கள் எப்படி அவர்களை மாற்ற முடியும்?" என்று அவர்கள் கேட்டார்கள்.

சங். பிளானகன் பொறுமையுடன் பதில் சொன்னார். முதலாவதாக, அச்சிறுவர்கள் குற்றவாளிகள் அல்ல. அவர்கள் பாலகர்கள். அவர்களை அன்புடன் வளர்ப்பது அவசியம். அவர்களுடைய மனதில் குடிகொண்டிருக்கும் பயத்தை நீக்குவது அவசியம் என்றார் அவர்.

அவர் மேலும் சொன்னார்: "பொதுவாக எல்லாப் பிள்ளைகளுமே எது சரியோ அதைத்தான் செய்ய விரும்புகிறார்கள். தங்களை மற்றவர்கள் போற்றவேண்டும், பாராட்ட வேண்டும் என்றே அவர்கள் விரும்புகிறார்கள். ஆனால் சில சமயங்களில் பாராட்டுக் குரிய செய்கை என்ன என்பது அவர்களுக்குத் தெரிவதில்லை. சரியான பயிற்சியின் மூலம்,

உதாரணத்தின் மூலம் எது சரியான வழியென்பதை அவர்களுக்கு நாம் காண்பித்துக் கொடுக்கவேண்டும்."

மதகுரு இவ்வாறு தர்க்கித்துப் பேசும்போது ஒரு சிலர் மனமாற்றம் அடைவதுமுண்டு. அவருடைய கருத்துகள் புரட்சிகரமானவை யென்று கருதுபவர்களுக்கு அவருடைய தர்க்கம் திருப்தி அளிக்காது. போதாதற்கு, அவருடைய கருத்துகள் சரியானவையென்று சந்தேகமற நிரூபிக்குமளவுக்கு விடுதி ஸ்திரமடைய வில்லையே.

சிறுவர்கள் குற்றவாளிகளாக மாறுவதற்குக் காரணம் சமூகத்திலுள்ள கோளாறுகள்தான். முக்கியமாக அப்பொறுப்பைச் சிறுவர்களின் பெற்றோர்கள் ஏற்றுக் கொள்ளவேண்டுமென்ற கருத்து பலருக்கு ஒப்புக் கொள்ளுவதற்குக் கசப்பாயிருந்தது. ஒரு பையன் குற்றம் செய்வது அவனைப் பொறுத்த விஷயம், அவன் பிறவிலேயே துஷ்டனாய்ப் பிறந்தான் என்று நினைப்பது பலருக்குச் சௌகரியமாகத் தோன்றிற்று.

ஆனால் சங். பிளானகனின் விடுதியை வந்து பார்ப்பவர்கள் அங்குள்ள சிறுவர்களில் யார் குற்றம் செய்தவர்கள், யார் அநாதைகளாக விடுதிக்கு வந்தவர்கள் என்று பிரித்துச் சொல்ல முடியாது.

1918-ம் ஆண்டின் வசந்த காலத்தில் சங். பிளானகனின் சிறுவர் விடுதி தழைக்கத் தொடங்கியது. பண நெருக்கடியும் ஒருவாறு தீர்ந்தது. மதகுருவின் நண்பர்கள் தவறாமல் உதவி செய்து வந்தார்கள். முடியும் போதெல்லாம் விடுதி சிறுவர்களின் பெற்றோர்களிடமிருந்தும் சிறிது பணம் பெறுவதுண்டு. ஆனால் சிறுவர்களைச் சேர்த்துக் கொள்வதற்காக எப்போதும் கட்டாயமாகப் பணம் வசூலித்தது கிடையாது. பல சிறுவர்களுக்கு உதவி செய்யக்கூடிய நெருங்கிய பந்துக்கள் இருப்பதில்லை. ஓரிருவர் விஷயத்தில் தந்தையோ, வேறு உறவினர்களோ மாதா மாதம் சில டாலர்கள் அனுப்பி வைப்பார்கள்.

இம்முறை இன்றுவரை சிறுவர் நகர் விஷயத்தில் அமுலில் இருந்து வருகிறது.

கொஞ்சம் கொஞ்சமாகச் சிறுவர்களின் பொழுது போக்குக்காகவும் வசதிசெய்யப்பட்டு வந்தது. சங். பிளானகன் பந்து, பாட் முதலியவற்றை எங்கிருந்தோ சம்பாதித்து வந்தார். வீட்டுக்கு வெளியே பிள்ளைகள் பேஸ்பால் விளையாடுவார்கள். சந்தர்ப்பம் கிடைக்கும் போது மதகுரு அவர்களைப் பார்க்குக்கு அழைத்துச் செல்லுவார். அங்கே கட்சிகளாகப் பிரிந்து பையன்கள் விளையாடுவார்கள்.

பிறகு, விடுதியில் "சங்கித இலாகா" வும் தோன்றிற்று. முதலில் சிறுவர்கள் பாட்டுப் பாடிக்கொண்டிருந்தனர். நாளடைவில் சங்கீதக் கருவிகள் கிடைத்த பிறகு கோஷ்டிகானம் செய்யலானார்கள். "நாம் சொந்த பாண்ட் ஒன்றைச் சீக்கிரம் ஏற்படுத்திவிடலாம்," என்றார் சங். பிளானகன் உற்சாகமாக.

அப்போது, தமது கனவு பலிக்கும் என்ற நம்பிக்கை மதகுருவுக்கு ஊர்ஜிதமாயிற்று. தொழிலாளர்களுக்காக நடத்தி வந்த ஹோட்டலை மூடி விட்டுத் தமது முழுநேரத்தையும் கவனத்தையும் சிறுவர் விடுதியின் அலுவல்களில் செலுத்தினார் சங். பிளானகன். விடுதியோ சிறிய வீடாக இருந்ததால், ஒவ்வொரு நாளும் புதிதாய் வரும் சிறுவர்களில் பலரை எடுத்துக் கொள்ளாமல் திருப்பி அனுப்பிவிட வேண்டியதாயிற்று. அக்காட்சியைக்காண அவருடைய மனம் சகிக்கவில்லை. இன்னும் பெரிய வீடு ஒன்றை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று தீர்மானித்தார் மதகுரு.

அப்போது கொடுத்துவந்த வாடகையைவிட அதிகம் கொடுக்க அவருக்கு வசதியில்லையெனினும், பெரிய வீட்டைத் தேடி அலைந்தார் மதகுரு. ஒரு நாள் ஒரு நண்பர் வந்தார். நகரின் பின்புறமாகவுள்ள இடத்தில் ஒரு வீடு மலிவாகக்

கிடைப்பதாகச் சொன்னார். சங். பிளானகன் விரைந்து சென்றார். புதிய வீடு பழைய வீட்டைப்போல் பத்துமடங்கு பெரிது. இடம் நிறைய இருந்தது. சுற்றுப்புறமும் காலியாக நிலம் இருந்தது. "நான் இதை இப்போதே வாடகைக்கு எடுத்துக் கொள்ளுகிறேன்," என்றார் மதகுரு.

அவ்வீட்டுக்குப் பெயர் ஜெர்மன்—அமெரிக்கன் வீடு, ஜெர்மனியிலிருந்து வந்து அமெரிக்காவில் குடியேறியவர்கள் அங்கே கூட்டங்கள் கூடிப் பாடுவது வழக்கமாம். ஆனால் அப்போது அங்கே கூட்டங்கள் நடப்பதில்லை. அப்போது அமெரிக்கா ஜெர்மனியுடன் போர்புரிந்துவந்தது.

அத்தியாயம் 19

ஜூன் மாதத்தில் சங். பிளானகனும் அவருடைய சிறுவர்களும் புதிய வீட்டுக்குக் குடிபோனார்கள். கோழி கூவும்போது புதிய வீட்டைநோக்கி அவர்கள் தங்கள் சாமான்களை வண்டியிலேற்றிச் சென்றார்கள்.

சங். பிளானகன் தமது பையில் அரிய குறிப்புகள் அடங்கிய காகிதத்தை வைத்தார். அது விடுதியின் உடைமைகளைப் பற்றியல்ல. இடமில்லாததால் இதுவரைத் தாம் அனுமதிக்கமுடியாமற்போன சிறுவர்களின் பெயர்களையும் விலாசங்களையும் அவர் அக்காலத்தில் குறித்து வைத்திருந்தார். புதிய இடத்துக்குச் சென்றதும் அப்பையன்களை அழைப்பதுதான் முதல்வேலையென்று அவர் தீர்மானித்தார். முதல் வாரத்திலேயே முப்பது பையன்களைச் சேர்த்துக் கொண்டார். அப்போது விடுதியில் மொத்தம் நூற்றுக்கு மேல் சிறுவர்கள் இருந்தார்கள்.

குடும்பத்தை விஸ்தரித்ததில் புதிய பிரச்னைகள் உதித்தன. நூறு பிள்ளைகளைச் சமாளிப்பது எளிதான காரியமல்ல. அதற்கு வேண்டிய நிர்வாகஸ்தர்களை அமர்த்தியாகவேண்டும்.

ஆனால் புதிதாகத் தோன்றிய பிரச்னைகளால் ஊக்கம் குன்று வதற்கு இடமில்லை. சிறுவர்களுடைய நடத்தையிலேயே வரவேற்கத்தக்க மாறுதல் உண்டாயிருந்தது.

ஒராண்டுக்குமுன் பக்கத்திலிருந்தவர் பணப் பையைத் திருடிய பையன் இருந்தான். நிர்வாகிகளுடன் ஆறுமுறை சண்டைபோட்ட மற்றொரு பையன் இருந்தான். ஆனால் அவர்களைச் சீர்திருத்தப் பள்ளிக்கூடத்துக்கு அனுப்ப வேண்டுமென்று இப்போது யாரும் சொல்லமாட்டார்கள். அவர்கள்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவேண்டிய அவசியமும் இல்லை. அன்பின்மூலம் அவர்களுடைய மனதைத் திருப்புவதென்ற கொள்கை அசாத்தியமானதென்று இப்போது யாரும் சொல்லமாட்டார்கள்.

எதிர்காலம் எப்படியிருக்கும் என்று சன். பிளானகன் ஊகிக்க முடியவில்லை யெனினும், விடுதியை நன்கு நடத்த முடியுமென்ற நம்பிக்கை அவருக்கு இருந்தது. அதற்குரிய திட்டங்களையும் அவர் யோசிக்கலானார். புதிய வீட்டில் சர்வ சாதாரணமாக ஆரம்பிக்கப்பட்ட திட்டங்களே பிற்காலத்தில் சிறுவர் நகரத்துத் திட்டங்களின் அஸ்திவாரமாக விளங்கின. அவை நாளடைவில் உலகப்பிரசித்திபெற்றன.

உதாரணமாக, சங். பிளானகன் வகுத்த விளையாட்டுத் திட்டத்தைச் சொல்லலாம். புது வீட்டுக்குப் பின் புறமுள்ள வெளியில் சிறுவர்களுக்கு எல்லாவிதமான பந்தாட்டங்களும், விளையாட்டுகளும் சொல்லிக்கொடுக்கப்பட்டன. அவர்களுக் குள்ளாகவே கட்சிகளாகப்பிரிந்து போட்டியிட்டு விளையாடினார்கள் சிறுவர்கள். அவர்கள் நன்றாக விளையாடக் கற்றுக் கொண்டார்கள். தோற்றாலும் ஜெயித்தாலும் ஒழுங்காக நடந்துகொள்ளப் பயின்றார்கள்.

கோடையில், விடுதியினர் ஒரு சங்கீத பாண்டை ஆரம் பித்தார்கள். ஒமாஹாவிலுள்ள சங்கீத வித்வான்களின் சங்

கத்துக்கு சங். பிளானகன் சென்று, பழைய சங்கீதக் கருவிகளை மலிவாக விற்கமுடியுமா என்று கேட்டார்.

சங்கீத வித்வான்கள் பல கருவிகளைத் தானமாக அளித்தார்கள். அவற்றை வாசிக்கக் கற்றுக்கொடுக்கவும் ஒரு சங்கீத உபாத்தியாயர் முன்வந்தார். அவரிடம் சிறுவர்கள் கற்க ஆரம்பித்தனர். முதலில் காதடைக்கும் கோஷமாயிருந்தது. நாளடைவில் நாதம் பொருந்திய பாண்டுவாத்தியமாகப் பரிணமிக்கலாயிற்று. பிறகு ஒருநாள் சிறுவர் விடுதியைச் சேர்ந்த பாண்டு கோஷ்டியை வெளியே வாசிக்க சங். பிளானகன் அனுப்பினர்.

தமது விடுதியிலுள்ள சிறுவர்கள் எப்படிப்பட்டவர்கள், அவர்கள் எவ்வளவு சமர்த்தர்கள் என்பதைப் பொதுமக்கள் உணரவேண்டுமென்பதே சங். பிளானகனின் அவா. பல நகரங்களுக்குச்சென்று சிறுவர் பாண்டு ஆலயங்களில் கச்சேரி செய்தது. லீவன்வொர்த் என்ற இடத்திலுள்ள ஜெயிலுக்குச்சென்று அங்குள்ள கைதிகளுக்காகக் கச்சேரி செய்தது சிறுவர்களின் சுற்றுப்பிரயாணத்தின் முக்கிய அம்சமாகும். சங்கீத விமர்சகர்கள் கச்சேரிகளைப் புகழ்ந்து பாராட்டவில்லையெனினும், கைதிகள் அவற்றை ரஸித்தனர்.

ஜெர்மன்—அமெரிக்கன் விடுதியில் சிறுவர்கள் ஆரம்பித்த மற்றொரு திட்டம் விவசாயம். அது ஆரம்பமான விதமே அலாதியானது. ஒருநாள் ஒரு விவசாயி அங்கு வந்து சங். பிளானகனைக் காணவேண்டுமென்றார். வண்டியிலிருந்து ஒரு பசுவை இறக்கி இழுத்து வந்து, அவர் சங். பிளானகனிடம் சொன்னர்: “என்னிடம் பணம் இல்லை. லூஸியை (அவருடைய பசுவின் பெயர்) உங்களிடம் விட்டு விட்டுப் போகலாம் என்று நினைத்தேன்.”

அவர்கள் லூஸியைக் கொல்லைப்புறத்தில் கட்டிவைத்திருந்தனர். யார் பால் கறப்ப தென்பதைப்பற்றிப் பையன்களுக்குள் பலத்த விவாதம். ஒருவர் மாற்றி ஒருவராக

எல்லோருமே பழகிக்கொள்ள வேண்டுமென்று தீர்ப்புக் கூறினார் மதகுரு. விடுதியிலிருந்த பல சிறுவர்கள் விவசாயிகளின் புத்திரர்கள். விடுதியைவிட்டு வெளியேறிய பிறகு அவர்கள் பயிர்த் தொழிலில் ஈடுபட வேண்டுமென சங். பிளானகன் விரும்பினார்.

அதிலிருந்து பிறந்தது சிறுவர் நகரின் பயிர்த்தொழில் திட்டம். இன்று சிறுவர் நகரில் கற்றுக் கொடுக்கப்படும் விவசாயக் கல்வி ராஜ்ய விவசாயக் கல்லூரியில் கற்றுக் கொடுப்பதற்குச் சமமாக இருக்கிறது. ஆனால் முதலில் சங். பிளானகன் மிகச் சிறிய திட்டமாகவே ஆரம்பித்தார்.

நிலத்தில் சிறு பாகத்தைச் செப்பனிட்டு அங்கே காய் கறித் தோட்டம் போடுவதென்று தீர்மானித்தனர் விடுதியினர். விதைகளைத் தருவித்துப் புத்தகங்களில் கண்ட குறிப்புகள்படி விதைகளை நட்டனர். ஆனால் பூமியிலிருந்து ஒன்றும் கிளம்பவில்லை. சிறு விவசாயிகள் செய்யவேண்டியதையெல்லாம் செய்துபார்த்தார்கள். தண்ணீர் ஊற்றினார்கள், களையெடுத்தார்கள். ஆனால் துளிரைக் காணோம். ஏன் என்று அவர்களுக்குக் கடைசிவரை புரியவில்லை. எனினும் அடுத்த வருஷமும் முனைந்து வேலை செய்தார்கள். இந்த நடவை பலன் கிடைத்தது.

கோழிகளை வளர்ப்பதில் அவர்களுக்கு வெற்றி. நண்பர்கள் முதலில் கோழிக் குஞ்சுகளைப் பரிசளித்தார்கள். அவற்றை வளர்த்து, நாளடைவில் குஞ்சு பொறிக்க வைத்தார்கள் விடுதிச் சிறுவர்கள்.

விடுதியில் நூறு சிறுவர்களுக்குமேல் இருந்ததால், எழுத்து வேலை அதிகமாயிற்று. கணக்குப் பார்க்கவேண்டும். பிள்ளைகளைப் பற்றிய குறிப்புகள் எழுதிவைக்கவேண்டும். வரும் கடிதங்களுக்குப் பதில் எழுதி எல்லாவற்றையும் ஒழுங்காக அடுக்கி வைக்கவேண்டும். விடுதி நடக்கும் விதத்தைப்

பொதுஜனங்களுக்கு எடுத்துரைக்கும் கடிதங்கள் எழுதிப் பண உதவி கோரவேண்டும். பொதுஜனங்களிடமிருந்து பணம்வந்தால் தான் விடுதியை நடத்தமுடியும். ஆனால் அவ் வேலையைச் செய்ய குமாஸ்தாவை நியமிக்கப் பணமில்லை.

என்ன செய்வது? பிரார்த்தனைசெய்து, யாசகம் செய்யுங்கள் என்றார் சங். பிளானகன். அண்டையிலிருந்த பல வாலிபர்கள் ஓய்வுநேரங்களில் ஒத்தாசை செய்ய முன்வந்தார்கள். அவர்களில் பலர் ஓமாஹா காரியாலயங்களில் குமாஸ்தாக்களாயிருந்தவர்கள். மாலை நேரங்களிலும் விடுமுறை நாட்களிலும் விடுதிக்கு வந்து, கடிதங்களைத் தயாரித்தனர்.

பிறகு, உதவிக்காகத் துணையாளை அமைத்துக்கொள்ள சங். பிளானகனுக்கு அநுமதிகிடைத்தது. தமது உறவினரான பாட்ரிக் நார்ட்டனைத் துணையாளாக அமைத்துக் கொண்டார். அது மிகவும் முக்கியமான வாழ்நாள் கூட்டுறவாக அமைந்தது. அவர்கள் இருவரும் பல வருஷங்கள் ஒன்றாக உழைத்தனர். இயக்கத்தைத் தொடங்கிய புதிதில் ஏற்பட்ட இடையூறுகளைச் சேர்ந்து சமாளித்தனர். பாட்ரிக் நார்ட்டன் பிற்காலத்தில் சிறுவரின் நகரத்து மானேஜரானார். அதே உத்தியோகத்தில் இன்னும் இருந்து வருகிறார். சங். பிளானகன் காலமானபோது அவருடன் இருந்தவர் பாட்ரிக் நார்ட்டன் தான்.

நார்ட்டனும் இலவச ஊழியர்களும் எழுத்துவேலையைக் கவனித்துக்கொண்டதால் அப் பிரச்னை ஒருவாறு தீர்ந்தது. ஆனால் அது முக்கியமான பிரச்சனையல்ல. நூறு பிள்ளைகளுக்கு உணவு அளித்து, உடுத்து, அவர்களைச் சுத்தமாக வைத்திருப்பது ! அதைவிட சிரமமான காரியமாயிருந்தது. சில கன்னியர்களே அதைப் பாரத்துக்கொள்ளுவது கடினமாயிருந்தது. இவ்விஷயத்திலும் சுற்றுப்புறத்திலிருப்போரின் உதவி கிடைத்தது. குடும்பப் பெண்கள், தாய்

மார்கள், வயதான கிழவிகள் எல்லோரும் இலவசமாகச் சேவைசெய்ய முன்வந்தார்கள். அவர்களுக்குக் குழந்தைகளை வளர்ப்பதிலுள்ள சிரமங்கள் தெரியும். அவர்களுக்குக் குழந்தைகளை அன்பாக வளர்க்கவேண்டியதின் அவசியமும் தெரியும்

ஒருநாள் சுற்றுப்புறத்திலுள்ள மாதர்கள் ஒரு கூட்டம் போட்டுச் சிறுவர் விடுதிக்கு தாங்கள் எவ்வாறு உதவிசெய்ய முடியுமென யோசித்தனர். சிறுவர்களைக் கவனித்துக்கொள்ள உதவி செய்யத் "தாய்மார்களின் சங்கம்" ஏற்படுத்த அவர்கள் தீர்மானித்தார்கள். அச்செய்தியை சங். பிளானகனுக்கும் தெரிவித்தார்கள். தீர்மானித்தபடியே செய்தார்கள். அவர்கள் விடுதிக்குவந்து சிறுவர்களின் துணிகளைத்துவைத்து தைத்துக் கொடுத்தனர். இருபது மாதர்கள் அச்சேவையை மேற்கொண்டார்கள். அது வீட்டு வேலையின் பாரத்தைக் குறைத்தது. சிறுவர் விடுதியில் செய்யப்படும் புண்ணிய கைங்கரியத்தைப்பற்றி பொதுமக்கள் நன்கறியவும் அது உதவிற்று. மாதர்கள் சுவிசேஷகர்களானார்கள். தங்கள் நண்பர்கள் மூலமாகவும் சங்கங்கள் மூலமாகவும் நகரம் முழுவதும் சிறுவர்விடுதியின் மேன்மையை அறியும்படி செய்தனர்

சிறுவர் விடுதியின் சரிதத்தைப் பலரும் அறியவேண்டிய அவசியத்தை சங். பிளானகன் உணர ஆரம்பித்தார். எல்லோராலும் வெறுக்கப்பட்ட சிறுவர்கள் திருந்திவருகிறார்கள் என்ற உண்மையை ஜனங்கள் அறியவேண்டும். அச் சிறுவர்கள் மறுபடியும் குற்றங்களைச் செய்யவில்லை; மற்றவர்களைப்போலவே ஒழுங்கான வாழ்க்கையை நடத்துகிறார்கள்; சிறந்த பிரஜைகளாக வளர்ந்துவருகிறார்கள் என்பது எல்லோருடைய மனதிலும் நிலைக்கவேண்டும்.

அந்நோக்கத்துடன் அவர் சிறுவர்களின் முதல் பத்திரிகையை ஆரம்பித்தார். "சிறுவர் விடுதிப் பத்திரிகை" என்ற பெயருடன் வெளிவந்த அப்பத்திரிகை ஓமாஹாவில் ஓர்

அச்சுக்கூடத்தில் அச்சடிக்கப்பட்டது. சங். பிளானகன் அதன் ஆசிரியர். அவரும் அவருடைய சிறுவர்களும்தான் எழுத்தாளர்கள்.

பத்திரிகை உலகில் புரட்சியை உண்டாக்கவேண்டு மென்பது அதன் நோக்கமல்ல. ஆனால் சிறுவர் விடுதியின் வாழ்க்கையை அப்பத்திரிகை பிரதிபலித்தது. விடுதியில் நடக்கும் விசேஷங்களையும் விளையாட்டுகளையும் குறிப்பிட்டது. விடுதிக்கு உதவி செய்வோர்களின் பெயர்களை வெளியிட்டது. இப்போது அப்பத்திரிகை நின்றுவிட்டது. அதற்குப் பதிலாக "சிறுவர்நகர் டைம்ஸ்" என்ற பத்திரிகை வெளி வருகிறது. அது சிறுவர் நகரிலுள்ள அச்சுக்கூடத்திலேயே அச்சாகிறது.

அந்தக்காலத்தில் சங். பிளானகனின் சிறுவர்கள் மற்றொரு தொழிலையும் மேற்கொண்டனர். ஆனால் அதில் தோல்வியே அடைந்தார்கள். முற்காலத்தில் ஒரு சிறு தொழிற்சாலையை ஏற்படுத்தி சோப் செய்ய ஆரம்பித்தனர். சோப்பைச் செய்தபிறகு அதைக் காகிதத்தில், சுற்றி, வீடு வீடாகச் சென்று விற்றுவந்தார்கள். ஆனால் அதனால் அதிக பலன் கிடைக்கவில்லை. லாபமும் மிகக்குறைவு. ஆகவே இனி சோப்பைத் தங்கள் சொந்த உபயோகத்துக்குமட்டும் தயாரித்துக்கொள்ளும்படி சங். பிளானகன் சிறுவர்களுக்கு உத்தரவிட்டார்.

இவ்வாறு பலமுயற்சிகள்மூலம் விடுதி தழைத்துவந்தது. வெளி உதவியும் கிடைத்துவந்தது. ஆனால் அவ்வுதவி பெரிய பணக்காரர்களிடமிருந்தோ, ஸ்தாபனங்களிட மிருந்தோ கிடைக்கவில்லை. சொந்த செலவுக்கே போதிய வருமானம் கிடைக்காதவர்களிடமிருந்துதான் உதவிகிடைத்து வந்தது. ஒரு டாலரோ, அல்லது ஏதாவது பொருளோ அவர்கள் அனுப்பிவைத்தார்கள்.

அக்காலத்தில் "சிறுவர்விடுதி பத்திரிகை"யில் வெளி வந்த செய்தி இதை நன்கு விளக்கும்.

" ஸ்ரீ ஹென்ரி...யிடமிருந்து ஒரு கோழிக்குஞ்சு ;
ஸ்ரீமதி...யிடமிருந்து இரண்டு மெத்தைகள் ;
ஸ்ரீ...யிடமிருந்து ஆரஞ்சுப் பழங்களும், மிட்டாய்களும்.
ஸ்ரீமதி...யிடமிருந்து நான்கு கோட்டுகள்......

இவ்வாறு இரண்டு பத்திகள் ஒரு பிரதியில் பெயர்கள் வெளிவரும். நகரிலுள்ள சில கடைகளும் உதவி செய்தன. ஒரு மின்சார சாமான் கடையிலிருந்து விளக்கு கிடைத்தது; செருப்புக் கடையிலிருந்து பன்னிரண்டு செருப்புகள் கிடைக்கும்.

தாய்மார்களின் சங்கத்தின் அங்கத்தினர் ஒருவர் பெட்டி நிறைய பிளேட்டுகள் கொண்டுவந்தார். சங். பிளானகனின் சொந்த உபயோகத்துக்காக அவற்றை வாங்கிவந்ததாக அவர் கூறினர். "அவர் ரொம்ப நாட்களாக உடைந்த பிளேட்டுகளில் சாப்பிட்டுவருகிறார். அவரைப் போன்ற புண்ணியாத்மாவுக்குச் சாப்பிட நல்ல பிளேட்டும், காப்பி அருந்த ஒழுகாத ஜோப்பையும் கட்டாயம் இருக்கவேண்டும்," என்றார் அவர்.

எப்படியோ மாதாமாதம் ஒவ்வொருநாளும் விடுதிக்குத் தேவையான உதவி, உணவு, உடை கிடைத்துவந்தன. சங். பிளானகனுக்கு அது ஆச்சரியத்தை அளிக்கவில்லை. முதலிலிருந்து அவர் கடவுளை நம்பியிருந்தார். ஆண்டவன் அவரையும் அவருடைய நூறு பிள்ளைகளையும் இயக்கத்தையும் காப்பாற்றுவார் என்ற தைரியம் மதகுருவுக்கு இருந்தது. கடவுளைப் பிரார்த்தனை செய்துகொண்டு மேலும் உள்ள வேலையைக் கவனித்துவந்தார்.

இப்போது அமெரிக்காவிலுள்ள பல்வேறு நகரங்களிலிருந்தும் ராஜ்யங்களிலிருந்தும் சிறுவர்கள் விடுதிக்கு வரலா

யினர். ஆனால் உள்ளூரில் ஓமாஹாவில் சிலருக்கு விடுதி மீதிருந்த கோபம் அதிகமாயிற்று. அதற்குக் காரணங்கள்:

பையன்களில் பலர் சட்டத்தையிறி ஆபத்துக்குள்ளான வர்கள். மற்றவர்களோ கவனிப்பாரற்ற அநாதைகள். அவர்களை விடுதியில் அநுமதிப்பதில் அவர்களுடைய மதம் என்ன என்றோ நிறம் என்ன என்றோ மதகுரு கவலைப்படுவ தில்லை. அநுமதிக்கப்பட்ட எல்லாச் சிறுவர்களுக்கும் ஒரே விதமான கவனம். நிறவித்தியாசமோ மதவித்தியாசமோ பாராட்டுவதில்லை. இது ஓமாஹா நகரத்திலுள்ள சிலருக்குப் பிடிக்கவில்லை. சிறுவயதுள்ள திருடர்களுடைய சீர்திருத் தப் பள்ளிக்கூடம் என்று சங். பிளானகனின் விடுதியை அழைத்தார்கள். வெள்ளையர், சீனர்கள், நீக்ரோக்கள் எல்லோரும் ஒன்றாக வாழ்வதை மற்றும் சிலர் கண்டித்தனர்.

"எல்லோரும் சமமே என்று கடவுள் நினைத்திருந்தால், அவர் மக்களை ஏன் வெவ்வேறு நிறத்தினராகப் படைத்தார்?" என்று ஓர் ஓமாஹா அரசியல்வாதி கேட்டார்.

"ஆத்மாவின் நிறம் என்னவென்று நீர் தயவுசெய்து சொல்வீர்களா"? என்பதே சங். பிளானகனின் பதில். வெள்ளையர், சீனர், நீக்ரோக்கள் அனைவரும் விடுதிக்கு வந்து கொண்டிருந்தனர். அவர்களில் சில சிறுவர்கள் எழுத்து வாசனையே அறியாதவர்கள், ஒருவேலையும் செய்யத் தெரியாதவர்கள்.

ஜெர்மன்-அமெரிக்கன் விடுதியிலிருந்த நூறுக்குள்ள நூறு பையன்களுக்குப் படிப்புக் கற்றுக்கொடுப்பது பெரிய பிரச்னையாக விளங்கிற்று. டாட்ஜ் தெருவிலிருந்த சிறிய வீட்டில் விடுதியிருந்தபோது அங்கிருந்து பிள்ளைகளைப் பொதுப் பாடசாலைகளுக்கு அனுப்பிவந்தார். ஆனால் பிளானக னின் விடுதியிலிருந்து ஒரு பையன் பள்ளிக்கூடத்துக்கு வந்தால் அங்கே அவனைப்பற்றி பேச்சு அதிகமாக இருந்தது. சில சமயங்களில் மற்றச் சிறுவர்கள் அவனைக் குற்றவாளி

யென்றும் திருடன் என்றும் ஏளனம் செய்து துன்புறுத்து வார்கள்.

பள்ளிக்கூடத்தில் நேர்ந்த சண்டைகளில் அடிபட்டு முகத்தில் காயத்துடன், கண் சிவந்துபோய் பல சிறுவர்கள் விடுதிக்குத் திரும்புவதுண்டு, "அவர்கள் என்னைப் போக்கிரி யென்று அழைத்தார்கள். பிளானகனின் போக்கிரியென்று கூப்பிட்டார்கள்," என்று காயத்துடன் வந்த சிறுவன் கூறுவான்.

அதுவுமின்றி, குடும்ப வாழ்க்கையின் கோளாறுகளால் பாதிக்கப்பட்டு வரும் சிறுவர்களுக்குப் பிரத்தியேகமான கல்விப்பயிற்சி அவசியம். அத்தகைய பயிற்சியை பொதுப் பாடசாலைகளில் எதிர்ப்பார்பதற்கில்லை.

ஜெர்மன்-அமெரிக்கன் வீட்டுக்கு வந்த முதல் கோடை காலத்தில் சங். பிளானகன் தமது பாடசாலையைத் துவக்கினார். விடுதியிலிருந்த சிறுவர்களில் பெரும்பான்மையோர் வயது குறைந்தவர்களாதலால் அவர் ஆரம்பப் பள்ளிக் கூடத்தை நடத்தினார். அதிமேற்றிராணியார் அனுப்பித்தந்த கன்னியர், பாட்ரிக் நார்ட்டன், சங். பிளானகன் ஆகியோர் தான் உபாத்தியாயர்கள். பள்ளிக்கூடமோ நூதனமானது. கல்வியே பயிலாதவர்கள், கல்வி பயில ஆரம்பித்து பிறகு விட்டுவிட்டவர்கள் ஆகிய சிறுவர்களுக்கு உகந்தவாறு பாடங்கள் அமைக்கப்பட்டன.

அந்தக் கோடைகாலத்திலிருந்து எப்போதுமே சிறுவரின் நகர் தனக்கென்று பிரத்தியேகமான பள்ளிக்கூடத்தை நடத்திவருகிறது. இன்று அது உயர்தரப் பாடசாலையாக விளங்குகிறது. மற்ற எந்த உயர்தரப் பாடசாலைக்கும், கல்வி புகட்டும் முறையில் அது தரத்தில் குறைந்ததல்ல.

அத்தியாயம் 20

1919-ம் ஆண்டில் பிரமிக்கத்தக்க ஆதரவோ அற்புதங்களோ இன்றி சிறுவர் நகர் பணக் கஷ்டமின்றி நடக்கலாயிற்று. மெதுவாக, ஆனால் சுறு சுறுப்புடன் சங். பிளானகனின் சிறுவர்நகர் வளர்ந்துவந்தது.

ஆதரவு முக்கியமாகச் சிறு நன்கொடைகளாகவே வந்தது. நூற்றுக்கணக்கான அபிமானிகள் தங்களால் இயன்றதை அனுப்பினர். "சிறுவர் விடுதி பத்திரிகை"யை விற்றுச் சிறுது பணம் சம்பாதிப்பார்கள். துணிமணிகளும் வரும். அநேகமாக அவை பழைய துணிகளாகவே இருக்கும். தாய்மார்களின் சங்கத்தைச் சேர்ந்த மாதர்கள் அவற்றைப் பழுதுபார்த்துக் கொடுப்பார்கள்.

உள்ளூர் வியாபாரிகள் அநேகமாகத் தேவையான உணவை அளித்து வந்தனர். அப்படித்தான் செருப்பு முதலிய தேவையான பொருள்கள் விஷயத்திலும். பள்ளிக்கூடமும் செவ்வனே நடந்துவந்தது. நெப்ராஸ்கா கல்வி விதிகளுக்குத் தகுந்த அளவு உயர்தரமான கல்வி முறை அநுஷ்டிக்கப்பட்டு வந்தது.

அதற்கு முந்திய வருஷம்தான் அதாவது 1918-ம் ஆண்டில் சங். பிளானகன் அமெரிக்கப் பிரஜையானர். 1920-ம் ஆண்டின் இறுதியில், சிறுவர் விடுதி ரிஜிஸ்தர் செய்யப்பட்டது. ஓமாஹா மேற்றிராணியார் அதற்குத் தலைவர், சங். பிளானகனுக்கு உத்தரவும் ஊக்கமும் அளித்த அதிமேற்றிராணியார் ஜெரிமியா ஹார்ட்டி முதல் தலைவரானர்.

இவ் வைபவத்தைப் பற்றி அதிக விளம்பரமில்லை. எனினும் வக்கீல்கள், நீதிபதிகள், டாக்டர்கள், பொதுஜன சமூக ஊழியர்களிடையே சங். பிளானகனின் விடுதியைப் பற்றி அதிக பேச்சு இருந்தது. நாளாக பலர் விடுதிக்கு விஜயம் செய்யத்தொடக்கினர். மதகுரு ஏதோ

மந்திர தந்திரங்களால் நல்ல சிறுவர்களாக மாற்றிவிட்டார் என்று வந்தவர்களில் பலர் நினைத்துக்கொண்டிருந்தார்.

1921-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் தேதி முடிய விடுதியின் ஆதரவு பெற்ற பிள்ளைகள் 1, 251. விடுதக்கு வருவோர் அனைவரும் நிரந்தரமாக அங்கேயே தங்கியிருப்ப தில்லை. பலர் சில மாதங்கள் தான் இருப்பார்கள். பிறகு அவர் களுடைய குடும்பங்களுக்குத் திரும்ப அனுப்பப்படுவார்கள். சிலரை நல்ல குடும்பத்தினர் ஸ்வீகாரம் எடுத்துக் கொள்ளு வார்கள். அப்படிப்பட்ட குடும்பத்தினரைப் பற்றி சங். பிளானகன் நன்கு விசாரித்த பிறகே அவர் தம் சிறுவர்களில் ஒருவனை அவர்களிடம் ஒப்புவிப்பார்.

நாளடைவில் ஜெர்மன் — அமெரிக்கன் வீட்டிலும் இடம் போதவில்லை. புதிதாக வந்த சிறுவர்களுக்கு இடவசதி மட்டு மின்றி, நிலமும் தேவையாயிருந்தது. தங்களுக்குத் தேவை யான உணவைத் தாங்களே உற்பத்தி செய்து கொள்ளவும், பிராணிகளை வைத்துக் கொள்ளவும் அவர்களுக்கு நிலம் வேண்டியிருந்தது.

முதலில் அவர்கள் ஒரு தற்காலிகத் திட்டத்தைக் கையாண்டார்கள். ஓமாஹாவின் வடக்குப் பாகத்தில் பிலா ரென்ஸ் என்ற இடத்தில் ஸெவன் ஓக்ஸ் பண்ணையென்ற நிலத்தை வாங்க நண்பர்கள் உதவிசெய்தனர். விடுதியின் சொத்தில் ஒரு பாகமாயிற்று அப்பண்ணை.

அங்கே விடுதியின் இரண்டாவது விவசாயத் திட்டம் அமுலுக்கு வந்தது. குத்தகைக்கு ஒரு விவசாயி நிலத்தை உழுது பயிர் செய்தான். ஆனால் விடுமுறை நாட்களில் சிறு வர்கள் விடுதியிலிருந்து வந்து துணைபுரிவார்கள்.

தானியமும் காய்கறிகளும் பண்ணையிலிருந்து வரத் தொடங்கிய பிறகும், விடுதிக்கு அவை போதவில்லை. சிறுவர் களும் பயிர்த்தொழிலில் நன்ருகப்பயிலச் சந்தர்ப்பம் கிடைக்க வில்லை. ஆகவே, சங். பிளானகன் அப்பண்ணையை விற்று

விட்டு அதே பிரதேசத்திலிருந்த "நாற்பது ஏகர்" என்ற பெருயள்ள பண்ணையை விலைக்கு வாங்கினர்.

இப்பண்ணையிலிருந்து அறுவடை அதிகமாகக் கிடைத்தது. பையன்களும் அடிக்கடி சென்று வயலில் வேலை செய்தனர். எனினும், அவருடைய நோக்கம் நிறைவேறிவருவதாகத் தோன்றவில்லை மதகுருவுக்கு. பண்ணையைப் பற்றி மட்டுமின்றி வீட்டைப் பற்றியும் அவருக்குக் கவலை ஏற்பட்டது. வீட்டிலோ இடம் கிடையாது.

மறுபடியும் புது வீட்டைத் தேடலானர் சங். பிளானகன்.

புதிய இடத்துக்காக அலையும் போதுதான் விடுதியைப் பற்றியுள்ள மௌன எதிர்ப்பு எவ்வளவு வலுவடைந்திருந்தது என்பதை மதகுரு உணர்ந்தார். அவர் குற்றவாளிகளுக்கு இடமளிக்கிறார் என்றே அவரை எதிர்ப்பவர்கள் கருதினர்கள். அவருக்கு எங்கும் வீடு கிடைக்கவில்லை. யாருமே தமது சுற்றுப் புறத்தில் விடுதியிருக்க விரும்பவில்லையென்பதுபோல் இருந்தது.

"நாற்பது ஏகர்" பண்ணையிலேயே ஒரு வீடு கட்டிவிடலாமா என்று யோசித்தார். பிலாரென்ஸ் பிரதேசத்தில் அவருடைய விடுதியைக் கொண்டு வருவதைத் தாங்கள் விரும்பவில்லையென்பதைப் பலர் அவரிடம் தெரிவித்தார்கள். ஆகவே வேறு எங்காவது இடம் பார்ப்பது எனத் தீர்மானித்தார் மதகுரு.

ஒமாஹாவிலேயே ஒரு பள்ளிக் கூடமாயிருந்த கட்டடம் இருந்தது. அது பெரிய வீடு. சொத்துக்குச் சொந்தமானவர்கள் அதை விற்றுவிட ஆவலாயிருந்தனர். அங்கும் எதிர்ப்பு இருந்தது. எதிர்ப்பு என்ருல் பலத்ததல்ல. கூச்சலில்லை ஆனல் மரியாதையுடன் செல்வாக்கு உடையவர்களின் கண்டிப்பான மரியாதையுடன் எதிர்ப்பு தோன்றிற்று. சுற்றுப் புறத்திலிருந்த சிலர் தீவிரமாக எதிர்த்தார்கள். ஒரு கூட்டம் கூடி தீர்மானமும் நிறைவேற்றினர்கள்.

அத்தீர்மானம் சங். பிளானகனின் விடுதியை உதவாக் கரையான, குற்றம் செய்த சிறுவர்களுடைய சீர்திருத்த சாலை என்று அழைத்தது. நேர்மையான சூழ்நிலையை உண்டாக்க முயலும் சுற்றுப் புறத்தில் அத்தகைய பள்ளியை ஏற்படுத்துவது பெரிய தீங்கை விளைப்பதாகும் என்று கூறிற்று.

பட்டவர்த்தமாகப் போர் தொடுக்க எதிர்ப்பாளர்கள் முனையவே, சங். பிளானகன் பதிலில் ஒரு புதிய தொனி தோன்றியது. தீர்மானம் நிறைவேறிய தினத்துக்கு மறுநாள் மதகுரு பத்திரிகை நிருபர்களிடம் சொன்னார்:

" எதிர்ப்பவர்கள் தங்கள் மனச் சாட்சியின் போக்குப்படி நடக்கிறார்கள் என்பது வாஸ்தவம்தான். ஆனால் அவர்கள் எதை எதிர்க்கிறோம் என்று புரிந்து கொள்ளாமலே எதிர்க்கிறார்கள். என்னுடைய பள்ளிக் கூடத்தைச் சீர்திருத்த சாலை என்கிறார்கள். அது சீர்திருத்த சாலையல்ல. இந்த ராஜ்யத்தில் ஒரு சீர்திருத்த சாலைதான் இருக்கிறது. அது கீர்னியில் இருக்கிறது. எனது சிறுவர்களின் வீடு ஒமாஹாவிலுள்ள மற்றெந்த வீட்டையும்விடக் குறைந்ததல்ல; நன்றாக நடத்தப் படும், கட்டுபாட்டுக்கு அடங்கிய வீடு என் சிறுவர் வீடு."

" இரண்டு வாரங்களுக்கு முன்புதான் என்னை நள்ளிரவில் பதினாறாவது தெருவில் சிலர் அழைத்தனர். அங்கே ஒரு சிறுவன் தங்க இடமின்றி, ஒரு மூலையில் பதுங்கிக் கிடந்தான். அவனுடைய தகப்பன் அவனுடைய தாயாரைக் கொலை செய்த குற்றத்துக்காக ஜெயிலில் சிறைவாசம் செய்து வந்தான். அச்சிறுவனை அங்கேயே விட்டிருந்தால், அவனை மறுநாள் பிணமாகத்தான் பார்த்திருக்க முடியும்."

விடுதியில் உள்ள சிறுவர்களைப் பற்றியும் அவர் நிருபர்களிடம் கூறினார்: " அவர்கள் துஷ்டர்கள் அல்ல. அவர்களை மற்றவர்கள் புரிந்து கொள்ளுவதில்லை. அவர்களைத் தெரிந்து கொள்ளுவோரிடம் அவர்கள் பழகினால் ஒமாஹாவிலுள்ள சிறந்த சிறுவர்களைப் போலவே நடந்து கொள்ளுகிறார்கள்."

ஆனால் சங். பிளானகனின் பேச்சு எதிர்ப்பாளர்களைச் சமாதானம் செய்யவில்லை. வேண்டாத இடத்தில் அவர் தமது சிறுவர்களைக் கொண்டுபோக விரும்பவில்லை. வேண்டாத இடங்களில் அவர்கள் இருக்கக்கூடாதென்பதற்காகத் தானே அவர் விடுதியை ஆரம்பித்தார்.

இத்தருணத்தில் ஓமாஹாவுக்கு மேற்கே ஒரு பண்ணை இருந்தது அவருடைய ஞாபகத்துக்கு வந்தது. வீடுகள் இருக்கும் பாகத்துக்குத் தூரமாக அப்பண்ணை அமைந்திருந்ததால் அவர்கள் அங்கு போவதை யாரும் தடுக்கமுடியாது. இடமும் விசாலமாயிருப்பதால் எத்தனை கட்டடங்கள் வேண்டுமானாலும் கட்டலாம். ஒரு முழுநகரத்தையே அங்கு ஸ்தாபிக்கலாம்.

வீடு வியாபாரியான ஜோசப் ஒகீல் சங். பிளானகனின் சேவையைப் பாராட்டுபவர். எனினும் வியாபாரத்தில் பழகியவர். "அப்பண்ணையின் விலை பல்லாயிர டாலர்களாயிற்றே, உங்களை அதைரியப் படுத்த விரும்பவில்லை. ஆனால் உங்களிடம் அவ்வளவு பணம் இருக்கிறதா?" என்று அவர் கேட்டார்.

மதகுரு வருத்தத்துடன் புன்முறுவல் செய்தார். பாங்கில் சில ஆயிரடாலர்கள் இருக்கின்றன என்றார். புதிய விடுதிக்காகக் கட்டட நிதியாக அதை வைத்திருந்தார். அதோடு நாற்பது ஏகர் நிலமும் இருந்தது.

"ஆனால் புதிய பண்ணையின் விலை உங்களுடைய சொத்தைப்போல ஐந்துமடங்கு ஆயிற்றே. அதை எப்படி வாங்கலாம் என்று நினைக்கிறீர்கள்?" என்றார் ஒகீப்.

"எப்படியாவது பணத்தைச் சம்பாதிப்போம். எங்களுக்கு நன்கொடைகள் வந்து கொண்டிருக்கின்றன. கொஞ்சம் அவகாசம் கிடைத்தால்..." என்று கூறலானார் சங். பிளானகன்.

ஒகிப் மலைத்துப்போனார். புதிய பண்ணையின் விலை சுமார் ஒரு லட்சம் டாலர் என்பதை வெளிப்படையாகச் சொல்லி மதகுருவின் மனதை உடைக்க அவர் விரும்ப வில்லை. ஆனால் சொற்பப்பணத்தை வைத்துக்கொண்டு இந்நிலத்தை எவ்வாருவது வாங்கிவிடலாம் என்று மதகுரு நம்புவது அவருக்கு ஆச்சரியமாயிருந்தது. அந்நிலத்தின் சொந்தக்காரர்கள் டேவிட் பாம் அவர்களும் அவருடைய மனைவியும் என்று சூகிப் சங். பிளானகனிடம் சொன்னார்.

"டேவிட் பாம் நல்ல மனுஷ்யர். ஆனால் அவர் திறமையான வியாபாரி," என்று எச்சரித்தார்.

மதகுரு தமது திட்டத்தை விளக்கினார் நிலத்தின் சொந்தக்காரரிடம். டேவிட் பாம் வாய்திறக்காமல் கேட்டுக் கொண்டிருந்தார்.

"மனிதர்கள் நல்லவர்கள், பாருங்கள். எங்களுக்குப் பணம் அனுப்பிக் கொண்டிருப்பார்கள். நாங்கள் பெய்து வரும் தொண்டைப்பற்றி அறிந்தால் தவருமல் கொஞ்சம் கொஞ்சமாகப் பணம் அனுப்புவார்கள். அது மொத்த மானல் பெருந் தொகையாகும்," என்று வாக்களித்தார் சங். பிளானகன்.

"நீங்கள் நல்ல மதகுரு, தந்தையே. ஆனால் நான் நல்ல வியாபாரி. உங்களுடைய திட்டம் வெற்றியடையவில்லை யென்ருல் உங்களையாரும் பழிக்கமாட்டார்கள். ஆனால் எனக்கு சகாக்கள் இருக்கிருர்கள். பொறுப்புகள் இருக் கின்றன. பெருத்த நஷ்டமடைந்தால் அவை எப்படி பாதிக்கப்படும் என்பதை நான் யோசித்தாகவேண்டும்.

" துஷ்டப்பையன்களை வைத்துக்கொண்டு ஒரு சோதனை யில் என்னை இறங்கச் சொல்லுகிருர்கள்," என்ருர் டேவிட் பாம்.

" துஷ்டப்பையன்களா! மிஸ்டர் பாம். துஷ்டச் சிறு வர்கள் இல்லை. அவர்கள் எப்படி துஷ்டர்களாய் இருக்க

முடியும். அவர்கள் குழந்தைகள், கடவுளின் குழைந்தைகள்,'' என்று பதில் சொன்னார் மதகுரு ஆத்திரத்துடன்.

சங். பிளானகன் நெற்றியைத்துடைத்துக் கொண்டார். இம்மாதிரி பேசும் உத்தேசமே அவருக்கு இல்லை. வியாபார விஷயமாகப் பேசிவிட்டுப்போகத்தான் வந்திருந்தார். "மன்னியுங்கள், மிஸ்டர் பாம். சிறுவர்கள் எவ்வளவு தங்கமானவர்கள் என்பது எனக்குத் தெரியுமாதலால் நான் அப்படிப் பேசினேன். என்னிடம் சொத்து அதிகமில்லையென்று எனக்குத்தெரியும்.

"உங்களுடைய நம்பிக்கையே உங்களுக்குப் பெரிய சொத்து,'' என்று பதில் சொன்னார் பாம். அப்போதுகூட தமது உற்சாகப் பேச்சினால் தாம் வந்த காரியத்தில் வெற்றி பெற்று விட்டார் என்பதை மதகுரு உணரவில்லை. ஆனால் ஸ்ரீபாம் தொடர்ந்து சொன்னார்.

"உங்களிடமிருக்கும் நாற்பது ஏகரை நான் எடுத்துக் கொள்ளுகிறேன். மிகுதி எனக்குச் சேரவேண்டிய பணத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக நான் வாங்கிக்கொள்கிறேன். அதைப்பற்றிப் பின்பு ஏற்பாடு செய்து கொள்ளலாம்.''

மதகுரு ரொக்கமாக வைத்திருந்த பணத்தை அப்போது ஸ்ரீபாம் ஏற்றுக்கொள்ளவில்லை.'' அதனால் உங்கள் திட்டம் நிறைவேறாமல் போகலாம். வீதிகள் அமைத்து, தற்காலிகமாக வீடு கட்டிக்கொள்ள உங்களுக்கு ஒவ்வொரு பைசாவும் தேவையாயிருக்கும்,'' என்றார் அவர்.

ஸ்ரீபாமின் உதார குணத்துக்காக கடவுளை வாழ்த்திக் கொண்டே, மதகுரு திரும்பினார். துஷ்டச்சிறுவர்கள் இல்லை,'' என்று அவர் ஆவேசத்துடன் கூறியது ஞாபகத்துக்குவந்தது. கடவுள்தான் அவரை அவ்வாக்கியத்தைச் சொல்லும்படி செய்திருக்கவேண்டும். சுருக்கமாக இருப்பினும் அது அவருடைய சித்தாந்தத்தை நன்கு விளக்கிற்று.

இதற்குமுன் இவ்வளவு தெளிவாக அவர் அதைச்சொன்னதில்லை. தமது மதக்கோட்பாட்டின்படி எல்லா மனிதர்களும் பாபத்தில் பிறந்தவர்கள்தான். ஆனால் துஷ்டச்சிறுவர்கள் என்றுசொல்லும்போது ஜனங்கள் அந்த அர்த்தத்தில் பேசுவதில்லை. நல்ல வீடுகளில் இருக்கும் சிறுவர்களை விட வீடில்லா அநாதைகள் பாபாத்மாக்கள் என்று அவர்கள் கருதினார்கள். அவர்களுடைய கருத்து தவறானது. ஒழுங்காக வளர்க்குமாறு கடவுள் குழந்தைகளை அவர்களுடைய பெற்றோர்களிடம் ஒப்படைக்கிறார். அக் குழந்தைகளைத் துன்புறுத்தினால், அவர்களை அநாதைகளாகத் திரியவிட்டுவிட்டால், அதற்காகக் கடவுள் அக்குழந்தைகளைக் குறைகூறமாட்டார்.

குழந்தைகள் கெட்டவர்கள் அல்ல. குழந்தைகளின் பெற்றோர்களில் தான் சிலர் கெட்டவர்கள். கெட்ட சூழ்நிலை, கெட்ட உதாரணம் உண்டு, ஆனால் கெட்ட குழந்தைகள் இருக்கமுடியாது. அதுவே இனி அவருடைய கொள்கையின் முக்கியகருத்தாக விளங்கும் என்று முடிவு செய்தார் மதகுரு.

அத்தியாயம் 21

ஒவர்லுக் என்ற புதுப்பண்ணைக்குப் போகப்போகிறோம் என்று அறிந்ததும் விடுதியிலிருந்த சிறுவர்கள் பரபரப்படைந்தனர். ஒவ்வொரு சிறுவனும் அங்கே முதலில் சென்று, அங்கு நடக்கும் வேலையில் பங்கெடுத்துக்கொள்ள விரும்பினான். தற்காலிகமான வீடுகள் கட்டுவதையும் வீதிகளைப் போடுவதையும் சங். பிளானகன் சிறுவர்களை அழைத்துச் சென்று காண்பித்து வந்தார்.

சிப்பாய்களின் விடுதியைப்போலச் சிறு வீடுகள் கட்டப்பட்டன. அக்டோபர் 22-ம் தேதி அவர்கள் புது இடத்

துக்கு மாறினர். புது இடத்தைப்பற்றிச் சிறுவர்களிடையே இருந்த உற்சாகம் சொல்லிமுடியாது. சுயேச்சையாக, போலீஸார் பயமின்றி, வயல்களைச் சுற்றிவர அவர்களுக்குக் கிடைத்த முதல் சந்தர்ப்பம் இது. சங். பிளானகனும் சுற்றியுள்ள நிலத்தைப் பெருமையுடனும் குதூகலத்துடனும் நோக்கினர்.

சங். பிளானகனுக்கும் இங்குதான் முதன்முதலாகச் சொந்த இருப்பிடம் கிடைத்தது. மோட்டார்கார் "ஷெட்" டாக இருந்ததை இரு அறைகளாக மாற்றினர். ஒன்று படுக்கையறை, மற்றொன்று அவருடைய காரியாலயம்.

குத்தகைக்குப் பயிர் செய்துவந்த டேன் காட்லட் என்பவனையும் அவர்கள் உடன் அழைத்துச் சென்றிருந்தனர். அவன் சிறுவர்களுக்காக ஒரு காய்கறித் தோட்டத்தை வளர்த்தான். கோடையில் சிறுவர்கள் அவனுக்கு உதவி செய்து வந்தனர். எல்லோருமே விவசாயிகளாக வேலை செய்ய விரும்பினர். ஆனால் மற்ற வேலைகளும் இருந்தனவே. விளையாட்டுக்கு வேண்டிய நிலங்களையும் தயார் செய்தனர்.

விடுதியின் கல்வி திட்டத்தில் கைத்தொழில் பகுதியும் இருந்தது. முதலில் தச்சுவேலை கற்றுக் கொடுக்கப்பட்டது. நாளாக ஆக, விடுதிக்கு வேண்டிய மேஜைகள், நாற்காலிகள், விளக்குகள் முதலியவற்றைச் சிறுவர்களே செய்யத் தொடங்கினர்கள்.

சங். பிளானகன் இச்சந்தர்ப்பத்தில்தான் மற்றொரு முக்கிய தீர்மானத்திற்கு வந்தார். பண்ணையைச் சுற்றிச் சுவர்கள் வேண்டாம். கதவுகளுக்குப் பூட்டும் அவசியமில்லையென்று முடிவுசெய்தார்.

சஞ்சலப்பட்ட ஓமாஹா நகரத்தினரிடம் அவர் சொன்னர்: நான் சிறைச்சாலையைக் கட்டவில்லை. இது ஒரு

வீடு. உங்கள் குடும்பத்தினரை நீங்கள் சுவர் எழுப்பிச் சிறை செய்ய மாட்டீர்கள் அல்லவா?''

பிறகு சங். பிளானகனின் குடும்பத்தினர் கவலைப்பட நேர்ந்தது. விடுதிக்காக உழைத்த உழைப்பு அவருடைய தேக நிலைமையைப் பாதித்தது. அவருக்கு ஓய்வு அவசியமாயிற்று. ஆனால் அவர் ஓய்வு எடுத்துக்கொள்ள மறுக்கவே, அவருடைய தாயார் ஓவர்லுக் பண்ணைக்குவந்து சேர்ந்தார்.

மறுபடியும் லீபெக்கில் இருப்பது போல் இருக்கிறதென்றார் மதகுரு. அவருடைய தாயார் மறுபடியும் ஒரு பண்ணையில் வசித்தார். ஆனால் இப்போது பார்த்துவந்த குடும்பம் பெரிது. சமையல் வேலை, வீட்டைச் சுத்தமாக வைத்திருப்பது முதலிய வேலைகளை நோரா பிளானகன் மேற்பார்வையிட்டு வந்தார். முக்கியமாகத் தமது மகனைக் கவனித்து வந்தார்.

சிறுவர் நகரில் நோரா பிளானகனுக்கு ஓர் அலாதி அந்தஸ்து இருந்தது. சங். பிளானகனது குழந்தைப் பருவத்தையும் மற்றக் குழந்தைகளையும் பிணைக்கும் சரடாக அவர் விளங்கினார். அவ் வம்மையார் எல்லாச் சிறுவர்களையும் தமது சொந்தப் புதல்வர்களைப் போலவே நடத்திவந்தார். ஆகவே அவருக்கு ஒத்தாசை செய்வதை ஒரு பெரிய கௌரவமாகச் சிறுவர்கள் கருதினார்கள்.

புதிய பண்ணையிலும் ஜனப்பெருக்கம் அதிகமாயிருந்தது. இப்போது நிறையச் சிறுவர்கள் வர ஆரம்பித்தனர். சிலர் ஏதாவது குறிப்புத்தாள் கொண்டு வருவார்கள். மற்றவர்களுடைய கழுத்தில் ஓர் அட்டை தொங்கும். அதில் பின் வரும் குறிப்பு இருக்கும்: ''சங். பிளானகன் அவர்களே, தயவு செய்து இப் பையனை எடுத்துக் கொள்ளுங்கள். இனி அவனைப் பாதுகாக்க என்னால் இயலவில்லை.''

அவ்வாறு எழுதி அனுப்புவோர் அநேகமாகக் கையெழுத்துப் போடுவதில்லை. சிறுவர்களை அநுமதித்து,

சங். பிளானகன் அவர்களுடைய வரலாற்றை விசாரிப்பார். பிறகு அவர்களை என்ன செய்வது என்று தீர்மானிப்பார். ஆனால் வீடாகக் கருதமுடியாத வீட்டுக்கோ, விருப்பமில்லாத பெற்றோர்களிடமோ சிறுவர்களை அவர் எப்போதும் திருப்பி அனுப்பியதில்லை.

மற்றும், நீதிபதிகள், சுற்றுப்புறத்தில் உள்ளவர்கள், பொதுநல ஊழியர் சங்கங்கள் – எல்லோரும் புதிய சிறுவர்களை அனுப்பினர். அவர்கள் அனைவரையும் அனுமதிப்பதென்பது முடியாத காரியம். ஓவர்லுக்கில் இடம் நிறைய இருந்தது. ஆனால் மற்ற வசதிகள் இல்லை. தங்க அறைகளோ, அவர்களைப் போஷிக்கப் பணமோ கிடையாது.

சில சமயங்களில் பெற்றோர்களே தங்கள் குழந்தைகளை அழைத்து வருவார்கள். ஒரு சிறுவனுடைய தாயார் வீட்டை விட்டு ஓடிவிட்டாள். தகப்பனுடைய வருமானமோ குறைவு. அவன் வேலைக்குப் போயிருக்கையில் சிறுவனைப் பார்த்துக் கொள்ள யாரையும் அமர்த்திக்கொள்ள அவனுக்கு வசதியில்லை. தகப்பன் பையனை சங். பிளானகன் முன் கொணர்ந்தான். பையனுடைய கையில் ஒரு சங்கீதக் கருவி இருந்தது.

தகப்பன் விளக்கிச் சொன்னான்: நான் உபாத்தியாயரை வைக்கவில்லை. அவனே அதை எங்கேயோ தேடிப் பிடித்தான். அவனாகவே அதை வாசிக்கக் கற்றுக்கொண்டான்.

"அவனுக்கு இங்கே பிடித்திருக்கும். நாங்கள் இங்கே பாண்டு கோஷ்டியை அமைத்திருக்கிறோம். எல்லோரும் சிறுவர்கள். ஆனால் சங்கீத ஞானமுள்ளவர்கள் தேவை," என்றார் மதகுரு.

"எனக்கு இந்த இடம் பிடிக்காது. நான் வீட்டுக்குப் போகவேண்டும். எனக்கு அப்பா, அம்மா வேண்டும்," என்று அலறினான் சிறுவன்.

எனினும், அவன் அங்கே தங்கினான். 1925-ம் ஆண்டில் அவன் படித்துப் பட்டம் பெற்றான். சில வருஷங்களுக்குப்

பிறகு பெயர்பெற்ற சங்கீத வித்வானாக அவன் திரும்பிச் சிறுவர் நகருக்கு வந்தான். அவனுடன் ஒரு பெண் இருந்தாள். சங். பிளானகனே தமது திருமணத்தை நடத்திவைக்கவேண்டுமென்று அவன் விரும்பினான். அதற்காக அவளை அழைத்து வந்திருந்தான்.

சங். பிளானகன் ஒவர்லுக் பண்ணைக்குப் போனபோது அவருடைய திட்டம் இதுதான்: முதலில் தற்காலிமாகச் சில வீடுகளைக் கட்டிக்கொண்டு காலம் தள்ளுவது. கடனையெல்லாம் கொடுத்தான பிறகு, பணம் சேமித்து ஒரு பெரிய வீடு கட்டிக்கொள்ளுவது.

ஆனால் புதிய சிறுவர்கள் வரிசையாக வந்துகொண்டிருக்கவே, அவர்கள் தங்குவதற்கான வசதி உடனே செய்தாகவேண்டியிருந்தது. அவர்களுடைய கஷ்டம் ஒமாஹாவிலிருப்போருக்குத் தெரிந்தது. சில முக்கியஸ்தர்கள் கூட்டமாகக் கூடி "எவ்வாறு சங். பிளானகனின் விடுதிக்கு உதவி செய்வது" என்பதை யோசித்தார்கள்.

ஒருவர் சொன்னார்: "அவருக்கு என்ன தேவையென்று நமக்குத் தெரியுமே. அவருக்கு ஒரு பெரிய வீடு வேண்டும் இப்போது."

"அவருக்கு வேண்டியது போன்ற வீட்டை இப்போது கட்டுவதென்றால் லட்சக் கணக்கில் செலவாகுமோ," என்றார் மற்றொருவர்.

"அப்படியானால் சரி. லட்சக்கணக்கில் நிதி திரட்டுவோம்," என்று தீர்மானித்தார் இன்னொருவர்.

அன்று, இரண்டு லட்சம் டாலர் நிதி திரட்டுவதென்று அக்கூட்டம் தீர்மானித்தது. அப்பணத்தைக் கொண்டு நிரந்தரமாக ஒரு கட்டடத்தை ஒவர்லுக்கில் கட்டவேண்டுமென்று திட்டம் போட்டார்கள்.

அம்முயற்சியை எல்லோரும் வரவேற்றனர். எல்லோரும் திட்டத்துக்காகப் பாடுபட்டனர். நகரமே இயக்கத்தில்

கலந்துகொண்டது. ஆனால் ஆரம்பம் சரியாக அமைய வில்லை. நிதி திரட்டுவதே தொழிலாகக் கொண்டவர்களுடைய உதவியை நாடுவது என்று சிலர் தீர்மானித்தனர். ஆனால் அத்தகைய நிதி திரட்டுவோருக்கு சங். பிளானகனின் சேவையின் மகத்துவம் தெரியாது. அவர்கள் ஜனங்களை நெருங்கிப் பணம் கேட்டவிதம் சரியானதாக அமையவில்லை. ஓமாஹா நகரத்தினரில் சிலர் ஒருகாலத்தில் சங். பிளானகனைக் கண்டித்தனர் என்றாலும், இப்போது அனைவரும் அவரைப் போற்றினர். அவர் நகரத்தின் உடைமையென்று பாத்தியதை கொண்டாடினர். அவருக்குப் பண உதவி செய்ய, நிதிதிரட்ட அயலார் வந்து இயக்கத்தில் கலந்துகொள்ளுவதை ஓமாஹா நகரத்தினர் விரும்பவில்லை.

ஆகவே முதல் வாரத்திலேயே இயக்கம் தோல்வியுற்றதென்பது புலனாயிற்று. வெளியூர்களிலிருந்து வந்தவர்கள் திருப்பி அனுப்பப்பட்டனர். இயக்கத்தைத் தொடங்கியவர்களிலும் சிலர் அதை விட்டுவிட யோசித்தனர்.

ஆனால் மற்ற உற்சாகிகள் அதற்குச் சம்மதிக்கவில்லை. ஓமாஹா நகரத்தினரே இயக்கத்தை நடத்தவேண்டுமென்று சொன்னார்கள். அவர்கள் ஜே. டி. டேவிட்ஸன் என்பவரை அணுகினார்கள். அவர் பிற்காலத்தில் நெப்ராஸ்கா மின்சாரக் கம்பெனிக்குத் தலைவரானார். அப்போதே சுறுசுறுப்பானவர். இயக்கம் தோல்வியடைந்ததென்பதை அறியவே, அவர் இயக்கத்தைத் தொடர்ந்து நடத்த ஒப்புக்கொண்டார். புராட்டஸ்டன்ட் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தவர் அவர். இயக்கத்தின் தலைவராக நியமனம் பெற்ற பிறகு பல நண்பர்கள் உதவியைக்கொண்டு நிதி திரட்டலானார்.

அவருக்கு உதவிசெய்தவர்களில் முக்கியஸ்தர்கள் ஒரு கத்தோலிக்கர், ஒரு புராட்டஸ்ட்டன்ட், இரண்டு யூதர்கள். அவர்கள் நடத்திய நிதி திரட்டும் இயக்கத்தை அங்குள்ளவர்கள் இன்றும் மறக்கவில்லை.

எவ்வாறு இயக்கத்தை ஜனங்களின் கவனத்துக்குக் கொண்டுவர வேண்டுமென்பதே டேவிட்ஸன் கோஷ்டியாருடைய நோக்கம். அதற்காக வேண்டுமாயின் தெருக்களில் வாணவேடிக்கை நடத்தவும் அவர்கள் தயாராயிருந்தார்கள். ஆனால் அவ்வளவு தூரம் அவர்கள் செல்லவில்லை. கைகளில் பந்தங்களுடன் இருட்டில் தெருத்தெருவாகச் சென்றனர் அவர்களுடைய முதல் கூட்டத்துக்கு. இரவாயினும் கூட்டம் அவர்களைத்தொடரும். ஒரு முனையில் நின்று பாடுவார்கள். பிறகு சிலர் பேசுவார்கள். முக்கியமான பேச்சாளர் சங். பிளானகன் தான் :

"வீடில்லாத சிறுவர்கள் நூற்றுக்கணக்கில் ஓமாஹாவிலிருந்தே வந்திருக்கிறார்கள். பாவம், அவர்களை நீங்கள் பார்க்கவேண்டும். உடைகள் கிழிந்திருக்கின்றன. முகங்கள் வாடிக் கிடக்கின்றன. உங்கள் வீட்டில் உங்களுடைய பையன் இருந்தால், இந்த பரிதாபகரமான சிறுவர்களைப் பற்றி நினைத்துப்பாருங்கள்," என்பார் மதகுரு.

பிறகு பணம் வசூலிப்பார்கள். சிறுவர் நகரைச்சேர்ந்த பையன்களும் இயக்கத்தில் பங்கெடுத்துக் கொண்டனர். அதில் முக்கியமாகப் பெயர் வாங்கினவன் சார்லஸ். தென்வொர்த்தி. "எங்கள் விடுதியைத் தேடிவருகிறவர்களில் தினமும் மூன்று சிறுவர்களையாவது நாங்கள் எடுத்துக் கொள்ளாமல் அனுப்பிவிடுகிறோம். அவர்களைச் சேர்த்துக் கொள்ள அங்கு இடமில்லை. ஒரு சிறுவனை அனுப்பிவிடும் போது எனக்கு அழுகை வரும். அவன் திரும்பி எங்கே போவான்? அவனுக்கு வீடில்லை. நண்பர்கள் இல்லை. தெருக்கள்தான் அவனுக்கு வீடு," என்பான் அவன். நான் ஒரு வியாபாரி. வீடில்லாத பையனின் அன்பை விலை கூறுகிறேன். கடவுள் நம்பிக்கை, பிறரிடம் அன்புகூர்தல் இவை இரண்டும் பணத்தைவிடப் பெரியவை. கோடிகோடியாக இருந்தாலும் இவை இரண்டும் இல்லாவிட்டால் வாழ்ந்து

பயனில்லை. நாங்கள் துஷ்டர்களாக வளர ஆசைப்படவில்லை. நல்ல பிரஜைகளாக இருக்கவே விரும்புகிறோம். எங்கள் விடுதியில் நாங்கள் பசுக்கள், கோழிகள் வளர்க்கிறோம். தங்குவதற்கு வீடுதான் வேண்டும்.''

ஸினிமாக் காட்சிபோல் இருக்கிறதா? ஆமாம். ஆனால் அவனுடைய பேச்சைக் கேட்டவர்களுடைய கண்முன் மதகுரு சாதித்திருக்கும் சேவை தோன்றியது. அப்பையனுடைய பேச்சைக் கேட்டவர்களில் பலர் கைகொட்டிப் பையிலிருந்த பணத்தையெல்லாம் எடுத்து நிதிக்கு நன்கொடையாக அளித்தனர்.

எனினும், மாதர்களும் இயக்கத்தில் கலந்துகொள்ளவில்லையெனின் இரண்டு லட்சம் டாலர் நிதி திரட்டியிருக்க முடியாது. அவர்கள் ஐந்தாறு பேர்களாகப் பிரிந்து விடு வீடாகச் சென்று நிதி திரட்டினர். ஒவ்வொரு கடைக்கும், காரியாலயத்துக்கும், ஹோட்டலுக்கும் போனார்கள். குடியர்கள், சூதாட்டக்காரர்கள், திருடர்கள், போக்கிரிகள் எல்லோரையும் அணுகினர். 2,15,000 டாலர்கள் திரட்டினர்.

1922-ம் ஆண்டு மார்ச்சுமாதத்தில், அதாவது சங். பிளானகன் ஒவர்லுக்குச் சென்ற ஒரு வருஷத்துக்குள், ஐந்துமாடிகொண்ட கட்டடத்துக்கு அஸ்திவாரம் போடப் பட்டது. சங். பிளானகன் குதூகலமடைந்தார். பின்னல் நடக்கப்போவதை அவர் ஊகிக்கக்கூடியவரல்ல. ஆகவே வரப் போகும் கஷ்டங்களைப்பற்றி அவர் அப்போது உணரவில்லை.

அத்தியாயம் 22

நிதிப்பணம் வீடுகட்டுவதில் செலவாகிவந்தது. வியாபாரிகள் விடுதிக்குவேண்டிய பொருள்களைக் கடனாகக் கொடுக்கச் சம்மதிக்கவில்லை. ஐந்து மாடிவீடு கிளம்பிக்கொண்டிருந்த போதும், சங். பிளானகன் பண நெருக்கடியால் அவதியுற்றார்.

விடுதிக்காக வந்த நன்கொடைகளையும் வீடுகட்டும் கண்டிராக்டர்களுக்குக் கொடுக்கவேண்டியதாயிற்று. நிலத்துக்காகக் கொடுக்கவேண்டிய கடன்வேறு இருந்தது. மளிகை, காய்கறிக் கடைகளுக்குத் தரவேண்டிய பாக்கி அதிகமாகவே அவை அவருக்குப் பொருள்களைத் தர இசையவில்லை. பணத்தை ரொக்கமாகக் கொடுத்தாலொழிய பொருள்களை இறக்க வேண்டாமெனக் கண்டிப்பான உத்தரவுடன் கடைக்காரர்கள் வண்டிகளை அனுப்பினார்கள்.

“உணவு எல்லாம் வண்டியிலிருக்கிறது. ஆனால் நீங்கள் பணத்தை எடுத்தாலொழிய நான் ஒரு ரொட்டித்துண்டைக் கூடக் கீழே இறக்கமாட்டேன். உங்களுக்குத்தான் விஷயம் தெரியுமே. உங்கள் திட்டம் பூராவும் தோல்வியடைந்து விடும். உங்களால் கொடுக்கவேண்டிய கடனைக் கொடுக்க முடியாதென்று ஜனங்கள் பலர் நினைக்கிறார்கள்.”

பல தடவைகளில் வண்டிக்காரர்கள் உணவைத் தராமலே சென்றார்கள்.

ஒருநாள் விடுதிக்கு வெளியே ஒரு நீக்ரோ இளைஞன் நடனமாடிக்கொண்டிருந்தான். சில சிறுவர்கள் பாடிக் கொண்டும் கைதட்டிக்கொண்டுமிருந்தார்கள். இவ் வேடிக்கையைக் காணக் கூட்டம் கூடிவிட்டது. இக் காட்சியைப் பார்த்ததும் சங். பிளானகனுக்கு ஒரு யோசனை தோன்றிற்று. சிறுவர் நகரில் மற்றச் சிறுவர்களும் பாடினர், நடனமாடினர். இன்னும் பல வேடிக்கைகளைக் காட்டுவதில் திறமையுள்ள இளைஞர்களும் இருந்தார்கள். அவர்களைக்கொண்டு சிறுவர் நகரின் சரிதத்தையும் தேவைகளையும் ஜனங்களுக்கு வலியுறுத்தும்படி ஏன் ஒரு நாடகம் தயாரிக்கக்கூடாது என்று யோசித்தார் மதகுரு.

இதற்குமுன் சிறுவர் நகரிலிருந்து ஒரு சங்கீத பாண்டு வெளியூர்களுக்குச் சென்றது. அவர்கள் ரயிலில் சென்றார்கள். ஆனால் நாடகக் கோஷ்டி ரயிலில் சென்றால் செலவு அதிக

மாகும். சர்க்கஸ்காரர்கள் மாதிரி குதிரை வண்டிகளில் ஊர் ஊராகச் சிறுவர் நகரத்தின் கோஷ்டியை அனுப்பலாம். என்று மதகுரு முடிவு செய்தார். பழைய வண்டிகளையும் குதிரைகளையும் விலைக்கு வாங்கினார். நாடகக் கோஷ்டியை சங். பிளானகன் ஏற்பாடு செய்கிறார் என்ற செய்தி ஓமாஹா நகரத்தினருக்குத் தெரிந்ததும், பல கர்நாடகப் பேர்வழிகள் முணுமுணுத்தார்கள். இது என்ன கூத்து என்று வியந்தார்கள்.

அதையெல்லாம் பொருட்படுத்தாமல், சங். பிளானகன் தம் கண்காட்சியை ஏற்பாடு செய்தார். வண்டிகளின் பக்கங்களில் கொட்டை எழுத்துக்கள் அறிவித்தன : " சங். பிளானகனின் சிறுவர்களின் வேடிக்கை; உலகத்திலேயே சிறந்த குழந்தை நடிகர்கள். "

கோஷ்டி புறப்பட்ட தினத்தன்று, விடுதியிலிருந்தவர் அனைவரும் கலாட்டாவுடன் ஆசி கூறினர். அவர்களுக்கு முன்பாகவே சங். பிளானகன் அமர்த்தியிருந்த ஏஜண்டு சென்று டிக்கட்டுகள் விற்க ஏற்பாடு செய்திருந்தார். கோஷ்டி ஓமாஹாவுக்கு மேற்கே பிரெமன்ட் என்ற இடத்தில் தங்கிற்று. கோஷ்டியின் தலைவர் பாட்ரிக் நார்ட்டன் எனினும், சங். பிளானகனும் உடன் சென்றார். பிரெமன்ட் வரையிலாவது கோஷ்டியுடன் போவதென்று தீர்மானித்திருந்தார். வேடிக்கை முதல் இரவன்று எவ்வாறு சோபிக்கிறது என்பதைப் பார்க்க அவருக்கு ஆவல்.

பிரெமன்டில் அவர்களுடைய ஏஜண்டு தம் வேலையை நன்றாகச் செய்திருந்தார். உள்ளூர்ப் பத்திரிகையில் விளம்பரமும் நடக்கப் போகும் காட்சியைப் பற்றிய செய்தியும் வெளி வந்தன.

முதலிரவன்று அசாத்திய கூட்டம். நகரிலிருந்தவர்கள் எல்லோரும் காட்சிக்கு வந்திருந்தனர். அவர்கள் கண்ட காட்சியும் நன்றாய் அமைந்திருந்தது. பல வாரங்களாக

ஒத்திகை நடத்தி வந்ததால், பாண்டு உற்சாகமாக வாசித்தது. சங்கீதமும் இனிமையாக இருந்தது. மற்றும் நடனங்கள், தமாஷ் காட்சிகள், நாடகத் துணுக்குகள், பாட்டுகள் இருந்தன.

மேடையின் ஒரு புறத்திலிருந்து கவலையுடன் கவனித்து வந்தார் சங். பிளானகன். அதே தொழிலாக நாடகங்களைத் தயாரிப்பவர்கள் முதல் இரவன்று எவ்வாறு பயத்துடன் இருப்பார்களோ அவ்வாறே மதகுருவின் மனநிலை இருந்தது. காட்சியைக் காண்பவர்கள் தவருன இடங்களில் கை கொட்டிச் சிரித்துவிடப் போகிருர்களே என்று பயம். நல்ல வேளையாக அப்படியொன்றும் நேரவில்லை. ஒவ்வொரு காட்சிக்கும் அமோகமான வரவேற்பு. சிறுவர் நகர் கோஷ்டி வெற்றி பெற்றுவிட்டதில் சந்தேகமில்லை. இனி அவர்கள் தைரியமாக மற்ற ஊர்களுக்குச் செல்லலாம் என்று துணிவுற்று, சங். பிளானகன் திரும்பினுர்.

அடுத்த சில வாரங்களுக்கு எல்லாம் சரியாக நடந்தது. ஒரு நகரில் சில இரவுகள் காட்சி நடத்துவார்கள். பிறகு வண்டிகள் அடுத்த நகரை நோக்கிச் செல்லும். ஒரு நகரத்தை நெருங்கும்போது கோஷ்டியை உள்ளூர்ச் சிறுவர்கள் கூட்டமாக வந்து வரவேற்பார்கள். நகரத்தை விட்டு கோஷ்டி போகும்போதும் அவர்கள் வழியனுப்புவார்கள். பல சிறுவர்கள் வீட்டைவிட்டு "சர்க்கஸில்" சேர விரும்பினர். சொந்த வீட்டில் வளர அவர்கள் எவ்வளவு கொடுத்து வைத்தவர்கள் என பாட்ரிக் நார்ட்டன் அவர்களுக்கு ஓர் உபதேசம் செய்து அனுப்புவார்.

ஆனுல் லாபம் சம்பாதிப்பதற்காக வெளிக்கிளம்பிய வேடிக்கை கோஷ்ஷடி லாபம் சம்சாதிக்கவில்லை. வழிச் செலவுக்கும் முதலீட்டுக்கும் சரியாகப் போய்விட்டது அவர்களுக்குக் கிடைத்த வருமானம். முதலிலிருந்த உற்சாகம் குறையக் குறைய வசூலும் குறையலாயிற்று. கோஷ்டியினருக்கும் முன்பிருந்த குதூகலம் இல்லை.

பிறகு எதிர்பாராத விதமாய் அவர்களுக்குப் பெரிய நஷ்டம் ஏற்பட்டது. ஓமாஹாவுக்கு மேற்கே நூறுமைல்களுக்கு அப்பாலுள்ள ஒரு சிற்றூருக்கு கோஷ்டி சென்றது.

அவர்கள் கிராமத்துக்குள் நுழைந்ததும் சாதாரணமாக அவர்களுக்கிருந்துவந்த வரவேற்பு இல்லை. சிறுவர்கள் ஒருவரையும் காணேம். மற்ற இடங்களில் ஊர் அதிகாரிகள் வரவேற்பார்கள். இங்கு அவர்களும் தலைகாட்டவில்லை.

முதலில் சென்ற வண்டியிலிருந்து பாட்ரிக் நார்ட்டன் கீழே இறங்கினுர் விசாரிக்க. விஷயத்தை அறிய அதிக நேரம் ஆகவில்லை. அந்த ஊரில் காட்சி நடத்த எவ்வித ஏற்பாடும் ஆகவில்லை. நாடகமேடையும் கிடைக்கவில்லை. இன்னும் மோசமான செய்தி என்னவென்ருல பக்கத்து ஊர்களிலும் காட்சி நடத்த ஏற்பாட்டைச் செய்ய முடியவில்லை. சிறுவர் நகரைப்பற்றித் தப்பபிப்பிராயம் அவ்விடங்களில் பரவியிருந்ததால், அட்வான்ஸ் ஏஜன்ட் ஒன்றும் செய்ய இயலவில்லை. கோஷ்டிக்கு விஷயத்தைத் தெரிவிக்காமலே அவர் எங்கேயோ போய்விட்டார்.

கோஷ்டியோ கையில் பணமில்லாமல் அந்த ஊரில் கிடக்கவேண்டியதாயிற்று. பாட்ரிக் நார்ட்டன் டெலிபோன் மூலம் சங். பிளானகனுக்குச் செய்தியைத் தெரிவித்தார்.

"அக் கிராமத்திலேயே இருங்கள், சிறுவர்கள் வண்டிகளிலேயே தூங்கட்டும். அவர்களிடம் பயப்படவேண்டாம் என்று சொல்லுங்கள், எல்லாம் சரியாய்ப் போய்விடும். நான் அடுத்த ரயிலில் புறப்பட்டு வருகிறேன், என்ருர் மதகுரு.

அவர் வந்து சேர்ந்ததும் கோஷ்டியினர் மனத்தளர்ச்சியடைந்திருப்பதைக்கண்டார். ஆனல் அவர் நம்பிக்கையிழந்துவிடவில்லை. அவர் சிறிது பணமும் எடுத்து வந்திருந்தார். அவர்கள் ஜாக்கிரதையாகச் செலவுசெய்தால் வழியில் காட்சிகளை நடத்திக்கொண்டே ஒருவாறு ஓமாஹா வந்துசேரலாம். அவரும் அவர்களுடனே திரும்புவதாகத் தீர்மானித்தார்.

இத் திட்டம் முதலில் நிறைவேறுவது போலிருந்தது. ஆனால் அவர்களுடைய செலவு வருமானத்தைவிட அதிகமாக இருந்தது. அவர்கள் லிங்கன் நகர் வந்து சேருவதற்குள் கையிலிருந்த பணமெல்லாம் கரைந்துவிட்டது. பைசாகூடக் கிடையாது. அன்று மாலை லிங்கன் நகரை அடைந்தனர். காலையிலிருந்து ஒருவரும் சாப்பிடவில்லை. அவர்களுக்கெதிரில் சிறைச்சாலையின் சுவர்தான் இருந்தது.

"அந்த சிறைச்சாலையின் வார்டன் எனது நண்பர். அவரிடம் நாம் செல்லலாம் என்று யோசிக்கிறேன்," என்றார் சங். பிளானகன் பாட்ரிக் நார்ட்டனிடம்.

வண்டிகள் சிறைச்சாலையின் கதவுகளை நோக்கிச் சென்றன. சிறைச்சாலையின் கோபுரங்கள் மீதிருந்த பீரங்கிகளைக் காவலாளர்கள் வண்டிகள் வரும் திக்கில் திருப்பினர். பசியோடிருந்த மதகுரு இறங்கி ஒரு காவலாளியிடம் சென்று தமது சிறுவர்கள் வார்டனைக்காணவந்திருப்பதாக அறிவித்தார். சிறிது நேரத்திற்குள் வார்டன் ஓடோடியும் வந்து காணமற் போன சகோதரனைக் கண்டதுபோல அவரை வரவேற்றார்.

மதகுரு மன்னிப்புக் கேட்கும் தோரணையில் பேசினார். முன் தெரிவிக்காமல் தாமும் தமது சிறுவர்களும் வருவது தவறு என்பதை உணருவதாகவும், அவ்வழியாகச் சென்றதால் அவரைச் சந்திக்கத் தீர்மானித்ததாகவும் சங். பிளானகன் வார்டனிடம் கூறினார்.

அது சரிதான். நீங்கள் வந்ததைப்பற்றி ரொம்ப சந்தோஷம். வந்ததுதான் வந்தீர்கள், உங்களிடம் ஒருகோரிக்கை. எங்கள் ஆட்களுக்காக உங்களுடைய சிறுவர்களை ஒரு காட்சி நடத்த அனுமதிப்பீர்களா?" என்று கேட்டார் வார்டன்.

மதகுரு எதிர்பார்த்தது போலவே நேர்ந்தது. காட்சி மாலை தொடங்கப்போவதால் இரவு போஜனத்துக்கு அவர்களைத் தங்கும்படி வார்டன் கேட்டுக்கொண்டார்.

அன்று காட்சி அருமையாக வாய்த்திருந்தது. காட்சி முடிந்தபிறகும், கைதிகள் இன்னும் தொடர்ந்து நடக்க வேண்டும் என்று சத்தம் போட்டனர்.

"அவர்களுக்குத் தெரிந்ததெல்லாம் அவர்கள் நடத்தியாகி விட்டதே," என்ருர் சங். பிளானகன்.

"அவர்கள் ஏதாவது பாடட்டுமே," என்று யோசனை கூறிஞர் வார்டன். சிறுவர்கள் விடுதியில் ஸ்தோத்திரப் பாட்டுகள் பாடுவதுண்டு. ஐந்நூறு கைதிகளுக்கு முன் சிறுவர்கள் "ஆவே மரியா" என்ற கீதத்தைப் பாடிஞர்கள். அவர்கள் உணர்ச்சியோடு பாடிஞர்கள். கைதிகள் லயித்துப் போஞர்கள்.

சங். பிளானகனுமே லயித்துப்போஞர். அவர் ரோமாபுரியையும், வாட்டிக்கன் பாடகர் கூட்டங்களையும் நினைத்துக் கொண்டார். தமது விடுதியிலும் நூறுபேர் கொண்ட கொயரை அமைக்கவேண்டுமென்று யோசனை செய்தார். ஆஞல் அது பின்பு நடக்கவேண்டிய விஷயம். தற்சமயம் கையில் பணமில்லாமல் சிறுவர்கள் ஜெயிலில் பாடிக்கொண்டிருந்தனர். மறுநாள் காலை ஒவர்லுக்கை நோக்கிப் பயணமாஞர்கள்.

சிறுவர் நகர் எப்போதுமே அவ்வளவு சஞ்சலத்துடன் இருந்ததில்லை. சங். பிளானகனுக்கு அது பெருந்தோல்வியாக விளங்கியது. பொதுஜன ஆதரவைப்பெற இக்காட்சிகளை அவர் தயாரித்திருந்தார். அதில் அவர் வெற்றியடையவில்லையென்று அவர் நினைத்தார். அது தவறு. உடனுக்குடன் பணம் கிடைக்கவில்லையெனினும், சிறுவர்கோஷ்டி விஜயம் செய்த இடங்களிலிருந்து பல பாராட்டுக் கடிதங்கள் வர ஆரம்பித்தன. சிலர் பணமும் அனுப்பினர். சிறுவர்கள் எவ்வளவு குதுகலத்துடன் இருந்தார்கள் என்றும், அவர்களுடைய நடத்தை எவ்வளவு பாராட்டத்தக்கதாயிருந்ததென்றும், அவர்களுக்குப் பொதுஜன ஆதரவு அவசியம் என்று அக் கடிதங்கள் குறிப்பிட்டிருந்தன.

அந்த அத்தாட்சிகளைக் காணக்காண சங். பிளானகனின் உற்சாகம் அதிகமாயிற்று. அவர் நார்ட்டனையும் மற்றவர் களையும் அழைத்தார். சிறுவர் கோஷ்டியினால் தாம் எதிர் பார்த்ததை விட நல்ல பலன் கிடைத்ததால், அவர் மறுபடி யும் அத்திட்டத்தை மேற்கொள்ளப் போவதாக அறிவித்தார். ஓமாஹாவிலுள்ள ஒரு பாங்கி நிர்வாகியிடம் கடன்வாங்கினார். இந்தத்தடவை சிறுவர் கோஷ்டி வெளியூர்களுக்கு ரயில் வண்டியில்போக ஏற்பாடுசெய்தார். விளம்பர விஷயங்களைக் கவனித்துக்கொள்ள அநுபவம்வாய்ந்தவர்களை நியமித்தார்.

கோஷ்டியின் சுற்றுப் பிரயாணத்தின் வெற்றி சங். பிளானகனையே மலைக்கச் செய்தது. அதற்குமுன் சிறுவர் கோஷ்டி குதிரைவண்டிகளில் ஊர் ஊராகச் சென்று சிரமப் பட்டதையும், கைதிகளுக்காகக் காட்சி நடத்தியதையும் ஜனங்கள் அறிந்திருந்தார்கள். ஆகவே மறுபடியும் சுற்றுப் பிரயாணம் செய்யும் சிறுவர் கோஷ்டியை ஆதரிக்க ஜனங் கள் காத்திருந்தார்கள். கோஷ்டியின் காட்சிகளுக்கு எங்கும் நிறையக்கூட்டம் வந்தது. கிறிஸ்துமஸுக்குமுன் லாபத் துடன் கோஷ்டி விடுதிக்குத் திரும்பிவந்தது.

சங். பிளானகனுடைய திட்டங்கள் நிறைவேறலாயின. புதியகட்டடம் பூர்த்தியாயிற்று. நிலத்துக்குச் சேரவேண்டிய பணத்தையும் மதகுரு செலுத்திவிட்டார். அன்றாடம் பொது மக்களிடமிருந்து நன்கொடைகளும் வரலாயின. எதிர்காலத் தைப்பற்றிக் கவலையின்றி சங். பிளானகன் இருக்கமுடிந்தது.

அடுத்த ஆண்டுகளில் கோடைமாதங்களில் பல சிறுவர் கோஷ்டிகள் விடுதியிலிருந்து சுற்றுப்பிரயாணம் செய்யலா யின. சிறுவர்களுக்காச் சொந்த மோட்டார் காரும் வாங்கி னார்கள். பலதடவைகள் ஸ்ரீமதி நெல்லியும் சிறுவர்களுடன் வெளியூர்களுக்குச் சென்று அவர்களைக் கவனித்துவந்தார்.

கோஷ்டியின் காட்சிகளைக் காண வருவர்களில் சிலர் தாங்கள் ஒரு குழந்தையை ஸ்வீகாரம் எடுத்துக் கொள்ள விரும்புவதாகச் சொல்வதுண்டு.

"நான் அதற்குச் சம்மதித்தால், கோஷ்டியே கலைந்து நான் மட்டும்தான் விடுதிக்குத் திரும்பவேண்டியிருக்கும்," என்று பதில் கூறுவார் மதகுரு.

அதேமாதிரி பல சிறுவர்கள் கோஷ்டியில் சேர விரும்புவார்கள். ஓர் இரவு கிழிந்த ஆடையுடன் ஒரு சிறுவன் மதகுருவிடம் வந்து, "நானும் உங்களுடன் வரலாமா?" என்று கேட்டான்.

பத்துவயது நிறையாத அப்பாலகன் அவருடன் பேசும்போது நடுங்குவதைக் கண்டார் மதகுரு. நிதானமாக அவனுடைய பயத்தைப் போக்கி அவனைப்பற்றி விசாரித்தார். அவனுடைய பெற்ரேர்கள் எங்கு இருந்தார்கள் என்பது அவனுக்குத் தெரியாது. பத்திரிகைகளை விற்று வயிறு வளர்த்து வந்தான். இன்ெெருரு பையனுடன் ஒரு குடிசையில் தூங்கிவந்தான். அந்த ஊர் நீதிபதியின் அநுமதியைப் பெற்று, சங். பிளானகன் அப்பையனைத் தம்முடன் அழைத்துச் செல்லத் தீர்மானித்தார்.

அந்த நகரத்து ஜனங்களுக்கு அப்பையனைப்பற்றி ஒன்றும் தெரியாதிருந்தது. ஆனல் மதகுருவின் தீர்மானத்தைப்பற்றி அறிந்ததும் அநேகர் உதவிசெய்ய முன்வந்தனர். வியாபாரிகள் சிறுவனுக்குத் துணிமணிகள் அளித்தனர்.

"முதலிலேயே அச்சிறுவனை யாராவது பாதுகாத்திருந்தால் இந்த ஆடம்பரம் எல்லாம் வேண்டியிராது," என்ருர் பிளானகன்.

பிறகு பல வருஷங்கள் சிறுவர் நகரிலிருந்து கோஷ்டிகள் வெளியூர்களுக்குச் செல்லவில்லை. சங். பிளானகன் தமது சிறுவர்களைக் கொண்டு ஒரு ஸ்தோத்திரப் பாடல் கோஷ்டியை அமைக்க விரும்பினர். முதலில் விடுதியின் ஆலய வழிபாட்டுக்கு அவசியமான அளவுக்கு ஒரு "கொயரை" அவர் அமைத்திருந்தார். 1941-ம் ஆண்டில், சங். பிரான்ஸிஸ் ஷ்மிட் எஸ்ற யௌவன மதகுருவை

அழைத்து வந்து, அவரை ஓர் அற்புத "கொயர்" அமைக்கும்படி சங். பிளானகன் கேட்டுக் கொண்டார்.

சங். ஷ்மிட் நல்ல பாடகர். வாத்தியங்களும் வாசிப்பார். இரு வாரங்கள் ஒத்திகை நடத்தி, "கொயரில்" பங்கு எடுத்துக் கொள்ளத் தகுதி வாய்ந்த சிறுவர்களைத் தேர்ந்தெடுத்தார். சிறிது சிறிதாக "கொயர்" வளர ஆரம்பித்தது பிறகு இரண்டாவது கோஷ்டியும் அமைக்கப்பட்டது.

சிறுவர்களின் முதல் "கொயர்" கச்சேரி ஒமாஹாவில் நடந்தது. யாரும் ஓர் உண்மையான கச்சேரியை எதிர்பார்க்கவில்லை. சிறுவர்களின் உற்சாகத்தைப் பாராட்டத்தான் வந்திருந்தார்கள். ஆனால் கச்சேரி முதல்தரமாக அமைந்திருந்தது. தேசத்திலுள்ள மற்றெந்த கொயருக்கும் சளைத்ததாக இல்லை. 1945-ம் ஆண்டில் யுத்தம் முடியும்வரை சிறுவர்கள் பல சேனைக் கூடாரங்களிலும் யுத்த நிதிக் கூட்டங்களிலும் பாடினார்கள். 1946-ம் ஆண்டில் பிரயாணத் தடைகள் ரத்தான பிறகு பல இடங்களுக்குச் சென்று சிறுவர்கள் கச்சேரி செய்தார்கள். அமெரிக்கா முழுதும் சிறுவர் நகரின் கொயர் புகழ் அடைந்தது. கச்சேரிகளிலிருந்து அதிக லாபம் கிடைக்கவில்லையெனினும், கச்சேரிகளைக் கேட்டவர்கள் பலர் சிறுவர் நகருக்கு நன்கொடைகள் அனுப்பலாயினர்.

அத்தியாயம் 23

1927-ம் ஆண்டுக்குள் இரண்டாயிரம் இளைஞர்கள் சிறுவர் நகரில் வாழ்ந்து படித்துக்கரையேறினர்; சிலர் வர்த்தகர்களாயினர்; சிலர் மேல் படிப்புக்குச் சென்றனர். அவர்களில் சிலர் சிறுவயதில் குற்றவாளிகள் எனக் கருதப்பட்டாலும், பிற்காலத்தில் ஒரு முறை கூடச் சட்டவிரோதமான நடவடிக்கைகளில் ஈடுபட்டதில்லை.

சிறுவர் நகரும் அதன் நிர்வாகியான சங். பிளானகனும் தேசமெங்கும் பிரக்யாதி அடைந்தனர். பல பிரபலஸ்தர்கள்

சிறுவர் நகருக்கு விஜயம் செய்தார்கள். அயர்லந்து பிரெஸிடென்ட், ஈமன் டிவேலரா, சிறுவர் நகருக்கு வந்து சங். பிளானகனைப் பாராட்டினர்.

சிறுவர் நகரும் மேன்மேலும் வளர ஆரம்பித்தது. புதிய பாடங்களும் புதிய தொழில்களும் பள்ளிக்கூடங்களில் சொல்லிக் கொடுக்கப்பட்டன. பண்ணையில் விஞ்ஞான முறைப்படி விவசாயம் கற்றுக்கொடுக்கப்பட்டது. சங். பிளானகனும் தமது கார்ஷெட் அறைகளை விட்டுப் புதிய வீட்டிற்குக் குடிபோக வேண்டியதாயிற்று. கார்ஷெட்டில் எலி உபத்திரவம் தாங்கமுடியாமல் போகவே மதகுரு வேறு இடத்துக்குச் செல்ல வேண்டியதாயிற்று.

அவருடைய பழைய நண்பர்களில் சிலர் இப்போது உயிருடன் இல்லை. அவருடைய தகப்பனார் காலமானர். மதகுருவுக்கு ஊக்கமும் அனுமதியும் அளித்த அதிமேற்றிணியார் ஹார்ட்டியும் இறைவனது பாதத்தை அடைந்தார். சில காலம் சங். பிளானகனின் தாயார் அவருடன் சிறுவர் நகரில் தங்கியிருந்தார். ஆனல் அத்தனை சிறுவர்களுடன் இருந்து வாழ்வதில் அவ்வம்மையாருக்கு அதிக சிரமமாயிருந்ததால், பிறகு அவர் தமது பெண்ணுடன் காலம் கழிக்கலாயினர். பிளானகனின் சகோதரி நெல்லி விடுதியில் வந்திருந்தார்.

சங். பிளானகனுக்கு வயது ஆக ஆக, சிறுவர் நகரை நிர்வகிப்பதிலுள்ள சிரமம் வெளிப்பட ஆரம்பித்தது. அவர் மெலிந்து போனர்.

அத்தியாயம் 24

சிறுவயதில் அவருக்கு ஏற்பட்ட தொல்லைகள் ஞாபகத்துக்கு வரும்படி, டாக்டர்கள் அவருக்கு எச்சரிக்கை செய்யலாயினர். ஓய்வு அவசியம் என்று வற்புறுத்தினர். ஆனல் அவர் அந்த எச்சரிக்கைகளுக்குச் செவிசாய்க்கவில்லை.

சிறுவர் நகர் வளர்ந்துவருவதால், அதற்கு வேண்டிய அலுவல்களை மேற்பார்வையிடுவதில் முனைந்தார்.

சிறுவர் நகரின் சொத்து அந்நாளில் ஐந்து லட்சம் டாலர்கள் என மதிப்பிடப்பட்டது. மேலும் சிறுசிறு நன்கொடைகள் நாடுநெடுகிலுமிருந்து தவறுமல் வந்துகொண்டிருந்தன; இன்றும் அவ்வாறே வருகின்றன. இவையே சிறுவர்நகரின் முக்கிய ஆதரவாகும். ஆனால் சிறுவர்நகரின் நடவடிக்கைகளைப்பற்றி அவ்வப்போது ஜனங்களிடையே பிரசாரம்செய்யவில்லையென்ருல் நன்கொடைகள் தொடர்ந்துவரா என்பதை மதகுரு அறிவித்திருந்தார். ஆகவே அவ்வேலையில் அவர் ஈடுபட்டார். ஒவ்வொரு வருஷமும் நூற்றுக்கணக்கான கூட்டங்களில் பேசினர். பல்வேறு ஊர்களுக்குப் பிரயாணம்செய்தார். அதனுல் அவருடைய தேகநிலை இன்னும் க்ஷீணம் அடையலாயிற்று.

சிறுவர் நகரை நிர்வகிக்கும் பொறுப்பு இன்னும் அவர் ஒருவரிடமே இருந்தது. பல குமாஸ்தாக்களும் உத்தியோகஸ்தர்களும் இருந்தாலும், எல்லா விஷயங்களிலும் அவர் நேராகக் கவனம் செலுத்திவந்தார். ஒரு சிறுவனுக்குத் தேக அசௌக்கியமா? சங். பிளானகனே டாக்டரிடம் அவனை அழைத்துச் செல்வார். சொந்த தகப்பனைப்போல, அவன் குணமாகும்வரை கவலையில் ஆழ்ந்திருப்பார். மற்ருேர் இளைஞன் விடுதியைவிட்டு ஓடிவிட்டானு? சங். பிளானகனே நேரில்சென்று போலீஸாருடன் பேசி அவனை மறுபடியும் விடுதிக்கு அழைத்து வருவார்.

நிர்வாகப் பிரச்னைகளும் பெருகின. 1929-ம் ஆண்டுக்குள் சிறுவர்நகர் வளர்ந்த வேகத்தில் ஒரு கட்டடம் போதவில்லை யென்ற நிலைமை ஏற்பட்டது. ஐந்து புதிய கட்டடங்களைக் கட்ட மதகுரு திட்டம் வகுத்தார். செலவு இரண்டரை லட்சம் டாலர்கள் ஆகும் என்று மதிப்பிடப்பட்டது. மறுபடியும் நிதி சேகரிப்பதில் முனைந்தார் மதகுரு.

1929-ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில் புதிய கட்டடங்களுக்காக வேலை ஆரம்பமாயிற்று. ஒருமாதத்துக்குள் அமெரிக்காவின் பங்கு மார்க்கெட்டில் பெரிய நெருக்கடி உண்டாகி, பல்லாயிரக்கணக்கான ஜனங்கள் லட்சக்கணக்கில் பொருள் நஷ்டமடைந்தனர். சிறுவர் நகரின் புதிய கட்டிடத் திட்டத்தை நிறுத்திவைக்க வேண்டுமென்று பலர் கருதினர். ஆனால் சங். பிளானகன் பிடிவாதமாக முடியாது என்றார். எப்படியாவது திட்டத்தை முடித்துவிடுவதென்று தீர்மானித்தார். பொருளாதார மந்தத்தால் தேசமுழுதும் பாதிக்கப் பட்டிருந்த காலத்தில், சிறுவர் நகரக் கட்டடவேலை நடந்து வந்தது. எப்படியோ பணம் வந்துகொண்டிருந்தது.

1930-ம் ஆண்டின் இறுதிக்குள் கட்டடவேலை பூர்த்தியாயிற்று. திறப்பு விழா சங். பிளானகனின் வாழ்க்கையிலே ஒரு முக்கிய தினமாக இருந்தது. பல்வேறு துறைகளில் உன்னத நிலையை அடைந்திருந்த தலைவர்கள் வந்திருந்தார்கள். சங். பிளானகனின் சிறுவர் நகர் நெப்ராஸ்கா ராஜ்யத்தில் இருப்பதால் அந்த ராஜ்யமே இப்போது மேம்பாடு அடைந்திருந்ததென அதன் கவர்னர், ஆர்தர் ஜே. விவர் பேசினார். ஒமாஹா நகரத்தின் மேயர், ஒமாஹா மேற்றிராணியார் சங். ஜோசப் எப். ரம்மல், யூத மதகுரு பிரெடரிக்கான் முதலிய பல பிரபலஸ்தர்கள் விழாவில் கலந்துகொண்டனர்.

1931-ம் ஆண்டு வஸந்தகாலத்தில் சங். பிளானகன் மற்றொரு கௌரவம் பெற்றார். நகரத்தின் தலைவர்கள் ஆயிரம் பேர்களுக்குமேல் வந்திருந்த கூட்டத்தில் அமெரிக்கன் லீஜியன் அவருக்கு ஒமாஹாவின் முதல் பிரஜை என்ற பட்டத்தை வழங்கியது. சங். பிளானகனுடன் அவரது அன்னையும் உட்கார்ந்திருந்தார். அந்த அம்மையாருக்கு அப்போது வயது எண்பது. மகனுக்கு அளிக்கப்படும் கௌரவம் என்ன என்பதை அவர் உணரவில்லை. கரகோஷத்தைக் கண்டு

மருண்ட அவர், “அது என்ன, சங். எட்வர்ட்? இந்த கரகோஷம் உனக்காகவா?” என்று கேட்டார்.

“இல்லை அம்மா. அது நம்மிருவருக்கும்,” என்று பதில் சொன்னார் அவர் சிரித்துக்கொண்டே.

சங். பிளானகனுக்கிருந்த பாராட்டும கரகோஷமும் அவருடைய தாயாருக்கும் இருந்ததாக பத்திரிகைச் செய்திகள் கூறின. சங். பிளானகன் மெலிந்து இருந்ததாகவும், வைபவத்தின்போது பல முறை அவர் இருமினார் என்றும் அப்பத்திரிகைகள் தெரிவித்தன.

டாக்டர்கள் மேலும் அவருக்கு எச்சரிக்கை செய்து வந்தனர். அவர்களுடைய வாக்கு உண்மையாயிற்று. 1931-ம் ஆண்டில் ஒருநாள் அவர் உட்கார்ந்திருக்கும்போது மேஜை மீது சாய்ந்தார். கடைசியில் சமாளித்துக்கொண்டு எழுந்து தமது இருப்பிடத்துக்குச் சென்றார். தமது சகோதரி நெல்லியை நோக்கித் தமக்கு உடம்பு ஒன்றுமில்லையென்றும், சிறிது ஒய்வுதான் வேண்டுமென்றும் கூறினார் அவர். ஆனால் நெல்லி அவரைப் படுக்கையில் அமர்த்திவிட்டு, டாக்டரை அழைத்தார். அன்றிரவு பல டாக்டர்கள் சங். பிளானகனின் தேகநிலையைப் பற்றிக் கலந்தாலோசித்தனர். அவர்கள் கடைசியில் கூறியது பெரிய அதிர்ச்சியை உண்டாக்கிற்று. அவருடைய நுரையீரல்கள் பாதிக்கப்படலாமென்றும், அவர் குணமடையக் குறைந்தது ஆறுமாதம் ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டுமென்றும் அவர்கள் சொன்னார்கள்.

இந்த தடவை அதைப்பற்றி வாக்குவாதம் ஒன்றுமில்லை. அவருடைய உயிரே டாக்டர்களின் சொல்லைக் கேட்பதைப் பொறுத்திருந்தது. டென்வரில் அவர் ஓய்வு எடுத்துக் கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டது. அவருடைய தமையன், சங். பாட்ரிக் அவர் திரும்பிவரும்வரை சிறுவர் நகரைக் கவனித்துக் கொள்ள வேண்டுமென முடிவாயிற்று.

அவர் விடுதியை விட்டுச் செல்லும்போது சிறுவர்கள் அனைவரும் வாசலுக்குவந்து அவரை வழியனுப்பினார்கள்.

அத்தருணம் அவர் பிரிந்து செல்வதால் எவ்வளவு மனம் உடைந்திருந்தார் என்பதை அவர்கள் அறிந்திருக்கமுடியாது. ஆனால் நோய் அவருடைய மனோ உறுதியை அதிக நாட்கள் பாதிக்கவில்லை. சில மாதங்களுக்குள்ளாகவே ஆஸ்பத்திரியைவிட்டு வெளிக்கிளம்பினார். பன்னிரண்டு வயதுள்ள ஒரு சிறுவனை ஜெயிலுக்கு அனுப்பக்கூடாதென்று ஒரு சர்ச்சையில் முழு மனதுடன் ஈடுபட்டு அவர் வெற்றிபெற்றார்.

அத்தியாயம் 25

சிறுவர் நகரில் தபால் காரியாலயம் திறக்கப்பட்ட நாள் நகரின் சரித்திரத்திலேயே ஒரு முக்கியமான நாளாகும். பாட்ரிக் நார்ட்டன் தபாலதிகாரியாக நியமிக்கப்பட்டார். 1934-ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில், சிறுவர் நகரை ஒரு முனிசிபாலிட்டியாக அமெரிக்க சர்க்கார் அங்கீகரித்தது.

சிறுவர் விடுதி பிரத்தியேகமான நகரமாக விளங்க வேண்டுமென்பதே முதலிலிருந்து சங். பிளானகனின் கனவாய் இருந்துவந்தது. சிறுவர்களே ஜனநாயக முறையில் தேர்ந்தெடுத்த அதிகாரிகளாக அந்நகரைப் பரிபாலிக்க வேண்டுமென்று அவர் விரும்பினார். அதன் மூலமாகச் சிறுவர்களுக்குப் பிரஜைகளின் பொறுப்பை வலியுறுத்த முடியுமென்று அவர் நம்பினார்.

1926-ம் ஆண்டிலேயே ஓவர்லுக்கில் "ஜனநாயக சர்க்கார்" முயற்சி கையாளப்பட்டது. சிறுவர்களுக்குள் ஒரு மேயர், நகர அதிகாரிகள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். ஆனால் அப்போது தேர்தல் நடந்த சில நாட்களுக்குப் பிறகு சிறுவர்களுக்கு அத்திட்டத்தில் அக்கறை இல்லாமல் போய்விட்டது. அதற்குக் காரணம் சிறுவர் விடுதி அப்போது உண்மையிலேயே ஒரு நகராக விளங்காததுதான் என்பது மதகுருவின் அபிப்பிராயம். அதன் சர்க்கார் உண்மையானதாக இல்லாததால், சிறுவர்களுக்கு உற்சாகம் பிறக்கவில்லை.

அவர்கள் சிறுவயதிலேயே உண்மையான கோர்ட்டையும், சர்க்கார் நிர்வாகத்தையும் கண்டவர்கள். அவர்களுடைய மனம் பாசாங்கில் லயிக்கவில்லை.

விடுதி வளர்ந்து, புதிய வீடுகள் தோன்ற ஆரம்பித்த பிறகு, அது ஒரு நகரின் தோற்றத்தைப் பெற்றது. 1934-ம் ஆண்டில் தபால் காரியாலயத்தைத் திறந்தபிறகு, சங். பிளா னகன் மறுபடியும் சுயாட்சி முறையை ஏற்படுத்த முனைந் தார். 1935-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் சிறுவர் நகர் 275 பேர் கொண்ட கிராமமாக ரிஜிஸ்டர் செய்யப்பட்டது. இந்தத் தடவை பாசாங்கு ஒன்றுமில்லை. சிறுவர் நகர் அதிகார பூர்வமாக, சுய தபால்காரியாலயத்துடன், ஒரு நகராக அங் கீகரிக்கப்பட்டது.

உண்மையான நகரம் இருந்தால், அதற்கு உண்மை யான சர்க்காரும் நிர்வாகமும் தோன்றத் தானே வேண்டும்? ஒரு மேயர், ஒரு போலீஸ் கமிஷனர், ஒரு சுகாதார கமிஷனர் முதலியோரைத் தேர்ந்தெடுக்க தேர்தல் பிரசாரம் நடந்தது. இரண்டு கட்சிகள் தோன்றின. தேர்தலுக்கு நின்றவர்கள் பிரசாரம் செய்தார்கள். சிறுவர் நகருக்கு முதல் மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறுவன் டோனி வில்லோன். 1931ம் ஆண்டு விடுதியில் சேர்ந்தார். இன்று அவர் மெட்ரோ கோல்ட்வின் மேயர் என்ற பிலிம் கம்பெனியில் ஒரு முக்கிய பதவி வகித்து வருகிறார்.

சிறுவர் நகரின் விதிகளை மீறுகிறவர்களை மேயரும் கமிஷனர்களும் தண்டித்தார்கள். நெருக்கடியான கட்டங்கள் தோன்றினாலொழிய, சிறுவர் நகரில் ஏற்பட்ட தகராறுகளைச் சிறுவர்களின் கோர்ட்டே விசாரித்துத் தண்டித்து வந்தது. எக் குற்றத்துக்குமே தண்டனையாக யாரையும் அடிக்கக் கூடாதென்பது நகரின் விதி. தனது கடமைகளைக் கவனிக் கையில் எந்த நகர அதிகாரியும் மற்றொரு பையனை அடிக்கக் கூடாதென்று ஒவ்வோர் அதிகாரியும் பிரதிக்ஞை எடுத்துக் கொள்ளவேண்டும்.

அப்படியிருந்தும் சில சமயங்களில் சிறுவர்கள் குற்ற வாளிகளுக்கு அளித்த தண்டனைகள் கடுமையாயிருந்தன. அவற்றில் ஒன்று பிலிம் தண்டனை. குற்றவாளி நகரில் வாரத்துக்கு ஒரு முறை நடக்கும் படக்காட்சிக்குச் செல்லவேண்டும். ஆனால் காட்சிமுடியும்வரை திரைக்கு எதிர்ப்புறமாகப் பார்த்துக்கொண்டு அவன் நிற்கவேண்டும். அவன் இப்படி அப்படி திரும்பாமல் கவனித்துக்கொள்ளப் பக்கத்தில் அதிகாரிகள் நிற்பார்கள். நூற்றுக்கணக்கான சிறுவர்கள் நல்ல தமாஷ்காட்சி ஒன்றை ரஸித்து, ஆரவாரம் செய்யும்போது குற்றவாளி அக்காட்சியைக் காணமுடியாமல் தவிப்பது எவ்வளவு மன வேதனை உண்டுபண்ணும் என்பதை எளிதில் ஊகிக்கலாம்.

இம்மாதிரி தண்டனைகள் கடுமையானவையென்று சங். பிளானகன் குறுக்கிட்டார். அவற்றால் தமது மனம் துன்புறுகிறதென்றார் அவர். அதிக வேலை, நீண்ட நேரம் வாசிப்பது போன்றவையையே தண்டனைகளாக அளிக்க வேண்டுமென்று அவர் உத்தரவிட்டார்.

இன்றும் சிறுவர் நகரின் நிர்வாகம் சங். பிளானகனின் காலத்தில் இருந்ததைப்போல நடந்துவருகிறது. ஒமாஹாநகர சர்க்காரைப்போலவே, சிறுவர்நகரிலும் ஜனநாயக சர்க்கார் நடந்துவருகிறது. ஆறுமாதங்கள் உத்தியோகம் வகிக்கப் பதினேழு கமிஷனர்களும், நான்கு கௌன்ஸில் அங்கத்தினர்களும் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். நான்கு அங்கத்தினர்களில் ஒருவரைச் சிறுவர்கள் மேயராகத் தேர்ந்தெடுக்கிறார்கள்.

முனிசிபல் தேர்தல்களில் வோட்டுப் போடும் பிரஜைகள் எல்லோரும் சிறுவர்கள். உலகத்திலேயே அவர்கள் தான் வயதில் குறைந்தவர்கள். சிறுவர்நகரில்வசித்துத் தன்பெயரை எழுதப்படிக்கத்தெரிந்த எல்லாச் சிறுவர்களும் வோட்டர்கள். சிறுவர் நகருக்கு கத்தோலிக்க, பிராட்டஸ்டன்ட் மேயர்கள் இருந்திருக்கிறார்கள்; நீக்ரோக்களும் வெள்ளையர்களும் மேயர்களாகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்கள்.

சிறுவர் நகரில் ஒவ்வொரு வீட்டுக்கும் ஒரு கமிஷனர் உண்டு. தனது பிராந்தியத்தில் ஒழுங்கை நிலை நாட்டுவது அக்கமிஷனரின் பொறுப்பு. சிறுவர்கள் தங்கள் அலுவல்களை ஒழுங்காகச் செய்யும்படி கமிஷனர்கள் கவனித்துக் கொள்ள வேண்டும். கமிஷனர்களுடைய நடவடிக்கைகளை மேயரும் கௌன்ஸில் அங்கத்தினர்களும் மேற்பார்வையிடுவார்கள்.

கமிஷனர்கள் மற்றச் சிறுவர்களோடுசேர்ந்து வசிப்பதால், எந்த பையன்கள் சட்டத்தை மீறக்கூடியவர்கள் என்பது அவர்களுக்குத் தெரியும். ஜாக்கிரதையாக இருப்பார்கள். கமிஷனர்களும் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரிகளாகையால், மற்றச் சிறுவர்கள் அவர்களுக்குக் கீழ்ப்படிந்து நடப்பார்கள்.

விசாரணை கோர்ட்டுக்கு மேயர் தலைமை வகிப்பார். ஒரு சிறுவன் சிகரெட்டு குடித்தான் என்பது குற்றமாய் இருக்கும். அவன் குற்றத்தை மறுப்பான். மற்றொரு சிறுவன் தன்னிடம் ஒரு சிகரெட்டைக் கொடுத்ததாகவும அவன் அதை ஒரு நிமிஷம் கையில் வைத்திருந்ததாகவும் அவன் கூறலாம். அவன் தரப்பில் சாட்சியும் இருப்பதுண்டு. அதனால் நகர அதிகாரிகள் ஸ்தம்பித்து விடுவதில்லை. ஆனால் அதைப் பற்றி அவர்கள் தர்க்கித்துக் கொண்டிருப்பதில்லை. அதற்குப் பதிலாக, மேயர் குற்றவாளியைநோக்கிக் கேட்பார்.

"ஆமாம் அந்த பையன் உன்னிடம் சிகரெட்டைக் கொடுத்தபோது, நீ அதைக் குடிக்கவேண்டும் என்று உத்தேசித்திருந்தாய் அல்லவா?

"உத்தேசித்திருந்தேன்", என்று அவன் ஒப்புக் கொள்ளுவான்.

ஆகவே, அவன் சிகரெட்டைக் குடிக்கவில்லை யென்றாலும், குற்றம் செய்யும் உத்தேசம் அவனுக்கு இருந்தது. ஓய்வு நேரங்களில் தினம் ஒரு மணி நேரம் அவன் வேலை செய்ய வேண்டுமென்று மேயர் தீர்ப்புக் கூறுவார்.

இவ்வாறு குற்றங்களுக்குத் தக்கதண்டனை விதிக்கப்படும்.

அத்தியாயம் 26

சிறுவர் நகரில் விளையாட்டுக்கும் முக்கிய இடமுண்டு. கையில் பணமில்லாமல் சங். பிளானகன் பெரிய லட்சியத்துடன் விடுதியை ஆரம்பித்ததிலிருந்து விளையாட்டுப் பகுதியும் சிறிது சிறிதாக வளர்ந்து வந்தது. முதலில் விளையாட்டுக் கருவிகள் இல்லையெனினும், விடுதியை ஆரம்பித்த ஆறு ஏழு, ஆண்டுகளில் கருவிகள் கிடைத்தன. விளையாட்டுகளைக் கற்றுக்கொடுக்க உபாத்தியாயர்கள் நியமிக்கப்பட்டார்கள்.

சங். பிளானகனுக்கே விளையாட்டின்மீது பிரியம் அதிகம். விளையாட்டினால் தேகம் மட்டுமின்றி மனோநிலையும் விருத்தியடையும் என்ற நம்பிக்கை அவருக்கு இருந்தது. "ஜெயிக்கும் கட்சிதான் விளையாட்டினால் உற்சாகம் பெறுகிறது என்பதில்லை. நியாயமாக விளையாடும் கட்சியே அதனால் அதிக பலன் அடைகிறது", என்பார் அவர் சிறுவர்களிடம்.

சிறுவர் நகரில் விளையாட்டுக்காக ஒரு கலாசாலையில் கிடைக்கும் வசதிகளைச் செய்துவைத்தார். சிறுவர்களும் பலவித விளையாட்டுகளில் நல்ல பெயர் வாங்கி வருகிறார்கள்.

அத்தியாயம் 27

ஓவர்லுக் சிறுவர்கள் யுத்தத்தின்போது கடலிலும் நிலத்திலும் நடந்த போர்களில் பெற்ற கியாதியைப்போல் வேறு எதுவும் சங். பிளானகனுக்கு அவ்வளவு சந்தோஷம் அளிக்கவில்லை. பெரல் ஹார்பரில் ஜப்பானியர் குண்டு வீசிய செய்தி கேட்டவுடன் சிறுவர்கள் சேனையில் சேரத் துடித்தனர். ஒருவர் இருவர் அல்ல. நூற்றுக் கணக்கில் சிறுவர்கள் சங். பிளானகனிடம் முறையிட ஆரம்பித்தனர். சில மாதங்களுக்குள் நகரின் மேயரும் மற்றும் பலரும் சேனையில் சேர்ந்தனர். சங். பிளானகன் சீக்கிரமே நகரில் ராணுவப் பயிற்சி அளிக்கும் திட்டம் ஒன்றைத் தயாரித்தார்.

யுத்தம் முடிவதற்குள் சிறுவர் நகரிலிருந்து ஆயிரத்துக்கும் அதிகமான இளைஞர்கள் போரில் கலந்து கொண்டனர்.

அவர்களுடைய நிரச் செயல்களைப்பற்றி அறியும்போது மதகுருவின் கண்களில் நீர் பெருகும். சிறுவர் நகரில் ராணுவ அதிகாரிகள் சிறுவர்களுக்கு ராணுவப் பயிற்சி அளித்தனர். யுத்தத்துக்காக நிதி சேர்க்க சங். பிளானகன் சுற்றுப் பிரயாணம் செய்து பல கூட்டங்களில் பேசினார். நாற்பது லட்சம் டாலர்கள் நிதி சேர்க்க அவர் உதவினார்.

யுத்தம் ஒரு நாள் முடிந்தாக வேண்டும். ஆகவே அவர் யுத்தத்தின்போதே யுத்த பிற்காலத் திட்டங்கள் வகுக்க ஆரம்பித்தார். புதிய வீடுகள் கட்டவும் புதிய பள்ளிக்கூடங்கள் ஏற்படுத்தவும் யோசித்தார். இனி அவருக்கு அதிக வேலை இருக்கும் என்பதை அவர் உணர்ந்தார். யுத்த காலத்திலேயே குடும்பங்கள் பிரிந்து போவதைக்கண்டார். ஒழுக்கத்தின் தரம் குறைந்து, இளைஞர்களின் போக்கில் மாறுதல்கள் உண்டாவதை உணர்ந்தார்.

சிறுவர் நகருக்கு வரும் புதிய சிறுவர்கள் மூலம் யுத்தம் எவ்வாறு வாழ்க்கையைப்பாதித்திருந்தது என்பதை நிதரிசனமாய்க் கண்டார். ஒரு சிறுவனுடைய தகப்பன் சேனையிலிருந்தான். தாயோ வெளியே சுற்ற ஆரம்பித்தாள். பையனுக்கு வீட்டு வாழ்க்கை இல்லை. இன்னும் பல பெண்கள் யுத்த தொழிற்சாலைகளில் வேலை செய்துவந்தால் அவர்கள் அவர்களுடைய குழந்தைகளைக் கவனிப்பதில்லை. யுத்த தொழிற்சாலைகளில் வேலைசெய்வது தேசசேவைதான். ஆனால் சொந்தக் குழந்தைகளைக் கவனிக்காமல் விட்டுவிடுவது தேசசேவைக்கு அடுக்காது என்பதை அவர்கள் உணரவில்லை.

ஒருநாள் சிறுவர் நகருக்கு மூன்று பையன்கள் வந்தார்கள். அவர்கள் சிறுவர் நகரில் தங்கலாமா என்று கேட்டார்கள். ஒரு பையனின் கோட்டில் ஒரு துண்டுக் காகிதம் இருந்தது. அதில் அவர்களுடைய பாட்டி ஒரு குறிப்பு எழுதியிருந்தாள். அவள் குறிப்பிட்டிருந்ததாவது: சிறுவர்களின் தகப்பன் சேனையில் சேவை செய்து வந்தார். தாயோ புருஷன் இல்லாத சமயத்தில் விவாகரத்துச்செய்துகொண்டு

இன்னொருவரை மணம் செய்து கொண்டாள். அவள் தனது புதிய புருஷனோடு ஊர் ஊராகச் சென்று கொண்டிருந்தாள். சிறுவர்கள் அவர்களுடைய பாட்டியுடன் இருந்தார்கள். பாட்டியிடம் பணம் இல்லை. அவள் அவர்களை சங். பிளானகனிடம் அனுப்பினாள்.

மூத்தவர்கள் இருவரைச் சிறுவர் நகரில் நிறுத்திக் கொண்டு சங். பிளானகன் கடைசிச் சிறுவனை அநாதாஸ்ரமத்துக்கு அனுப்பி வைத்தார். அவர்களுடைய தகப்பனார் எங்கிருந்தார் என்று விசாரித்து அவருக்கு மதகுரு விஷயத்தைத் தெரிவித்தார். அதுவே அவர்களுடைய தகப்பனார் தமது குழந்தைகளைப் பற்றி அறிந்த முதல் செய்தி. அச் சிப்பாய் உடனே லீவு வாங்கிக்கொண்டு ஆப்பிரிக்காவிலிருந்து சிறுவர் நகருக்கு வந்தார்.

பல வருடங்களாக அச்சிறுவர்கள் தங்களுடைய பிதாவைக் கண்டதில்லை. அவர் எப்படி இருப்பார் என்பதை மறந்துவிட்ட அவர்கள் அவரைப்பற்றி எவ்வித அக்கறையும் காட்டவில்லை.

அவர்கள் சங். பிளானகனிடம் சொன்னார்கள்: "முதலில் எங்கள் தாய்; பிறகு எங்கள் தந்தை. எங்கள் தாயிடம் நாங்கள் பிரியமாய் இருந்தோம். அவள் எங்களை விட்டுவிட்டு ஓடிவிட்டாள். இப்போது எங்கள் தந்தையும் அப்படியே செய்யமாட்டார் என்பது என்ன நிச்சயம்?"

அச்சிப்பாய் தமது புத்திரர்களுடன் பேச முயன்றார். ஆனால் அவர்கள் உற்சாகம் காட்டவில்லை. ஆனால் அடிக்கடி அவருடைய சிப்பாய் உடையை அவர்கள் உற்றுப் பார்த்தார்கள். பிறகு அவர் தமது யுத்த அநுபவங்களைப் பற்றிப் பேச ஆரம்பித்தார். கடைசியில் தமது வீரத்துக்காக அளிக்கப்பட்ட ரிப்பன்களைக் கழற்றி அவர்களிடம் கொடுத்தார். அவர் திரும்பி ஆப்பிரிக்கா போகுமுன் சிறுவர்கள் சிறிது மனம் தளர்ந்தார்கள். தங்களுடைய தந்தை சேனையில் இருப்பதில் அவர்

கள் பெருமையடைந்தார்கள். மற்றச் சிறுவர்களிடமும் தங்களுடைய தந்தையின் வீரச்செயல்களைப் பாராட்டிப் பேசலானார்கள்.

யுத்தம் முடிந்தபின் அவர் திரும்பி அமெரிக்கா வந்து மறு விவாகம் செய்துகொண்டார். ஒரு சிறு பண்ணையை வாங்கி அங்கே தமது கடைசி மகனை அழைத்துச் சென்றார். மற்ற இரு குமாரர்கள் சிறுவர் நகரிலேயே இருந்தனர். அவர்கள் அங்கேயே இருக்க விரும்பினர். சங். பிளானகனும் அதற்குச் சம்மதித்தார். ஆனால் அவர் ரகசியமாகக் கூறிய யோசனையின்படி அவர்களுடைய தம்பி அடிக்கடி கடிதம் எழுதி வந்தான். அதில் பண்ணையில் வாழ்க்கை மிக நன்றாய் இருப்பதாகவும், பயிர்த் தொழிலிலும் ஆடுமாடுகளைக் கவனிப்பதிலும் தான் தனது தந்தைக்கு உதவிபுரிந்து வருவதாகவும் அவன் எழுதினான்.

கூடிய சிக்கிரமே இரு சிறுவர்களும் சங். பிளானகனிடம் யோசனை கேட்டார்கள். சங். பிளானகன் சொன்னார்: "உங்களுடைய தந்தை, மாற்றாந்தாய், தம்பி எல்லோரும் உங்களுடன் பட்சமாய் இருக்க விரும்புகிறார்கள் என்று நினைக்கிறேன். அன்பு ததும்பும் வீடு இருக்கும் சிறுவர்கள் கொடுத்து வைத்தவர்கள்."

அச்சிறுவர்களும் இப்போது அவர்களுடைய தந்தையுடன் இருக்கிறார்கள். அவர்களுடைய தாயைப் பற்றி அவர்களுக்கு ஒரு தகவலும் கிடைக்கவில்லை. பழைய துர்ப்பாக்கிய விஷயங்களைக் கொஞ்சம் கொஞ்சமாக அவர்கள் மறக்கலானார்கள்.

அச்சிறுவர்கள் விஷயத்தில் எல்லாம் இனிதாக முடிந்தது. ஆனால் யுத்தம் நடந்த பிரதேசங்களில் லட்சக்கணக்கான சிறுவர்கள் அத்தகைய அதிர்ஷ்டம் பெறாமல் தவித்து வருகிறார்கள் என்பதை மதகுரு உணர்ந்தார். அவர்களுடைய பிரச்னையை அவர் அடுத்தபடி கவனிக்கலானார்.

அத்தியாயம் 28

யுத்தத்திஞல் உலகம் எங்குமே அதிகமாகப்பாதிக்கப் பட்டவர்கள் சிறுவர்கள்தான். சங். பிளானகன் அநாதைக் குழந்தைகளைப் பராமரிப்பதே தமது பணியாகக் கொண்டிருந்தார். அது அப்போது உலகப் பிரச்னையாக மாறியது. டோக்கியோவிலிருந்த ஜெனரல் டக்லாப்மெக் ஆர்தரிடமிருந்து அவருக்கு ஒரு வேண்டுகோள்வந்தது. தூரக்கிழக்கு பிரதேசங்களில் வீடற்ற சிறுவர்களின் பிரச்னையைக் கவனிக்க மதகுருவின் உதவியை நாடினுர் ஜெனரல்.

சிறுவர் நகரில் தம்முடன் பல வருஷங்களாகத் துணை புரிந்து வந்தவர்களில் ஒருவரான பைரன் ரிட் அவர்களை சங். பிளானகன் உடன் அழைத்துச் சென்ருர். அவர்கள் விமானத்தில் ஹோனேலூலு, குவாம், மணிலா முதலிய நகரங்கள் வழியாக டோக்கியோவுக்குச் சென்ருர்கள்.

வழியில் குவாமில் சங். பிளானகன் சிறுவர் நகரிலிருந்த பதினைந்து இளைஞர்களைச் சந்தித்தபோது அளவில்லாத மகிழ்ச்சி அடைந்தார். கவர்னர் மாளிகையில் பெரியவிருந்து நடந்தது. அமெரிக்காவுக்குவெளியே சிறுவர் நகரில் வாழ்ந்தவர்களை அவர் சந்தித்தது அதுவே முதல்தடவை. அப் பதினைந்து பேர்களில் ஒருவர் மெக்ஸிகன். வெகு குள்ளமாக இருந்த அவருடைய பெயர் பெட்ரோ.

பெட்ரோ சிறுவர் நகரில் இருந்த நாட்களை சங். பிளானகன் ஞாபகப்படுத்திக் கொண்டார். அப்போது அவன் நல்ல சிறுவன்தான். ஒழுங்காகத் தனது கடமைகளைச் செய்வான். ஆனல் ஒரே ஒரு கெட்டகுணம். அவன் சிகரெட்டு குடிப் பான். எவ்வித தண்டனையையும் பொருட்படுத்துவதில்லை. அவன் நான்கு வயதிலிருந்து சிகரெட்டு குடித்துப்பழக்கமாம். சிறுவர் நகரில் அவன் பத்து வயதுச் சிறுவனுயிருந்தான். அதற்குள் அது விடமுடியாத பழக்கமாக முதிர்ந்துவிட்டது.

அவனுக்கு சிகரெட்டு கிடைக்காமல் செய்ய மதகுரு முயற்சி செய்தார். அதுவும் முடியவில்லை. சிறுவர் நகரைக்

காணப் பலர் வந்தார்கள். அவர்கள் குடித்துவிட்டுக் கீழே எறியும் துண்டுகளையெல்லாம் பெட்ரோ சேகரித்துக் கொள்ளுவான். பெட்ரோவின் பொருட்டு, நெருப்புப் பெட்டி யாரிடமும் இருக்கக்கூடாது என்று ஓர் உத்தரவு பிறப்பிக் கப்பட்டது. அதனால் பலருக்குக் கஷ்டம் ஏற்பட்டது. ஆனால் பெட்ரோ கவலையற்று சிகரெட்டு குடித்து வந்தான். இரண்டு நாட்களுக்குப் பிறகு சங். பிளானகனுக்கு விஷயம் புரிந்தது. பெட்ரோ கோயிலுக்குச் சென்று அங்கு எரிந்து வந்த மெழுகு வத்தியிலிருந்து சிகரெட்டு பற்றவைப்பதை மதகுரு கண்டார்.

நல்ல வேளையாக அவனை அவனுடைய உறவினர் சீக்கிரமே சிறுவர் நகரிலிருந்து அழைத்துச் சென்றனர். குவாமில் பெட்ரோ கடற்படை உடையில் விருந்துக்கு வந்திருந்தான். அவனைக் கண்டதும் சங். பிளானகன் பூரிப் படைந்தார்.

"பெட்ரோ, உன்னைக் கண்டதில் எனக்கு ரொம்ப சந்தோஷம், இந்தா என் கணக்கில் நீ ஒரு சிகரெட்டைக் குடி," என்றார் மதகுரு.

பெட்ரோ தலையை ஆட்டினார். "இல்லை, தந்தையே, நான் சிறுவர் நகரைவிட்டுப் போனபிறகு சிகரெட்டு குடிப்பதில்லை," என்றார். பொறுத்திருந்து கிடைத்தபலன் என்று பூரிப்படைந்தார் மதகுரு.

டோக்கியோவில் சங். பிளானகனுக்கு ஜெனரல் மெக் ஆர்தர் சகல வசதியும் அளித்தார். அவர் எங்கு வேண்டுமானாலும் சென்று, உள்ள நிலைமையைக் கவனித்து, அஞ்சாமல் அவருடைய அபிப்பிராயத்தைத் தெரிவிக்க வேண்டுமென்று மெக் ஆர்தர் மதகுருவைக் கேட்டுக்கொண்டார்.

ஜப்பானிலும், பிறகு கொரியாவிலும் அவர் கண்ட நிலைமை மதகுரு எதிர்பார்த்ததைவிட மோசமாக இருந்தது. ஜப்பானில் யுத்தத்துக்குமுன்பு குடும்பப்பற்று அதிகம். அக் காலத்தில் வீடற்ற சிறுவர் பிரச்னை இருந்ததில்லை. ஆனால்

இப்போது பத்தாயிரக் கணக்கில் சிறுவர்கள் வீடுவாசல் குடும்பம் இல்லாமல் தவித்தனர். அநாதாஸ்ரமங்களை நடத்தி வந்தவர்களுக்குச் சிறிதும் அநுபவம் இல்லை. ஓர் இடத்தில் சிறுவர்கள் தொழிற்சாலையில் ஒவ்வொரு நாளும் எட்டுமணி நேரம் வேலைசெய்வதை அவர் கண்டார். அவர்கள் ஸைக்கிள் விளக்குகள் செய்தனர். அவற்றை தொழிற்சாலை லாபத்துக்கு விற்றபோதிலும், பணம் அநாதாஸ்ரமத்துக்குப் போகவில்லை.

அநாதாஸ்ரமங்களில் விடுதிகள் சிறைகளைப் போல இருந்தனவேயன்றி வீடுகளைப்போல இல்லை. சிறுவர்களை யும் சரியாகக் கவனிப்பதில்லை. ஐந்து சிறுவர்களைத் தனித் தனியாக அறைகளில் அடைத்திருப்பதை அவர் ஓர் இடத் தில் கண்டார்.

“அவர்களை இம்மாதிரி நடத்த அவர்கள் என்ன குற்றம் செய்தார்கள்!” என்று அவர் கேட்டார்.

அங்கிருந்த அதிகாரி பதில் சொன்னார்: “அவர்கள் புதிய பையன்கள். அவர்களுக்கு இவ்விடம் பழக்கமாகும் வரை அப்படி வைத்திருப்பது அவசியம்.”

“அவர்களை உடனே விடுதலை செய்யவேண்டும்,” என்று மதகுரு கதறினார்.

பிறகு, அவர் அந்த ஆஸ்ரமத்தின் சிறுவர், நிர்வாகி கள் கூட்டத்தில் பேச ஆரம்பிக்குமுன் அந்த ஐந்து சிறுவர் கள் இருந்தார்களா என்று பார்த்தார். காணோம், அச்சிறுவர் கள் எங்கேயென்று கேட்டார். ஜப்பானிய அதிகாரிகள் சிரித்தார்கள். தலை பணிந்தார்கள். ஏதோ முணுமுணுத்தார் கள். மதகுரு விட்டுக் கொடுக்கவில்லை. அச்சிறுவர்களை விடுதலை செய்தாலொழிய தாம் பேச முடியாதென்று கூறி விட்டார். அதிகாரிகள் ஐந்து சிறுவர்களை அழைத்து வந்த போது கூட்டம் ஆரவாரம் செய்தது. சிறுவர்களுக்கு ஒரே ஆனந்தம்.

இம்மாதிரி, பல சூழல்களை மதகுரு தமது விஜயத்தின் போது போக்கினார். அதனால் நீடித்த பலன் கிடைக்கும்படி

அமெரிக்க அதிகாரிகள் பார்த்துக்கொண்டனர். கொரியாவில் நூற்றுக்கணக்கான இளைஞர்களுடன் பல பெண்களை ஒன்ருக ஒரே இடத்தில் வசிக்கும்படி விட்டிருப்பதை மதகுரு கண்டார். அவர் அதிகாரிகளைக் கண்டித்து உடனே பெண்களுக்குத் தனி இடத்தில் வசிக்க வசதி அளிக்குமாறு புத்தி மதி கூறினர். அதிகாரிகளுக்கு அவருடைய கோபத்தின் காரணம் புரியவில்லை யென்ருலும், பெண்களைத் தனி இடத்துக்கு அனுப்பினர்.

மதருகு எங்கு சென்ருலும் அமோகமான வரவேற்பு. ஆயிரக்கணக்கான சிறுவர்கள் ரயில் ஸ்டேஷன்களில் காத்திருந்து அயரைத் தரிசித்தனர். உள்ளூர் பத்திரிகைக்காரர்கள் அவரைப் பேட்டிகண்டனர். எல்லோரும் எல்லா குழந்தைகள்மீதும் அன்புவைத்து அவர்களைப் போஷிக்க வேண்டும் என்று அவர் அவர்களிடம் கூறினர்.

ஒரு பத்திரிகை நிருபர் கேட்டார்: "எனக்குத் தெரியாத ஒருவரின் மகனைப்பற்றி நான் கவலைப்படவேண்டுமென்று நீங்கள் கூறுகிறீர்கள்?"

மதகுரு ஆம் என்ருர். ஒவ்வொரு குழந்தையும் முக்கியமானதே. ஒவ்வொரு குழந்தையையும் பாரபட்சமின்றிப் பாதுகாக்கவேண்டும். அநாதைகள்மீது அன்பு செலுத்துவது சாதாரணமாக மக்களிடம் காணப்படும் குணமாகும். ஆனல் ஒரு ஜப்பானியன் தன் குழந்தையைத் தவிர மற்ற குழந்தைகளை அன்புடன் கவனிக்கமாட்டான் என்று அந்நிருபர் வாதாடினர். டோக்கியோவில் ஓர் உயர் குடும்பஸ்திரீ தனது வீட்டையே ஆஸ்ரமமாக மாற்றி அறுபது அநாதைக் குழந்தைகளை ரட்சித்து வருவதைப்பற்றி மதகுரு அந்நிருபரிடம் கூறினர். ஒஸாகாவிலும், குஷ்டரோகிகளுக்குப் பிறந்த சிறுவர்கள் இருபது பேர்களை ஒருமாது போஷித்துவந்தாள். "இதயத்தில் அன்பு இருப்பதால்தான் வீடற்ற சிறுவர்களைக் கவனிக்க அவர்கள் அவ்வளவு பிரயாசை எடுத்துக்கொள்ளுகிருர்கள்," என்ருர் மதகுரு.

ஜப்பானிய பத்திரிகைகளில் அதனால் ஒரு பெரிய சர்ச்சை தோன்றிற்று. அநாதைச் சிறுவர்களைக் கவனிக்க வேண்டியவைதைப்பற்றிப் பலர் கவலை கொண்டனர். அன்பின் பூர்ண அர்த்தத்தை ஆராய ஒரு வகுப்பும் டோக்கியோவில் அமைக்கப்பட்டது.

ஜப்பானில் கிறிஸ்துவ மதம் சங் பிளானகனின் விஜயத்தினால் நூறாண்டுகளின் முன்னேற்றம் பெற்றது என்று ஜப்பானிலிருந்த அதிமேற்றிராணியார் பால் மெரெல்லா கூறினார். சங். பிளானகன் அடுத்த ஆண்டில் ஐரோப்பாவில் உயிர்துறந்தார். அப்போது டோக்கியோவில் பொதுநல மந்திரியாயிருந்த மந்திரி கிச்சி டேக்கட்டா பின்வருமாறு கூறினார்:

“எங்களுடைய வருத்தத்தைத் தெரிவிக்கக்கூடிய வார்த்தைகளைக் காணாது நான் தவிக்கிறேன். சென்ற வருஷம்தான் சங். பிளானகன் எங்களுடன் ஜப்பானில் இருந்தார். அவர் பல சிறுவர் விடுதிகளுக்கு விஜயம்செய்து பல அரிய யோசனைகள் சொன்னார். அந்த யோசனைகளினால் இப்போது பலன் கிட்டிவருகிறது. அந்தச்செய்தியை அவர் கேட்குமுன் அவர் இறந்தது எங்களுக்கு அளவில்லா வருத்தத்தை அளிக்கிறது”

ஜப்பானில் சுற்றுப்பிரயாணம் முடிந்தபின், சங். பிளானகனை நோக்கி ஜெனரல் மக் ஆர்தர் சொன்னார்: “மற்றவர்கள் ஆயிரம்பேர்களிடம் பரிசயம் கொண்டால் நீங்கள் லட்சம்பேர்களின் அபிமானத்தைப் பெற்றீர்கள். இப்போது நாங்கள் என்ன செய்யவேண்டுமென்று சொல்லுங்கள்.”

ஒமாஹாவுக்குத் திரும்பியபின் சங். பிளானகன் தமது ரிப்போர்ட்டைத் தயாரித்தார். ஜப்பானிலும் கொரியாவிலும் உள்ள அநாதைச் சிறுவர்கள் எத்தனைபேர் என்பதை அவர் கணக்கெடுக்கச் சொன்னார். அவர்களுக்கெல்லாம் தங்க வசதி செய்யவேண்டும் என்றும், அவர்களை அன்புடன் வளர்க்கவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். எல்லாச்

சிறுவர்களுக்கும் மதபோதனை அளிக்கவேண்டும் என்ருர். பையன்களையும் பெண்களையும் தனித்தனி இடங்களில் வைத்திருக்கவேண்டும் என்று வற்புறுத்தினுர்.

அவருடைய யோசனைகளில் பல மேற்கொள்ளப்பட்டன. சீனுவில் ஷாங்ஹாய்க்கருகே ஒரு சிறுவர் நகர் ஸ்தாபிக்கப்பட்டது. அருள்நெறியில் ஈடுபட்ட ஒருவர் முயற்சியால் கீழ்நாடுகளில் உள்ள சிறுவர்களில் பலருக்கு நல்ல காலம் பிறந்தது.

அத்தியாயம் 29

சங். பிளானகன் பெர்லினில் நோய்வாயுற்று இறந்தார். அவர் காலமாவதற்கு ஒரு காரணமாயிருந்தது அவர் ஜெர்மனியில் கண்ட காட்சி. அங்கு சிறுவர்கள் படும் அவதியைக் கண்டு அவர் மனம் உடைந்துபோனுர்.

1948-ம் ஆண்டு குளிர்காலத்தில் அவருக்கு யுத்த இலாகாவிலிருந்து ஒரு வேண்டுகோள் வந்தது. ஜெர்மனியிலும் ஆஸ்டிரியாவிலும் இளைஞர்களின் வாழ்க்கை சிதறிப் போயிருந்ததால், அங்குள்ள நிலைமையை அவர் பரிசிலனை செய்யவேண்டுமென்று அவரைக் கேட்டுக் கொண்டார்கள். அமெரிக்காவை விட்டுப் பிரயாணம் செய்ய விருப்பமில்லையென்பதை அவர் அவருடைய நண்பர்களிடம் தெரிவித்தார். அவருக்கு அப்போது அறுபத்திரண்டாகையால் களைத்திருந்தார். எனினும் யுத்த இலாகாவின் வேண்டுகோளை அவர் புறக்கணிக்கவில்லை. எக் குழந்தைகளுக்காவது உதவி அவசியமென்ருல் அது தோல்வியுற்ற எதிரிகளின் குழந்தைகளுக்குத்தான் என்பதை அவர் உணர்ந்தார். ஆஸ்டிரியா மாறிவிட்டது என்பது அவருக்குத்தெரியும். அவர் மாணவனுக இன்ஸ்ப்ர்க்கில் இருந்தபோது பழகிய ஜனங்களுக்குப் பதில் நாஜிகளாக வளர்க்கப்பட்ட இளைஞர்கள்தான் இப்போது இருந்தனர் என்பதை அவர் அறிவார்.

சிறுவர் நகரை விட்டுப் புறப்பட்ட தினத்தன்று, சங். பிளானகன் மேல் வகுப்பு மாணவர்களை அழைத்திருந்தார். அவர்களுடைய பட்டமளிப்பு விழா நடப்பதற்குள் அவர் திரும்புவதற்கில்லையாதலால் அவர்களிடம் அவர் விடை பெற்றுக்கொண்டார்.

நீக்ரோ மேயரான எட்டிடன் அக் காட்சியைப் பின்வருமாறு விவரித்தார். நாங்கள் நாற்பத்தி ஏழுபேர் ஆலயத்தில் கூடினேம். சிறுவர் நகரில் எங்களுக்குப் போதிக்கப்பட்ட கிறிஸ்துவ நெறியை சங். பிளானகன் ஞாபகமூட்டினர். கடவுள் ஒழுக்கமும் தேச பக்தியும் கொண்ட நல்ல பிரஜைகளாக நாங்கள் விளங்குவோம் என்ற நம்பிக்கை தமக்கு இருப்பதாக அவர் கூறினர்.

"எட்டி, நான் வருகிறேன். கடவுள் உன்னைக் காப்பாற்றுவாராக," என்ருர் மதகுரு.

ஜெர்மன்-அமெரிக்கன் விடுதி காலத்திலிருந்து உடனிருந்து உழைத்த பாட்ரிக் நார்ட்டன் சங். பிளானகனுடன் சென்ருர். சூரிய அஸ்தமனமான சிறிது நேரத்துக்கெல்லாம், சிறுவர் நகரத்தின் தூபிகளையும், புதிய வீடுகளின் கூறைகளையும் பார்த்தவண்ணம் அவர் நகரை விட்டு அகன்ருர்.

அயர்லந்தின் கிராமத்தில் ஆரம்பமான வாழ்க்கைப் பிரயாணம் இடிந்து நாசமாய்க்கிடந்த பெர்லின் நகரத்தில் பூர்த்தியாயிற்று.

அன்று, அதாவது **1948–ம்** ஆண்டு மேமாதம் **14-ந்** தேதியன்று பல கூட்டங்கள், பேட்டிகள், ஆலோசனைகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. காலையில் அவர் விமானத்தில் பிராங்பர்ட்டிலிருந்து பெர்லினில் வந்து இறங்கினர். உடனே தமது அலுவல்களைக் கவனிக்கலானர். நாள் முழுவதும் ஜெர்மன் இளைஞர் சங்கங்களின் பிரதிநிதிகளுடன் பேசினர். ஜெர்மனியில் பல சிறுவர்கள் வாழும் துர்பாக்கிய நிலையை அவர் நன்கு உணர்ந்தார். அவர்களுடைய மனது நாஜிப்

பிரசாரத்தால் எவ்வளவு மாசு அடைந்திருந்தது என்பதைக் கண்டார். அதே போல அப்போது பொதுவுடைமை நஞ்சு அவர்களுடைய மனதைச் சிதைத்திருந்ததும் வெளிப்பட்டது. ஜனநாயக ஜெர்மனியை நிர்மாணிக்க வேண்டுமாயின் சிறுவர் உள்ளங்களை நல்வழியில் திருப்புவது மகத்தான காரியம். அவர் எங்கு திரும்பினாலும் அரைபட்டினியுடன் திரியும் அநாதைகளைத்தான் கண்டார்.

அவர் கார்டினல் வான் பிரீஸிங் அவர்களுடன் இவ் விஷயத்தைப்பற்றிப் பேசினார். அவருக்கு வாழ்நாள் பூரா வும் தளராத நம்பிக்கை இருந்ததெனினும், பெர்லின் நகரில் அவர் கண்ட காட்சி அவருடைய மனதை ஆட்டிவைத்து விட்டது என்று சங். பிளானகன் பிரீஸிங்கிடம் கூறினார்.

அன்று இரவு பாட்ரிக் நார்ட்டனுடனும் ஒரு சேனை காப்டனுடனும் போஜனம் அருந்தினார். பிறகு ஹோட்ட லுக்குச் சென்று நார்ட்டனும் சங். பிளானகனும் அடுத்த நாள் ஜெனரல் கிளே அவர்களைச் சந்தித்துப் பேசவேண்டிய விஷயங்களைப்பற்றி ஆலோசித்தார்கள்.

இரவு ஒன்பதரை மணிக்கு மதகுரு படுக்கைக்குச் சென் றார். நள்ளிரவின்போது அவர் விழித்துக்கொண்டு நார்ட் டனைக் கூப்பிட்டார். "பாட்ரிக், எனக்கு மார் வலிக்கிறது. உடனே டாக்டரைக் கூப்பிடுங்கள்". என்றார்.

டாக்டர் வந்து பரிசோதித்தார். இதயம் பாதிக்கப்பட் டிருந்தது என்றார். உடனே சங், பிளானகனை ஆஸ்பத்திரிக்கு எடுத்துச்செல்லும்படி கட்டளையிட்டார். சேனை மதகுருவா யிருந்த சங். எம்மட் வால்ஷையும் டாக்டர் அழைத்து வரச் சொன்னார். சங். வால்ஷ் சங். பிளானகனின் பாவ அறிக்கை யை கேட்கும்போது, பாட்ரிக் நார்ட்டனும், சார்ஜன்ட் பாட் ரிக் மோரியார்ட்டியும் அறைக்கு வெளியே காத்திருந்தனர்.

நார்ட்டன் சொன்னார்: "பிறகு எங்களை உள்ளே அழைத்தார்கள். இறுதி ஞானனுமானம் அளிக்கும்போது

நாங்கள் உடன் இருக்கவேண்டுமென்று சங். பிளானகன் விரும்பினர்.

"சங். வால்ஷ் பிரார்த்தனையைச் சொல்லிகொண்டிருக்கையில், சங். பிளானகன் வழக்கம்போலத் தமது புருவத்தைத் தடவிக்கொடுத்தார். பிரார்த்தனை முடிந்ததும், சங். பிளானகனே "ஆமென்" என்று சொல்லி பிரார்த்தனையை முடித்தார்.

"அதுவே அவருடைய கடைசி வார்த்தை"

மதகுரு கண்களை மூடினர். அக் கடைசி பிரார்த்தனை மூச்சுடன், உயிர் அவரை விட்டு அகன்றது.

சிருவர் நகரில் மேயர் எட்டிடன்னும் மற்றும் சில நண்பர்களும் ரேடியோ கேட்டுக்கொண்டிருந்தனர். திடீரென்று ரேடியோ அறிவிப்பாளர் சங். பிளானகனின் மரணத்தை அறிவித்தார். சிறுவர் நகரிலிருந்த அனைவரும் உடனே ஆலயத்துக்குச் சென்றனர்.

சில நாட்களுக்குப் பிறகு சிறுவர் நகரப்பிதாவின் சவம் விமானமூலம் சிறுவர் நகருக்கு வந்தது. சிறுவர் நகர ஆலயத்திலேயே, அது எப்போதும் சிறுவர்களுக்குச் சமீபத்தில் இருக்குமாறு, அடக்கம் செய்யப்பட்டது.


அதன்மீது ஒரு சலவைக்கல்லில் பின்வரும் குறிப்பு தங்கத்தில் பொறிக்கப்பட்டிருக்கிறது.

சங். பிளானகன்—சிறுவர் நகரின் பிதா

கிறிஸ்துவையும் மனிதனையும்

நேசித்தவர்

ஜுலை 13, 1886—மே 15, 1948.



மதகுரு பிளானகன்

''வசதியற்ற இக் குழந்தைகளுக்கு இல்லாமல் இருப்பவை உணவும், உடையும், வீடுந்தான் என்று எண்ண வேண்டாம்; தாயின் அன்பும் தந்தையின் அறிவுச் செல்வமும் குடும்பத்தின் நலமும் அவர்களுக்கு இல்லாமல் போய்விட்டன. இவர்கள் இத்தகைய சிறு பருவத்தில் இவ்வளவு பெரிய நஷ்டமடைந்ததற்கு ஈடு செய்யா விட்டால் நம்முடைய சீர்திருத்தப் பாடசாலைகளாலும் அநாதை விடுதிகளாலும் யாதொரு பயனுமில்லை''

—மதகுரு பிளானகன்.